# மாநில சுயாட்சி ஏன்?

எஸ்.ஜே.சாதிக் பாட்சா
B.A., B.L.,

# மாநில சுயாட்சி ஏன்?

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்
**எஸ். ஜே. சாதிக் பாட்சா**
*பி. ஏ., பி. எல்.*

—நன்கொடை நூல்—

**மல்லி பதிப்பகம்**
**சென்னை-14.**

# 1. சுயாட்சிச் சரித்திரம் !

மாநில சுயாட்சித் திட்டம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சிய முழக்கம! இந்தத் தத்துவம் புதிது அல்ல !

அனைத்து நாடுகளிலும் துவக்க காலத்தில் அரசாங்கத்தின் உள்ளுறுப்புகள் சுயாட்சியுடன் இயங்கியதைச் சரித்திர மாணவர்கள் நன்ருக உணர்வார்கள்.

கிரேக்கத்திலும், ரோமானிய நாட்டிலும் இருந்து வந்த நகரக் குடியரசுகள் சுயாட்சித் தன்மையோடுதான் விளங்கின.

பழந்தமிழகத்தில் கூட வாரியங்களும் ஆயங்களும் ஓரளவு சுயாட்சித் தன்மையோடு இயங்கின.

வரலாற்றில் பேரரசுகளும் ஏகாதிபத்தியங்களும் தோன்றத் தொடங்கிய காலத்திலிருந்து சுயாட்சித் தன்மை அழியத் தொடங்கியது.

இந்திய சரித்திரத்தைப் பொறுத்த வரை - ஆங்கில ஏகாதிபத்தியம் முளைவிடத் தொடங்கிய ஆரம்ப காலத்தில் கூட தங்களுடைய நேரடிப் பார்வையிலிருந்த ராஜதானிகள் (Provinces) தவிர மற்ற சமஸ்தானங்களில் (States) அந்தந்தப் பகுதிகளின் சுயாட்சியை ஓரளவு அனுமதித்தார்கள்.) ஆனல் ஏகாதிபத்திய எண்ணம் மேலிடத் தொடங்கியதும் சமஸ்தானங்களை விழுங்கத் தொடங்கி, சுயாட்சிகளை நிர்மூல

மாக்கி ஆங்கில ஆணைச்சக்கரத்தின் கீழ் அனைத்தையும் கொண்டு வந்தார்கள்.

இந்த நிலையில் தான் இந்திய சுதந்திரப் போர் மூண்டது. போர், வெற்றிக் கட்டத்தை அடைகின்ற நேரத்தில்- முகமது அலிஜின்னாவின் பாக்கிஸ்தான் பிரிவினை கோஷத்தையும் பரிசீலிக்க வேண்டிய அவசர - அவசிய கட்டத்திற்கு நாடு வந்து சேர்ந்தது.

இந்தியா பிரிக்கப்படக் கூடாது; ஆனால் அதே நேரத்தில் சுதந்திரமும் இட்ட வேண்டும். முஸ்லிம் மக்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற முப்பெரும் நோக்கங்களுடன் அந்தக் காலத்திலிருந்த தலைவர்கள் பலர் ஈடுபட்டார்கள்.

இந்திய நிலைமையை ஆராய சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் தலைமையில் ஒரு அமைச்சரவைக் குழுவை அனுப்புவதாகக் காமன்ஸ் சபையில் 1946 மார்ச் 15-ம் தேதி அறிவித்தார்- இங்கிலாந்தின் பிரதமரான அட்லி.

அமைச்சரவைக் குழுவும் மார்ச் 23-ம் தேதி இந்தியா வந்து சேர்ந்தது. அந்தக்குழுவிடம் பல்வேறு கருத்துகள் சொல்லப்பட்டன.

அப்போது அகில இந்தியக் காங்கிரசின் தலைவராக அபுல் கலாம் ஆசாத் இருந்தார். அவர் அந்த அமைச்சரவைக் குழுவிடம் என்ன சொல்ல வேண்டும் என நினைத்தார் என்பதை அவரே அழகாகக் குறிப்பிடுகிறார்.

"உலகம் முழுவதும், அதிகாரப்பரவல் முறை வேண்டும் என்ற எண்ணப் போக்கு இருந்துவருகிறது.

"இந்தியா போன்ற மிக விரிவான பரப்புள்ள நாட்டில், வேறுபட்ட மொழிகளும், பழக்க வழக்கங்களும் மாறுபட்ட பூகோளச் சூழ்நிலைகளும் உள்ள நாட்டில், ஓர் உறுப்பு (Unitary) அரசாங்கம் என்பது பொருத்தமற்றது....

"முடிவாக இந்திய அரசியலமைப்புச் சட்டம் இயற்கையாகவே, சமஷ்டி -கூட்டாட்சி (Federal) முறையிலமைய வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன்.

"மேலும், எவ்வளவு அதிகாரங்கள் மாநிலங்களுக்குக் கொடுக்க இயலுமோ அவ்வளவு அதிகாரங்களும் மாநிலத்திற்குத் தந்து - மாநிலங்களின் சுயாட்சியை உறுதிப் படுத்துகிற வகையில் அரசியலமைப்புச் சட்டம் அமைய வேண்டும்.

"தேசிய ஒற்றுமையுடன் மாநில சுயாட்சிக் கோரிக்கைகளைப் பின்னிப் பிணைத்திட வேண்டும்.

"மத்திய அரசு-மாநில அரசுகளுக்கிடையே அதிகாரங்களையும் - இயங்குதல்களையும் பங்கிடும் திருப்திகரமான தீர்வைக் கண்டுபிடிப்பதன் மூலம் இதனைச் செய்ய முடியும்.

"சில அதிகாரங்கள், முக்கியமாக மத்திய அரசுக்கு வேண்டும். சில அதிகாரங்கள், முக்கியமாக மாநில அரசுகளுக்கு வேண்டும். சில அதிகாரங்கள் மாநிலங்களுக்கோ, மத்திய அரசுக்கோ பரஸ்பர ஒப்புதல்களின் மூலம் விடப்பட வேண்டும்.

"முதல் நடவடிக்கையாக - ஒரு தீர்வு கண்டு அதன் மூலம் குறைந்த எண்ணிக்கையுள்ள அதிகாரங்கள் முக்கியமாக மத்திய அரசின் பொறுப்பில் விடப்படவேண்டும். இது மத்திய அரசாங்கத்திற்குக் கண்டிப்பாக உரியவை ஆக்கப்படும். மாநிலங்கள் விரும்பினால், மத்திய அரசு கவனிக்க வேண்டிய அதிகாரங்கள் என்று ஒரு பட்டியல், தயார் செய்ய வேண்டும். இதற்கு 'விருப்பப்பட்டியல் என்று பெயரிடப்பட வேண்டும்.

"பாதுகாப்பு, செய்தித் தொடர்பு, அன்னிய நாட்டு உறவு ஆகியவை முறையோடு அகில இந்திய அளவில்தான் கவனிக்கப்படவேண்டும் என்பது எனக்குத் தெளிவாகத் தெரிந்தது."

"All over the world, the tendency was for the decentralization of Power. In a country so vast as India and with people so diverse in language, customs and geographical conditions a unitary government was obviously most unsuitable...

Ultimately, I came to the conclusion that the constitution of India must, from the nature of the case, be federal.

Further it must be so framed as to ensure autonomy to the provinces in as many subjects as possible.

We have to reconcile the claims of the provincial autonomy with national Unity.

This could be done by finding a satisfactory formula for the distribution of powers and functions between the Central and provincial Governments.

Some powers and functions would be essentially Central, others essentially provincial and some which could be either, would be provincially or Centrally exercised by consent.

The first step to divise a formula by which a minimum number of subjects should be declared as essentially the responsibility of the Central Government. These must belong to the Union Government compulsory.

In addition, there should be a list of subjects which could be dealt with Centrally if the provinces so desired. This must be called optional list.

It was clear to me that Defence Communications and Forign Affairs were subjects which could be dealt with adequately only an all-India basis"...இந்தக் கருத்துக்களை

ஏப்ரல் 12ம் தேதி அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியில் அபுல் கலாம் ஆசாத் முதலில் சொன்னார்.

சர்தார் வல்லபாய் "மூன்று அதிகாரங்கள் மத்திய அரசுக்குப் போதுமா? நாணயம் - நிதித்துறை (Currency and Finance) போன்றவையும் மத்திய அரசுக்கு வேண்டுமே? வணிகமும் - தொழிற் துறையும் அகில இந்திய அளவில் வளர்ந்தால் தானே நன்றாக இருக்கும்?"—என்று கேட்டார்.

இந்தக் கேள்விகளுக்கு காந்தியாரே பதில் சொன்னார். நாணயம்—சுங்கவரி (currency and customs) போன்றவற்றில் மத்திய அரசாங்கத்தோடு மாநில அரசுகள் மாறுபட வேண்டிய அவசியமில்லை. இந்த விஷயங்களில் ஒரு முனைப் பட்ட கொள்கை இருப்பது என்பது மாநிலங்களின் நலனுக் குரியவை. ஆகவே அவற்றை மத்திய அரசின் அதிகாரப் பட்டியலில் சேர்க்க வேண்டிய அவசியமில்லை"—என்றார் காந்தியார்.

பின்னர், காங்கிரஸ் கட்சி இந்தத் திட்டத்தை ஏற்றுக் கொண்டது. இங்கிலாந்து அமைச்சரவைக் குழுவிடமும் தனது திட்டத்தைக் கூறியது.

மே 16ம் தேதி அமைச்சரவைக்குழு தனது திட்டத்தை வெளியிட்டது.

அதில்... பாதுகாப்பு, அன்னிய நாட்டு உறவு, செய்தித் தொடர்பு ஆகிய மூன்று அதிகாரங்கள் மத்திய அரசுக்கு என்று அறிவித்தது.

அமைச்சரவைக் குழுவின் திட்டங்களை முதலில் எதிர்த்த ஜின்னா - முஸ்லிம்லீக் கவுன்சில் கூட்டத்தில் அமைச்சரவைக் குழுவின் திட்டத்தை ஒப்புக் கொண்டார். முஸ்லிம் லீக்கும் ஒரு மனதாக ஒப்புதல் தீர்மானம் நிறைவேற்றியது.

இந்தச் சரித்திர நிகழ்ச்சியை இவ்வளவு விரிவாகச் சொல்வதற்குக் காரணம்—இன்று மாநில சுயாட்சி என்று

சொல்வதே பிரிவினை வாதம் எனக் கூக்குரலிடுவோர் புரிந்து கொள்வதற்காகத்தான்!

> பிரிவினைக்கு எதிரான மாற்றுத் தீர்வே—மாநில சுயாட்சியும்—மத்தியில் கூட்டாட்சியும் தான் என்பது சரித்திரம் சொல்லுகிற உண்மை!

ஆகவே, மாநில சுயாட்சி என்பதே பிரிவினைவாதம் என்பது சரித்திரம் புரியாதவர்களின் உளறல்!

காங்கிரஸ் கட்சியும் முஸ்லிம் லீக்கும் ஒப்புக் கொண்ட ஒரு திட்டம்—பிரிவினையைத் தடுத்து நிறுத்திய ஒரு திட்டம்—ஏன் செயல்படாமல் போயிற்று என்பதை சரித்திர மாணவர்களாகிய நாம் மறந்துவிடக் கூடாது; மறைத்துவிடக் கூடாது.

இந்த 'மாநில சுயாட்சித் திட்டம்' ஒப்புக் கொள்ளப்பட்ட அந்த நேரத்தில் காங்கிரஸ் தலைவராகப் பண்டித ஜவகர்லால் நேரு தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் என்ற முறையில் அவர் 1946 ஜூலை மாதம் 10-ம் தேதி பம்பாயில் பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டி தருகிறார்.

நிருபர் கேட்கிறார் : அமைச்சரவைக் குழுத் திட்டத்தை—அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி முழுவதுமாக ஒப்புக் கொள்கிறதா?

நேரு பதில் சொல்கிறார் : காங்கிரஸ் அரசியல் நிர்ணய சபைக்குள் சென்று அங்கு எழும் பிரச்சினைகளையும்—நிலைமைகளையும் சந்திக்கும்!

உடனே நிருபர் திருப்பிக் கேட்கிறார். அப்படியானால்—அமைச்சர் அவைக் குழுவின் திட்டம் மாற்றி அமைக்கப்படுமா?

நேரு திட்டவட்டமாக பதில் சொல்கிறார் : அரசியல் நிர்ணய சபையில் பங்கேற்கத்தான் காங்கிரஸ் ஒப்புக்

கொண்டுள்ளது. அமைச்சரவைக் குழுவின் திட்டத்தை மாற்றவோ—திருத்தவோ—எது நல்லதெனக் கருதுகிறதோ—அதைச் செய்யும் சுதந்திரம் காங்கிரசுக்கு உண்டு.

சாதாரண காலத்தில் இந்த அறிவிப்பு செய்யப்பட்டிருந்தால் யாரும் இதைக் கவனித்திருக்கமாட்டார்கள். ஆனால் மிகவும் பரபரப்பான நேரத்தில் பண்டித நேருவின் பத்திரிகைப் பேட்டி பயங்கரமாக உருவெடுத்தது.

"காங்கிரஸ் தான் அரசியல் நிர்ணய சபையில் பெரும்பான்மையாக வரும். அவர்கள் அமைச்சரவைக் குழுவின் திட்டத்தை மாற்றி அமைக்கலாம்" எனும் எண்ணம் வேகமாகப் பரவி, ஏற்கனவே பாக்கிஸ்தான் பிரிவினையைப் பேசி வந்த ஜின்னு இது தான் சமயம் என்று முஸ்லிம்லீக் கவுன்சிலை அவசரமாகக் கூட்டிட ஜூலை 27-ம் தேதி "அமைச்சரவைக் குழு திட்டத்தை நாங்கள் நிராகரிக்கிறோம். பாக்கிஸ்தானை அடைய நாங்கள் நேரடி நடவடிக்கையில் ஈடுபடுகிறோம்" என்று அறிவிக்கச் செய்தார். அதன் பின்னர் நடந்த சரித்திர நிகழ்ச்சிகளை நாம் அறிவோம்!

ஆயினும், இரு பாடங்களை இந்தச் சரித்திர நிகழ்ச்சிகளில் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒன்று—பிரிவினைக்கு எதிரான தீர்வாக மாநில சுயாட்சித் திட்டம் பிறந்தது.

இரண்டு—மாநில சுயாட்சித் திட்டம் எனும் தீர்வு இறக்கிறபோது பிரிவினை பிறப்பெடுத்தது.

ஆனால் அன்றைய நிலைமைக்கும்—இன்றைய நிலைமைக்கும் ஒரு வேறுபாடு இருக்கிறது. அன்று பாக்கிஸ்தான் பிரிவினை எனும் வெள்ளப் பெருக்கு இருந்தது. மாநில சுயாட்சித் திட்டம் என்ற அணை போட்டார்கள். சிறிது நாட்கள் அந்தப் பிரிவினை வெள்ளம் தடுக்கப்பட்டது. அந்த அணையை உடைத்த போது பிரிவினை வெள்ளம் பெருக்கெடுத்தது.

இன்றைய தினம் நிலைமை அப்படி அல்ல. மாநில சுயாட்சி கோரும் திராவிட முன்னேற்றக் கழகம் பிரிவினை இயக்கமுமல்ல; தமிழகத்தில் பிரிவினை வெள்ளமும் இல்லை.

இருப்பினும் ஏன் அணைகட்ட வேண்டும் என்கிறோம்? வெள்ளம் வருவதற்கு முன் அணையிட வேண்டும் என்பது ஒன்று. அணைகட்டி, வாய்க்கால் பிரித்து வயலுக்குப் பாய்ச்சிட வேண்டும் என்ற எண்ணம் இரண்டு.

அதாவது பிரிவினையைத் தடுக்க வேண்டும் என்பது மட்டுமல்ல; அதிகமான அதிகாரங்களைப் பெற்று மக்களுக்கு நன்மை புரிய வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் தான் மாநில சுயாட்சியை நாம் கோருகிறோம்.

# 2. இரண்டாம் தோற்றுவாய்

மாநில சுயாட்சி என்பது இந்திய சரித்திரத்தில்—அதுவும் குறிப்பாக இந்திய அரசியல் அரங்கில் மிகுந்த ஒளியுடன் இரண்டாவது முறையாகத் தோன்றியது 1967-ம் ஆண்டுகளுக்குப் பிற்பகுதியில் தான்.

திராவிட முன்னேற்றக் கழகம் துவக்க காலத்தில் திராவிட நாடு பிரிவினையைக் கோரி வந்தது. 1962 சீனப் படையெடுப்பிற்குப் பின்னர், நாட்டின் ஒற்றுமையைக் காப்பாற்ற வேண்டிய அவசியத்தை உணர்ந்து பிரிவினை எண்ணத்தை அடியோடு கைவிடுவதாகத் திராவிட முன்னேற்றக் கழகம் அறிவித்தது.

அதன் நிறுவனரும், வழிகாட்டியும், பொதுச் செயலாளருமான அண்ணா அவர்கள் ''நாடு முதலில்: கட்சி இரண்டாவது'' எனும் உன்னதமான கோட்பாட்டை அறிவித்தார்.

பிரிவினையைக் கைவிட்ட திராவிட முன்னேற்றக் கழகம், நாட்டின் ஒற்றுமைக்கு ஊறு விளைவிக்காததும்—அதே நேரத்தில் தான் இயங்கும் பகுதிகளின் உரிமைக்குரலை எடுத்துக் கூறத்தக்கதுமான ஒரு இலட்சியத்தைக் கைக்கொண்டது. அதுதான் மாநில சுயாட்சி.

மாநில சுயாட்சி என்பதே கூட திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதார அடிப்படைகளிலிருந்து எடுக்கப்பட்டது என்றே கூறலாம். பிரிவினை கேட்ட நேரத்தில் கூட திராவிட

முன்னேற்றக் கழகம், தமிழகம் தொழிற் துறையில் முன்னேற வேண்டும் ; தமிழகத்திற்கு அதிகமான அதிகாரங்கள் வேண்டும்—என்ற குரலைத்தான் ஆதாரசுருதியாக ஒலித்து வந்தது.

அத்தகைய ஆதார—அடிப்படையிலிருந்து தான் மாநில சுயாட்சியை தி. மு. கழகம் தனது இலட்சியமாக வரித்துக் கொண்டது.

அதிலும் குறிப்பாக—ஆட்சிபீடத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஏறிய பின்னர் 'மாநில சுயாட்சியை—மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரங்கள் வேண்டும் என்பதை அனுபவப் பூர்வமாக உணரத் தொடங்கியது.

ஆட்சிப்பீடத்திலிருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராகவும் முதலமைச்சராகவும் இருந்த அண்ணா அவர்கள் 1967 எப்ரல் 8-ம் நாள் புதுடில்லியில் பத்திரிகை யாளர்களுக்கு அளித்த பேட்டியில்...

''மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையே அவசியமான அதிகாரங்களைப் பங்கீடு செய்வதற்கு அரசியல் சட்டம் செயல்படுவதை ஆராய்வதற்காக உயர் அதிகார ஆணைக்குழு ஒன்றினை அமைக்க வேண்டும்.

''தற்போதுள்ள அரசியலமைப்புச் சட்டத்தின்படி மாநில அரசின் அதிகார வரம்புக்குள் வரும் அதிகாரங்களும் மத்திய அரசினால் மெதுவாக மேற்கொள்ளப்படுகின்றன.

''மாநிலங்களுக்குப் போதுமான அதிகாரங்களை வழங்கி விட்டு நாட்டின் ஒருமைப்பாட்டையும் ஒற்றுமையையும் பாது காப்பதற்குப் போதுமான அதிகாரத்தை மட்டும் தன்னகத்தே வைத்துக் கொண்டுள்ள ஒன்று தான் சீரிய மத்திய அரசு ஆகும்!'' என்றார்.

★ மாநிலங்களுக்குப் போதுமான அதிகாரங்கள் வழங்குதல்.

★ நாட்டின் ஒருமைப் பாட்டையும் ஒற்றுமையையும் பாதுகாப்பதற்குப் போதுமான அதிகாரங்கள் மத்திய அரசுக்கு இருந்தால் போதும்.

ஆகிய இரண்டு கருத்துக்களை அண்ணா அவர்கள் பதவி யேற்ற ஒரே மாதத்திற்குள் தெரிவித்தார் என்பதை இங்கு நினைவுகூரவேண்டும்.

1946-ஆம் ஆண்டில் வெளிப்பட்ட கருத்து 1967-இல் மீண்டும் வெளிப்பட்டிருக்கிறது; சரித்திரம் திரும்பியிருக் கிறது என்பதையும் நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

1967 ஜூன் 27-ந் தேதி தமிழக சட்டமன்றத்தில் பேசு கின்றபோது கூட அறிஞர் அண்ணா அவர்கள் இதே கருத்தை மீண்டும் வலியுறுத்துகிறார்:

“மத்திய—மாநில அரசுகளின் உறவுமுறை மிக்க நிலை யான அடிப்படையில் சீரமைக்கப்படவேண்டிய காலம் அவசரமாக வந்துள்ள நிலையை எவரும் குறைத்து மதிப்பிட முடியாது.”

—இதற்கு பத்து நாட்களுக்கு முன்பே அதாவது ஜூன் 17-ம் நாளன்று அதே தமிழக சட்டமன்றத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் கூறினார்:

“மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையேயுள்ள உறவுகளை திருப்திகரமான அடிப்படையில் ஏற்படுத்துவதற் கான அவசியம் உருவாகியுள்ளதை யாவரும் ஏற்பர் என்பதில் ஐயமில்லை.

“வருவாய்ப் பங்கீடு, அதிகாரப் பிரிவினை திட்டத்திற் கான நிதி ஒதுக்கீடு ஆகிய செயல்களில் இதுவரையில் ஏற்பட்ட அனுபவம் கசப்பை அளிப்பதாகவே இருந்து வந் துள்ளதை எவரும் மறுக்க முடியாது.

"இக் கசப்புணர்வைப் போக்கி மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையே பயன் தரத்தக்க உறவுகளை வளர்ப்பதற்கான வழிவகைகளை உருவாக்குவது அவசரத் தேவையாகிவிட்டது.

"நான் கூறியுள்ள சிக்கல் குறித்து எவரும் அச்சம் கொள்ளவோ தவருகப் பொருள் கொள்ளவோ தேவையில்லை. இது குறித்து சிந்தித்துப் பார்த்தல் இன்றியமையாததாகும். இணக்கமான நல்லெண்ணத்தின் மூலமும் உண்மை நிலையைப் புரிந்து கொள்வதன் மூலமும் நிலையானதும் நலன் தரத்தக்கது மான முடிவை நாம் காணவேண்டுமென்பதே என் வேட்கை யாகும்."

ஆகவே அறிஞர் அண்ணு அவர்கள் 1. அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் 2. ஒருமைப்பாடு காத்திடமட்டும் மத்திய அரசுக்கு அதிகாரம் இருந்தால் போதும். 3. மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரங்கள் தேவை—ஆகிய மூன்று கருத்துகளையும் இடைவிடாது வலியுறுத்தி வந்தார் என்பது புலனுகும்.

அறிஞர் அண்ணுவின் கருத்துகளுக்கு ஆதரவு தரும் வகையிலும், ஆதாரம் தரும் வகையிலும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து கருத்துகள் வந்து குவியத் தொடங்கின. சில கருத்துகள் காலத்தால் முன்னும்—பின்னுமாக இருப் பினும் அண்ணுவின் கருத்துக்கு அணி சேர்ப்பவை அவை.

"இந்தியாவில் இணைப்பாட்சி முறை" என்ற நூலில் மூன்ருவது நிதி ஆணைக்குழுத் தலைவரும், ஒய்வுபெற்ற இந் தியத் தலைமைத் தணிக்கை அதிகாரியுமான திரு. அசோக் சந்தா குறிப்பிடுகிருர்:

"மத்தியிலும் மாநிலங்களிலும் ஒரே கட்சியின் ஆட்சி இயங்கியதனுல் சட்டமியற்றுவதிலும் நிர்வாகப் பொறுப்பிலும் நாடாளுமன்றமே உச்ச அதிகாரம் கொண்டதாகக் கருதப்பட ஊக்கமளிக்கும் நிலை இருந்தது.

"அரசியலமைப்புச் சட்டத்தின்படி மாநிலங்களின் பொறுப்பாகவுள்ள சிக்கல்களைத் தீர்ப்பதிலும் முடிவு செய்வதிலும் தலைமை அமைச்சரும் பிற அமைச்சர்களும் மறைமுகமாகவும் சில வேளைகளில் நேரடியாகவும் நடவடிக்கை மேற்கொள்ளத் தயங்கவில்லை.

"இவ்வாறு மாநிலங்களுக்கு அளிக்கப்பட்ட குறைந்த அளவு ஆட்சி வரம்பும், பழக்கத்தில் சரணடையப்பட்டு வந்தது. பின்னர், ஒரு மாநிலம் அரசியலமைப்புச் சட்டத்தில் அதற்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தை வலியுறுத்தவோ—மீளப்பெறவோ முடியாத நிலைக்கு உட்பட்டு விடுகிறது.

"மத்திய அரசின் அமைச்சர்கள் காங்கிரசின் உயர்மட்ட அமைப்பில் உறுப்பினர்களாக இருப்பதால் அறிவுரை நல்க வேண்டியிருப்பதாகக் கூறப்படுகிறது; மாநிலங்களின் ஆதிபத்தியத்திற்கு இதனால் தலையீடோ பாதகமோ இல்லையென்றும் சொல்லப்படுகிறது.

"இந்தப் புரட்டு வாதத்தினால் யாரும் ஏமாற்றமடைய மாட்டார்கள்."

இந்த 'அசோக்சந்தாவின் கருத்து' மாநிலங்களின் மீது எப்படி மத்திய அரசு ஆதிக்கம் செலுத்துகிறது என்பதை தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கிறது.

மாநிலங்களின் ஆதிபத்தியத்தை நிலைகுலையச் செய்யும் மத்திய அரசின் ஆதிக்கத்தை அசோக் சந்தா கடுமையாகச் சாடுவது மட்டுமல்ல!

"மாநிலங்களின் விஷயத்தில் தலையிட மாட்டோம்; தலையிடுவதில்லை" என்ற கூற்றை புரட்டுவாதம் என்றே சாடுகிறார்.

இதற்கும் ஒருபடி மேலே சென்று தமிழக சட்டமன்ற மேலவையில் எதிர்க்கட்சித் துணைத் தலைவராயிருந்த வி.கே. ஜான். 7-5-1957-ம் நாளன்று பேசினார்:

"மாநில அரசுக்கும்—மத்திய அரசுக்குமிடையே காணப்படும் இந்த ஏற்றத்தாழ்வு ஒழிந்திட வேண்டும்...இந்திய அரசு மாநில அரசின் அதிகாரங்களில் குறுக்கிட வேண்டிய அவசியமில்லை. அதிகாரங்கள் பரவலாக்கப் படவேண்டும்."

இத்தகைய கருத்தைச் சொன்ன ஜான் அவர்களே 1957 ஜூலை 3ம் தேதியன்று மீண்டும் கூறுகிறார்:

"மத்திய அரசு தன் அதிகாரங்களை விரிவாக்கி வருகின்றது. மாநிலங்களின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டு—'ஒன்றுமில்லை' எனும் நிலை ஏற்பட்டுள்ளது.

"என் அடுத்த யோசனை, "மைய அரசின் அதிகாரங்களை வரையறைப்படுத்துங்கள்" என்பதே.

"இன்று நிலவும் சூழ்நிலையை நமது அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் எதிர்பார்க்கவில்லை என்று என் அனுபவத்தால் அறிந்துள்ளேன்.

"மத்திய அரசின் அதிகார வரம்பு வெளிநாட்டு உறவு—பாதுகாப்பு—போக்குவரத்து—செய்தித் தொடர்புகள் இவற்றுடன் நிற்குமாறு வரையறைப்படுத்துங்கள். சுங்கவரி வருவாய் மட்டும் அதன் பொறுப்பில் இருக்கட்டும். மைய அரசு தன் பொறுப்பிலுள்ள துறைகளை நிர்வகிப்பதற்காக மாநில அரசுகள் ஒவ்வொன்றும் தேவையானால் தத்தம் வருவாயிலிருந்து தமது பங்கிற்கு ஓர் ஐந்து கோடி ரூபாய் மத்திய அரசுக்கு அளிக்கட்டும்.

"மத்திய அரசின் அதிகாரம் இந்தத் துறைகளை நிர்வகிப்பதுடன் நின்று கொள்ளட்டும். இவற்றுக்கு அதிகமான எந்த அதிகாரத்தையும் செலுத்தக் கூடாது.

> "அதிகாரங்கள் பிரித்துக் கொடுக்கப்பட வேண்டும். மாநிலங்களுக்குத் தன்னாட்சி தரப்பட வேண்டும்!..."

பத்து வருடங்களுக்கு முன் ஜான் அவர்கள் பேசிய கருத்தை ஒட்டி 1967 ஜூன் 22ம் தேதி தமிழக சட்டமன்ற

மேலவையில் கே. பாலசுப்பிரமணிய ஐயர் ''மத்திய—மாநில அரசுகளின் உறவு முறைகளை ஆராய ஆணைக்குழு ஒன்றை குடியரசுத் தலைவர் நிறுவ வேண்டும்''—என்று கூறினர்.

1970 டிசம்பர் 31-ம் தேதியிட்ட காபிடல் இதழ் இணைப்பில் இது போன்ற கருத்தை பாபடோஷ்தத்தா என்பவர் ''மத்திய—மாநில நிதி உறவுகளை மறு ஆய்வு செய்வதன் அவசியம்'' என்று தலைப்பிலுள்ள கட்டுரையில் விளக்கியுள்ளார்.

இது போன்றே பல்வேறு பிரச்சினைகளில் உறவுமுறைகளின் சீர்கேடுகளை குறிப்பிட்டும்—அது சீர்திருந்த, எடுக்கப் படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ''மெயில்—''இந்து'' போன்ற ஏடுகளிலும் கட்டுரைகள் வந்தன.

இத்தகைய இணக்கமான கருத்துச் சூழ்நிலை இந்தியத் துணைக்கண்டமெங்கும் நிலவியது.

இந்தக் கருத்துகளுக்கு மாறுபட்ட உருவங்களும்—வடிவங்களும்—குரல்களும் இருந்தன. ஆயினும் இவை அனைத்தும் மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரங்கள் வேண்டும் என்ற அடிப்படையான குரலையே எதிரொலித்தன.

இவையனைத்தையும் ஒரு சொற்றொடரில் சொல்ல தி. மு. கழகம் நினைத்தது. அது தான் மாநில சுயாட்சி.

இந்த மாநில சுயாட்சிக்கு வலிவு ஏற்படுத்திய அரசியல் சூழ்நிலையை அடுத்த அத்தியாயத்தில் கவனிப்போம்.

# 3. மாறுபட்ட அரசியல் சூழ்நிலை

1967-க்கு முன் இந்திய அரசியல், தேக்கம் நிலைறந்ததாக ஜனநாயக ரீதியில் கருதப்பட்டு வந்தது. ஆட்சித் துறையிலும்—மத்திய அரசிலும் காங்கிரஸ் மாநில அரசுகளிலும் காங்கிரஸ் என்று இருந்து வந்தது.

ஆசியாவின் ஜோதி என்று அழைக்கப்பட்ட பண்டித ஜவஹர்லால் நேருவின் காந்த சக்தி, இத்துணைக் கண்டமெங்கும் பரவியிருந்த காங்கிரஸ் ஆட்சியை விட சக்தி வாய்ந்தது எனக் கருதப்பட்ட காலம் அது.

ஆகவே, மாநில—மத்திய அரசுகளின் மோதல் அதிகம் வராத காலம் என்று அதைக் குறிப்பிடலாம்.

மோதல் அதிகம் வரவில்லை என்றுதான் கூறமுடியுமே தவிர மோதலே வரவில்லை என்று கூறமுடியாது

அசாமில் நிபுணர் குழு சென்று எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் பருனியில் வைக்க வேண்டும்என்று கூறினர்கள். அசாம் மாநில அரசு அதை எதிர்த்தது. மாநில அரசுக்கு ஆதரவாக மக்கள் சத்தியாக்கிரகம் தொடங்கி வெற்றியும் பெற்றார்கள்.

அடுத்ததாக—நேரு இருந்த காலத்தில்தான் கேரளத்தில் காங்கிரசல்லாத கம்யூனிஸ்ட் அமைச்சரவை ஏற்பட்டது. அங்கு கல்வி மசோதா நிறைவேற்றப்பட்டது. அதற்கு ஒப்

புதல் அளிக்காமல் குடியரசுத் தலைவர்—சுப்ரீம் கோர்ட்டுக்கு கருத்தறிய அந்தக் கல்வி மசோதாவை அனுப்பினர். பின்னர் 'மக்கள் எழுச்சி'யைக் காட்டி சட்டசபையில் முழுப் பெரும் பான்மை பெற்றிருந்த கம்யூனிஸ்ட் அமைச்சரவையைக் கலைத்தார்கள் என்பதும் வரலாறு.

வங்காளத்தில் மொழிப் பிரச்சினைக்காக நடந்த கிளர்ச் சியும் மாநில அரசே அதை ஆதரித்த சரித்திரமும் நினைவு கொள்ளத்தக்கது.

"மத்திய அரசுக்கும்—மாநில அரசுகளுக்குமிடையே உள்ள உறவுகளில் எழக் கூடிய இடர்ப்பாடுகள்—இந்த நாடு முழுமையிலும் காங்கிரஸ் கட்சி மேலோங்கிய ஆட்சி நிலவிய போதும் இருந்து வந்துள்ளன என்பதை நினைவுகூர வேண்டும்" என்று 1967-ஏப்ரல் 23-ம் தேதி மெயில் ஏடு குறிப்பிட்டது.

1969-செப்டம்பர் 27-ம் தேதி 'மெயில்' இதழில் ஏ. என். சட்டநாதன் "மத்திய அரசின் அதிகாரம் எல்லா நேரங்களி லுமே காங்கிரஸ் அமைச்சரவைகளால் ஏற்றுக் கொள்ளப் படும் நிலை இருந்ததில்லை. அவர்கள் வினு எழுப்பியே வந் தனர்"—என்று குறிப்பிட்டார்.

அப்படியானுல், அந்தக் காலத்துக் காங்கிரஸ் மாநில அரசுகள் மத்திய அரசுடன் எப்போதும் மோதல் ஏற்படுத்தி வந்தனவா? என்ருல் அதுவும் இல்லை.

மோதல் வந்தன. "ஆனுல் மத்திய அரசிலும் மாநில அரசுகளிலும் காங்கிரஸ் கட்சியே ஆதிக்கத்திலிருந்தால் இந்தச் சிக்கல்கள் பெரும் தகராறுகளாக விரிவடையாது போயின" எனும் சி.வி.எச். ராவ் (26-1-69 இந்து இதழில்) எழுதிய கருத்தே சரியானது.

முன்னே குறிக்கப் பட்டுள்ளதுபோல் நேருவின் காந்த சக்தி இந்த மோதல்களைத் தணிய வைத்தன என்பதும் மறுக்க முடியாத உண்மை.

ஆனல், நேருவின் மறைவுக்குப் பின்னர், மாறுபட்ட சூழ்நிலை ஏற்படத் துவங்கியது.

அதற்கு ஏற்றாற்போல்—1967-ஆம் ஆண்டுத் தேர்தல்களில் தமிழ்நாடு, ஒரிசா, கேரளம், மேற்கு வங்கம், பீகார், உத்திரப் பிரதேசம், பஞ்சாப், அரியாணு போன்ற மாநிலங்களில் காங்கிரஸ் அல்லாத எதிர்க் கட்சிகளின் அரசுகள் தோன்றத் தொடங்கின.

மத்திய அரசில் ஒரு கட்சி—மாநில அரசுகளில் வேறு கட்சிகள் எனும் மாறுபட்ட அரசியல் உருவத்தை இந்தியத் துணைக் கண்டம் முதன் முதலாகச் சந்தித்தது.

"வருங்காலத்தில் இந்திய அரசியலில் மாநிலக் கட்சிகள் மிகச் செல்வாக்கோடு விளங்கும்" என்று ஜெயப்பிரகாஷ் நாராயணன் கூறியதற்கேற்ப ஒவ்வொரு மாநிலத்திலும் மாநில அளவில் பிடிப்புள்ள கட்சிகள் ஆட்சிக்கு வந்தன.

கேரளத்தில் மீண்டும் நம்பூதிரிபாட் ஆட்சிக்கு வந்தார். ஹரியாணுவில் (பொதுத் தேர்தலுக்கு ஒரு வாரம் கழித்து) ராவ் பீரேந்திர சிங் முதலமைச்சரானுர். வங்கத்தில் அஜய் முகர்ஜி தலைமையில் கூட்டு அமைச்சரவை அமைந்தது. உத்திரப் பிரதேசத்தில் 1967 ஏப்ரல் 3-ம் தேதி—சாண்சிங் 'சம்யுக்த விதாயக் தள்' என்ற கூட்டமைப்பின் முதல்வரானுர். அதே அமைப்பின் பெயரில் பீகாரிலும் மகா மாயா பிரசாத் சின்கா முதலமைச்சரானுர். ஒரிசாவில் சுதந்திரக் கட்சியின் சிங்தேவ் முதல்வரானுர். பஞ்சாபில் அகாலியர் ஆட்சி பீடமேறினுர்கள். இப்படி ஒரு மாறுபட்ட அரசியல் உருவம் இந்தியாவிற்குக் கிடைத்தது.

இப்படி அரசியல் சூழ்நிலையில் வளர்ந்த மாற்றம் பற்றி, சி.பி. பாம்பரி (Bhambari) என்பவர் 'இந்தியாவில் மத்திய—மாநில உறவுகள்'—எனும் நூலில் எழுதினுர்

"மத்திய அரசின் புதிய பொறுப்பு என்னவென்று சுருங்கக் கூறினல், நேரு சகாப்தத்திலிருந்து வேறுபட்ட புதிய நடை

முறையுள்ள மத்திய—மாநில உறவுகள் நாட்டில் வளர்ச்சி யடையத்தான் போகின்றன.''

"The Central government's new role simply means that a new style of Centre—State relations will develop in the country, different from that of Nehru Era"

இப்படியொரு நம்பிக்கை அரசியல் வானில் எழத் தொடங்கியது.

இந்தக் கட்டத்தில் நாம் ஒரு உண்மையை ஒப்புக் கொண்டாக வேண்டும்.

இந்தியத் துணைக் கண்டத்து மாநிலங்களில் எழுந்த காங்கிரஸ் அல்லாத அரசுகள் தமிழகத்து அரசைப்போல் நின்று நிலைத்திருக்குமென்றால் இந்நேரம் இந்தியாவின் மாநிலங்கள் மாநில சுயாட்சியை முழுமையாகப் பெற்றிருக்கும்.

ஆனால், மற்ற மாநிலங்களில் தோன்றிய காங்கிரஸ் அல்லாத அரசுகள் குறைப் பிரசவமாகப் போய்விட்டன.

அதற்குக் காரணங்கள் உண்டு. வட மாநிலங்களில் தோன்றிய அரசுகள் தமிழகத்து தி.மு கழக அரசைப் போல் காங்கிரஸ் எதிர்ப்பு (Anti—Congress) உணர்வை வளர்த்துத் தங்கள் அரசியல் செல்வாக்கை நிலைநாட்டிக் கொள்ளவில்லை

மகாமாயா பிரசாத் சின்காவும், சரண்சிங்கும் பிறரும் காங்கிரசில் இருந்தவர்கள்—சில நாட்களுக்கு முன்வரை!

திடீரெனக் கட்சி மாறி அல்லது கட்சி அமைத்து (Non-Congress) ஆக மாறியவர்கள்.

கட்சி தாவியவர்களை அடிப்படையாக வைத்து அரசு அமைத்த காரணத்தால் அந்த அரசுகள் விரைவில் கலைந்தன.

மற்ற பிற கூட்டணிகளில் பிளவு ஏற்பட்டு அந்த அரசுகள் கவிழ்ந்தன. வங்கத்தில் மத்திய அரசின் தலையீட்டால் அரசு கவிழ்ந்தது.

இந்தக் காரணம் தவிர, இன்னொரு காரணம், தமிழகத்து முதல்வர் அண்ணா அவர்களைப் போல் அந்த அரசின் தலைவர்கள்-தங்களுடைய குறுகிய காலத்திலாவது 'மாநில சுயாட்சி'யைப் பற்றி வலியுறுத்தியிருக்கலாம். அதை முழுமையாகச் செய்யவில்லை.

இந்த இரண்டு காரணங்களால் விரைவில் கிடைக்க விருந்த மாநிலசுயாட்சி கை தவறிப் போயிற்று என்பது சரித்திர உண்மை.

இருப்பினும், கவிழ்ந்த அரசுகள் தவிர - மீதியிருந்த அரசுகள் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தேவை என்பதில் ஒருமித்த கருத்தே கொண்டிருந்தன.

அரசியல் நிலைத்தன்மை கொண்ட கட்சிகளும், பழைய அரசியல் அனுபவம் பெற்ற கட்சிகளும் இந்தக் கருத்தை வலியுறுத்தத் தொடங்கியுள்ளன.

அண்மையில் அலகாபாத் சென்றிருந்த தமிழக முதல்வர் -டாக்டர் கலைஞர் அவர்களின் மாநில சுயாட்சி விளக்கத்தை ஏற்று அந்த உத்திரப்பிரதேச மாநிலத்தில் முன்னாளில் அமைச்சராய் இருந்தவர்கள் உட்பட பலரும் சேர்ந்து உத்திரப் பிரதேசத்தில் ஒரு தி. மு. கழகத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சிச் செய்தியை நாம் பெற்றுக் கொண்டிருக்கிறோம்.

அசோக் மேத்தாவிலிருந்து அச்சுத மேனன் மற்றும் வீரேந்திரப்பட்டீல்.ஜார்ஜ் பெர்னான்ட்ஸ் வரை பலரும் இந்தக் கருத்தை ஆதரித்து வருகிறார்கள்.

வீரேந்திரபட்டீல் தமது மாநிலக் காங்கிரசின் தேர்தல் அறிக்கையில் (For greater State autonomy) விரிவடைந்த மாநில சுயாட்சிக்காக தமது கட்சி பாடுபடும் என்று கூறினார்.

அவர்தான் தமது டெல்லிப்பயணத்தின் போது 1970-ஆம் ஆண்டு "நிலைமை இப்படியே போய்க்கொண்டிருந்தால்

மாநிலங்களின் உரிமை புறக்கணிக்கப்படுமானல் டில்லியிலே இருக்கிற மாநிலங்களுக்குச் சொந்தமான மாளிகைகள்-கட்டிடங்கள் மிக விரைவில் தூதுவர் ஆலயங்களாக மாறக் கூடும்' என்று கடுமையாக எச்சரித்தார்.

அண்மையில் அசோக் மேத்தா (ஒரு காலத்தில் திருமதி இந்திரா காந்தியின் நம்பிக்கைக்கு உரியவராக இருந்தவர்) மாநிலசுயாட்சியின் முக்கியத்துவத்தை விளக்கியுள்ளார்.

''திருமதி இந்திரா காந்தி அவர்களுடைய ஆட்சியில் முதலமைச்சர்கள் அலுவலகப் பையன்கள் (Office boys) நிலைக்குத் தாழ்த்தப்படுகிறுர்கள்.

''மாநிலங்களில் மத்திய அரசின் தலையீடுகள் அதிகம். மாநிலங்கள் தங்களுடைய தனித்தன்மையை இழந்து விட்டன.

''திராவிட முன்னேற்றக் கழகம் கூறிவருவது போல் கல்வித்துறைப் பிரச்சினைகளை மாநிலங்களுக்கே விட்டுவிட வேண்டும். மத்திய அரசு சிறிய அளவில் ஒரு கல்வி ஆராய்ச்சித் துறையை மட்டுமே வைத்துக் கொள்ள வேண்டும்.

''நாம் மிகக் கனமான உச்சியைப் பெற்றிருக்கிறோம். அடித்தளம் உடைந்து போய்க் கொண்டிருக்கிறது.''

இப்படி அசோக்மேத்தா மத்திய அரசில் குவிந்துள்ள அதிகார பளுவைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

இவ்விதம் கருத்துகள் வலிவு சேர்க்கும் முறையில் வந்து கொண்டிருக்கும் போது இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியார் மாநில சுயாட்சிக்கு இந்திய அரசியலில் ஒரு அபரிமிதமான செல்வாக்கை ஏற்படுத்தியிருக்கிறுர்.

1973 செப்டம்பரில் தமிழகத்திலுள்ள காரைக்குடிக்கு வந்த பிரதமர் இந்திரா காந்தியார் முதன் முறையாக ' மாநில சுயாட்சிக் கோரிக்கை'' பற்றிப் பேசினுர்.

அதன்பிறகு அந்தப் பேச்சைப் பற்றிய விளக்கங்களை அளித்தார். இதன் மூலம் இந்திய அரசியலில் மாநில சுயாட்சிப் பிரச்சினை விவாதத்திற்குரியதாக வந்துவிட்டது.

இந்தியப் பிரதமரிலிருந்து சாதாரணக் கட்சித் தொண்டர் வரை அதைப்பற்றி விமர்சிக்கும் ஒரு அற்புதமான அரசியல் சூழ்நிலை தோன்றத் துவங்கிவிட்டது.

1967-ஆம் ஆண்டிலும் அதற்குப் பிறகும் தோன்றிய அரசியல் சூழ்நிலை கைதவறிப் போனாலும் அதை விட உயர் தரமான - மாறுபட்ட அரசியல் சூழ்நிலை மாநில சுயாட்சிப் பிரச்சினைக்குக் கிடைத்துள்ளது. இந்த வாய்ப்பைப் பயன் படுத்திக் கொள்வது நமது நீங்காக் கடமையாகும்.

# 4. சுயாட்சியும் கூட்டாட்சியும்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் இல்லாத ஒரு கோரிக்கையை-மாநில சுயாட்சிக் கோரிக்கையை நாம் வைக்கிறோம் என்று பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மாநில சுயாட்சி என்பது கூட்டாட்சியின் ஒரு அங்கம். நாணயத்தின் இரு பக்கங்களைப் போல் சுயாட்சியும், கூட்டாட்சியும் இருக்கின்றன.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் கூட்டாட்சிக்கோ மாநில சுயாட்சிக்கோ துளியும் இடம் தராதசட்டம் அல்ல! ஆனால் அதே நேரத்தில் முழுமையான கூட்டாட்சி தத்துவத்தையும் கொண்டதல்ல. அப்படியானால் இந்திய அரசியல் சட்டம் எப்படி இருக்கிறது?

1950-ஆம் ஆண்டு சனவரி 26-ம் நாளன்று செயற் படுத்தப்பட்ட இந்திய அரசியலமைப்புச் சட்டம் இந்த நாட்டுக்குக் கொண்டு வந்த அரசியலமைப்பு முறை விசித்ர மானது.

''இண்டியன் யூனியன்''-என்று தான் இந்த அமைப்பு முறை அரசியலமைப்புச் சட்டத்தால் அழைக்கப்படுகிறது.

''பெடரேஷன்–இணைப்பாட்சி'' என்ற சொல் பயன்படுத்த படவில்லை.

ஆனால், சட்டத்தில் "ஒன்றியம்" "யூனியன்" என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருந்தாலும்-நமது அரசியல் முறை கூட்டாட்சி முறையில் தான் இருக்கிறது என்று அரசியல் சட்டத்தை இயற்றியவர்களில் முதன்மையானவராகத் திகழ்ந்த டாக்டர். பி. ஆர். அம்பேத்கார் அரசியல் நிர்ணய சபையில் கூறினார்.

"வரைவு அரசியலமைப்புச் சட்டத்தில் *1*-வது உறுப்பில் இந்தியாவை மாநிலங்களின் ஒன்றியம் என்று விவரித்திருப்பதைச் சிலர் எதிர்த்தனர். மாநிலங்களின் இணைப்பாட்சி என்பதே சரியான சொற்றொடராகும் என்றும் இங்கே கூறப் பட்டது.

"ஒற்றையாட்சி மாநிலமான தென் ஆப்ரிக்கா ஒன்றியம் என்று அழைக்கப்படுவது உண்மையே.

"ஆனால் இணைப்பாட்சியாகிய கனடாவும் ஒன்றியம் என்று அழைக்கப்படுகிறது.

"எனவே இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டம் இணைப்பாட்சி முறையாயினும் இந்தியாவை ஒன்றியம் என்று விவரிப்பது நடைமுறைக்கு முரண்பட்டதாக இல்லை"

அடுத்து, மாநிலங்களின் உரிமைகளைப் பற்றியும், அதன் தனித்தன்மைகளைப் பற்றியும் உறுதியான சொற்களால் அம்பேத்கார் பேசினார்.

"மத்தியில் யூனியனும் அதைச் சுற்றி மாநிலங்களும் அரசியலமைப்புச் சட்டத்தால் வரையறுத்து அளிக்கப்பட்ட தங்களுக்குரிய எல்லையில் ஆட்சி புரிய, அரசியல் அமைப்புச் சட்டம் இரட்டை ஆட்சி முறையை ஏற்படுத்துகிறது.

"யூனியன் என்பது நெருக்கமில்லாத உறவுகளால் இணைக்கப்பட்ட மாநிலங்களின் அங்கம் அல்ல.

"யூனியனிடமிருந்து அதிகாரங்களைப் பெறும் ஏஜெண்டு களுமல்ல-மாநிலங்கள்."

"யூனியனும் மாநிலங்களும் அரசியல் அமைப்புச் சட்டத்தால் உருவாக்கப்பட்டவை. இரண்டும் தங்களுடைய அதிகாரங்களை அச்சட்டத்திலிருந்து பெறுகின்றன. ஆனால் ஒன்றின் அதிகாரத்திற்கு மற்றது கீழ்ப்படிய வேண்டியதில்லை. அவைகள் இணைந்து இயங்கி வேண்டியவைகள்."

"It establishes a dual polity with the Union at the Centre and the states at the periphery each endowed with sovereign power to be exercised in the field assigned to them respectively by the constitution.

"The Union is not a league of states, united in a loose relationship, nor or the states the agencies of the Union, deriving power from it.

"Both the Union and the states are created by the Constitution, both derive their respective authority from the Constitution, The one is not subordinate to the other in its own field, the authority of one is co-ordinate with that of the other"

இவ்விதம் கூறிய அம்பேத்காரின் வாசகத்திற்கு மணிமுடி வைப்பது போல் பண்டித நேரு அதே அரசியல் நிர்ணய சபையில் 1947 சனவரி 22-ம் தேதி கூறினார்.

"சுதந்திர இந்தியாவில் அமைந்திடும் மாநிலங்களும் பிற ஆட்சிப் பகுதிகளும் சுயாட்சி (Autonomy) உரிமை பெற்று மாநிலங்களுக்கும்-மத்திய அரசுக்கும் எனக் குறிப்பிட்ட அதிகாரங்கள் நீங்கலான எஞ்சிய அதிகாரங்களுடன் அமைந்து செயல்படும்"

இவர்கள் இவ்வாறு உறுதியளித்த போதிலும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை ஆராய்ந்த வெளிநாட்டு சட்ட அறிஞர்கள் மாறுபட்ட கருத்துகளைக் கூறவே செய்தார்கள்.

பேராசிரியர் வீயர் "ஓரளவு இணைப்பாட்சி உள்ளது" என்றார்.

சர் ஐவர் ஜென்னிங்ஸ் "மத்திய அரசிடம் அதிகாரக் குவியல் என்னும் போக்கு நிறைந்த இணைப்பாட்சி" என்று கூறியுள்ளார்.

இரான்வில் ஆஸ்டின் என்பவர் "கூட்டுறவு இணைப் பாட்சி" என்று கூறியுள்ளார்.

இந்த அறிஞர்கள் தெளிவாக "இணைப்பாட்சிதான் இது" என்று சொல்லாததிலிருந்து ஏதோ ஒரு இடையூறு இந்த அரசியலமைப்புச் சட்டத்தில் மாநிலங்களுக்கு எதிராக இருக்கிறது என்பதை உணரலாம். அது என்ன ?

மாநிலங்களின் அதிகாரங்களிலும், செயல்முறைகளிலும் தலையிடும் போக்கும், தடுத்து நிறுத்தும் போக்கும் அரசியல் சட்ட ரீதியாகவே மத்திய அரசுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை உணரலாம். அந்த அதிகாரங்கள் எவை ?

1. மாநிலங்களுக்குக் கட்டளை பிறப்பிக்கும் அதிகாரங்கள். கீழ்ப்படியாவிட்டால் கடுமையான தண்டனை தரும் அதிகாரங்கள்.
2. மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட பொருள்கள் மீதும் சட்டமியற்றும் அதிகாரம்.
3. மாநிலங்கள் விரும்பினாலும் விரும்பாவிடினும் சில கடமைகளை ஒப்புவித்தல்.
4. மாநில அரசுகளை மீறி மத்திய அரசு நெருக்கடி நிலையைப் பிரகடனம் செய்யும் அதிகாரம்.
5. மாநிலங்களை கையேந்தவைக்கும் மான்யம் தரும் அதிகாரம்.
6. அனைத்திந்திய ஊழியங்கள் என்ற பெயரில் மாநிலங்களில் அரசு அமைப்புகளில் பங்கேற்கும் அதிகாரம்.
7. மாநிலங்கள் சட்டம் நிறைவேற்றினாலும் குடியரசுத் தலைவருக்கு அனுப்பவேண்டும் என்ற நியதி.

இது தவிர திட்டக்குழு போன்ற அரசியல் சட்டத்தில் காணப்பெருத அமைப்புகளை ஏற்படுத்தி மத்திய அரசை அண்டிப் பிழைக்க வேண்டிய நிலையை மாநிலங்களுக்குத் தோற்றுவித்தல்.

இத்தகைய அதிகாரங்களைத் தன்னகத்தே காலப் போக்கில் உருவாக்கிக் கொண்டு பயன்படுத்தத் தொடங்கிய மத்திய அரசு—இணைப்பாட்சி முறையிலிருந்து விலகத் தொடங்கியது.

இதையே முன்னாள் கவர்னர் கே. சந்தானம் எழுதிக் காட்டுகிருர் :

"இந்தியக் குடியாட்சி முறை, முரண்பாட்டில் தொடங்கியது. அரசியல் அமைப்புக் கூட்டாட்சியின் பாற்பட்ட அரசை நிறுவ வழிவகை செய்கையில் அன்றிருந்த அரசியல் கட்சிகள் ஒன்றியும், மிக ஒருமித்தும் இருந்தன. காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரை நிலை அதுவாக இருந்தது.

அதாவது அரசியலமைப்புச் சட்டம் "கூட்டாட்சியை வற்புறுத்திஞலும் கூட்டாட்சிக்கு புறம்பான ஆட்சியே உருவாகியது என்கிருர் சந்தானம்.

அவரே "மத்திய மாநில உறவுகள்" என்ற இன்னொரு நூலில் எழுதுகிருர்.

"இந்திய ராஜதானிகள் மீது பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கிருந்த உயர் அதிகாரங்களை மத்திய அரசுக்கு எடுத்துக் கொண்டு, அதன் உறுப்புகளுக்கும் அதே பழைய முறையிலுள்ளவற்றைத் தந்த இணைப்பாட்சி தான் இங்கே இருப்பது என்று சுருக்கமாக விவரிக்கலாம்.

"மக்கள் பழைய சரித்திரத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டாலும், சரித்திரப் பின்னணி அவர்களை எப்படிப்

பாதிக்கிறது என்பதை எடுத்துக் காட்டும் விசித்திரப் படப் பிடிப்பு இது!

"தேசியத் தலைவர்கள் இந்த உயர் அதிகாரம் எனும் தத்துவத்தை எதிர்த்து எப்போதும் போராடி வந்தார்கள். ஆனால் அரசியல் நிர்ணய சபையோ அரசியல் சட்டத்தில் இந்த உயர் அதிகாரத்தை வலிமையான முறையில் பொருத்தி விட்டது.

"It may be briefly described as a Federation in which the paramountly powers which British Government had over the Indian States have been taken over by the Union Government and applied to all its units. This is a peculiar illustration of how the historical background affects people even when they break away from history."

"The National leaders had always agitated against the doctrine of paramountcy. But the Constituent Assembly has effectively installed those powers in the Constitution."

இவ்விதம் நாட்டுத் தலைவர்களின் எண்ணங்களுக்கும் உறுதிமொழிகளுக்கும் மாறாக அரசியல் சட்டத்தில் விதைக்கப்பட்ட அதிகாரக் குவியல் எனும் விதை இப்போது முளைத்து விஷ விருட்சமாக மாறியிருக்கிறது.

அதற்குத் துணைசெய்வது போல் திட்டக் குழு போன்ற அரசியல் சட்டத்தில் காணப்படாத அமைப்புகள் எழுந்திருக்கின்றன.

இதன் காரணமாக இணைப்பாட்சி—கூட்டாட்சி முறை நலியவும், அது நலியும் போதும் மாநில சுயாட்சித் தன்மை சீர்கேடு அடையவுமான நிலை தோன்றியிருக்கிறது.

இதைத் தடுத்து நிறுத்த வேண்டியது அரசியல் உணர்ந்தவர்களின் நீங்காக் கடமையாகும்.

அந்தக் கடமை உணர்வோடும்—நமது மாநிலத்திற்கு அதிகமான நன்மைகள் செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடும் தி. மு. கழகம் 'மாநில சுயாட்சிக் கொள்கையை வலியுறுத்தி வருகிறது.

மாநில சுயாட்சி என்பது தி. மு. கழகத்திற்குக் கொள்கை மட்டுமல்ல; அதன் நிறுவனர்—பேரறிஞர் அண்ணா அவர்கள் தந்த உயில்—உரிமைச் சாசனம் ஆகும். அந்த உயிலில் கூறப்பட்டிருப்பது என்ன ?

## 5. அண்ணாவின் உயில்!

பேரறிஞர் அண்ணா அவர்கள் தமது வாழ்நாளெல்லாம் வலியுறுத்தி வந்தது—தமிழகத்தின் நல்வாழ்வும்—முன்னேற்றமும் தான்.

பிரிவினை என்ற உச்சக்குரலை அவர் எழுப்பியபோதும் அதற்குப் பிறகும் அவரது குரல், எப்போதும் வடதிசை காட்டும் காந்த முள்போல் தென் திசையின் நல்வாழ்வுக்காகத்தான் ஒலித்து வந்தது.

ஒருமுறை தமிழக சட்டமன்றத்தில் எதிர்க் கட்சியின் தலைவராயிருந்த அண்ணா அவர்கள் அப்போதைய மாநில அமைச்சராயிருந்த சுப்பிரமணியத்தைப் பார்த்துக் கூறினார்.

"எங்களது பிரிவினைக் கோரிக்கையைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். தமிழகத்தின் நல்வாழ்வுப் பாதை அமைக்கும் (சாப்பர்ஸ் அண்ட் மைனர்ஸ்) முன்னோடும் படையாக எங்களைக் கருதிக் கொள்ளுங்கள்"—என்று கூறினார்,

இதன்மூலம் அறிஞர் அண்ணா அவர்களின் இதயம் தெளிவாக விளங்குகிறது. தமிழகத்தின் முன்னேற்றம்—நல்வாழ்வு இவைகளையே கருதுகோளாக—குறிக் கோளாக வைத்து தமது அரசியல் பயணத்தை நடத்தி வந்தார்.

அந்த அரசியல் பயணத்தின் இறுதிக் கட்டத்தில் அவர் முதலமைச்சராகவும் ஆனார். முதலமைச்சர் பீடத்தில் உட்

கார்ந்ததும் அவர் இதுவரை பரப்பிவந்த கருத்துக்கு மேலும் அனுபவப் பூர்வமான ஆதாரங்கள் கிடைக்கத் தொடங்கின.

மக்களுக்கு நல்வாழ்வு தர—மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரங்கள் தேவை என்ற கருத்துக்கு ஆட்சியியல் பூர்வ மான ஆதாரங்கள் அறிஞர் அண்ணு அவர்களுக்குக் கிடைத் தது.

அந்த ஆதாரங்களை உள்ளடக்கி—அவருக்கேயுரிய அழகு தமிழில்—காஞ்சி ஏட்டில் "தம்பிக்கு"க் கடைசியாக எழுதிய கட்டுரையில் பின் வருமாறு குறிப்பிடுகிருர் :

"உடையவர்க்கே—விழா வெல்லாம்; ஏழையருக்கு ஏது? —என்ற கேள்வியிலேயுள்ள நியாயத்தை நான் மறுப்பவ னல்லன் :

"தமிழகம் முழுவதும் விழாக்கோலம் கொள்ளக்கூடிய விதமான வளம் கொழித்திட வேண்டும் என்று விரும்பு கிறேன்.

"அதற்கான வழிகள் யாவை என்பதுபற்றி ஆய்வாளர் களிடம் அறிவுரை கேட்டுப் பெறுகிறேன். திட்டம் பல தீட்டப் படுகின்றன. ஆனல் அவைகள் நிறைவேற்றத் தேவைப் படும் பணம் இந்திய பேரரசிடமல்லவா முறையிட வேண்டி யிருக்கிறது?

"முறையிடுகிறேன்—கனிவும் பணிவும் குறையாமல்— வம்பு வல்லடிப் போக்கு துளியுமின்றி—ஆனல் கிடைக்கிறதா? நிரம்ப! காரணங்கள்; நியாயங்கள்; வாதங்கள்! எதற்கு?

"இவ்வளவுக்கு மேல் பணம் தருவதற்கு இல்லை என்பதற்கு! என் செய்வேன்?

"அண்ணன் ஏன் எப்போதும் கவலைப்பட்டபடி இருக் கிருர் என்று சில தம்பிகள் கேட்கவே செய்கிருர்கள். நான் கவலைப்படாமல் எப்படி இருக்கமுடியும்?

''ஆகவே, தான் மாநிலங்கள் அதிக அளவில் அதிக அதிகாரங்களைப் பெறத்தக்க விதத்தில் இனிய அரசியல் சட்டம் திருத்தி அமைக்கப் படவேண்டும் என்பது பற்றி வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் எடுத்துக் கூறி வருகிறேன்.

''இதற்கான நல்லாதரவு நாளுக்கு நாள் வளர்ந்தபடி இருக்கிறது என்பதிலே எனக்குத் தனியானதோர் மகிழ்ச்சி. நமது கழகம் மட்டுமின்றி, வேறுபல அரசியல் கட்சிகளும் இப்போது அதனை வலியுறுத்த முன் வந்துள்ளன.

''அரசியல் கட்சிகளைச் சேராத அறிவாளர் பலரும் அதற்கு ஆதரவு காட்டுகின்றனர்.

''நாம் அரசு நடாத்தியதால் கிடைத்து இருக்கின்ற நற்பலன்களிலே இதனை ஒன்று என்றே நான் கருதுகிறேன்''

—இவ்விதம் கூறிய அறிஞர் அண்ணா அவர்கள் எதற்கு இந்த அதிகாரங்கள்? என்ற கேள்விக்கும் அழகாக விடை தருகிறார்.

''பழம் பெருமை பேசி மூச்செறிந்துகொண்டே செயலற்று இருப்பதல்ல நமது குறிக்கோள்.''

''செயலினால் பெற்றிருக்கும் செழுமையை எடுத்துக் காட்டிடும் நன்னாளாம் பொங்கல் புதுநாளில் செயலார்வம் மிகுத்திடுவது இயல்பு. செயலும் செம்மையானதாக அமைந்திடவேண்டும் பயனும், சமூகம் முழுவதற்கும் கிடைத்திட தக்க முறை கண்டாக வேண்டும்.

''வெள்ளம் அழித்திடும்—வாய்க்கால் வளமூட்டும். செல்வம் சிலரிடம் சென்று குவிந்திடுவது வெள்ளத்திற்கு ஒப்பானது. அது கொண்டவனையும் அழித்திடும், சமூகத்தில் வலிவற்றோரையும் அழித்திடும்.

''எனவேதான் — சிந்தனையாளர் — செல்வம் பெருகிட வேண்டும்; அஃது முடக்கப்படாமல் சமூகம் முழுவதற்கும்

பயன் அளிக்கக் கூடிய வழி முறை கண்டாக வேண்டும் என்று எடுத்துக் கூறினர்.

"நமது அரசு கூட அந்த சமதர்ம இலட்சியத்தைப் போற்றுகிறது. நமது கழகம் சமதர்ம நெறியிலே நம்பிக்கையும் நாட்டமும் கொண்டிருக்கிறது. ஆனால் நடைமுறைக்குள் புகும்போது தம்பீ! ஆயிரம்—ஆயிரம் தடைகள், எதிர்ப்புகள், ஆபத்து கூட.........!"

"ஏழ்மை நெளிகிறது—அதிலும் வளம் பெற்றளிக்கும் பாட்டாளிகளிடம்! இது நீதியன்று; தமிழர் நெறியுமாகாது.

"இந்நிலை மாறிட-எல்லோருக்கும் வாழ்வில் இன்பம் கிடைத்திட நாம் ஒவ்வொருவரும் தத்தமக்குக் கிடைத்த வாய்ப்புக்கேற்ற முறையில் பணியாற்றிட வேண்டும்.........

"......கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் தக்க முறையிலே பயன்படுத்தினால், சமூகத்தை நிச்சயமாக திருத்தி அமைத்திடலாம்......"

"காலம் மதிப்பு வாய்ந்தது. கடமை உணர்ந்த நீ, காலத்தையே கனியச் செய்திடும் ஆற்றல் பெற்ற நீ, தமிழக அரசியலையே மாற்றி அமைத்த நீ—உன் கடமையைச் செய்வதிலே கண்ணும் கருத்துமாய் இருப்பாய் என்பதனை நான் நன்கு அறிவேன்."

—இந்த அண்ணாவின் உயிலில் பல கருத்துக்களை நாம் மிக உன்னிப்பாகத் தேர்ந்தெடுத்து உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஒன்று—மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரங்கள் தேவை என்பதை அறிஞர் அண்ணா அவர்கள் உணர்ந்தார்கள். அதை அவர் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் வலியுறுத்தியதாகவும் சொல்கிறார்.

இரண்டாவது; அந்தக் கருத்துக்கு ஆதரவு பெருகி வருகிறது என்பதை எடுத்துக் கூறுகிறார்.

இந்த ஆதரவு—நாம் அரசு நடாத்தியதால் கிடைத்த பலன்களில் ஒன்று என்றும் கூறுகிறார்.

ஆகவே—கழகம், அரசு நடாத்துவது என்பது மாநில சுயாட்சிக் கோரிக்கைக்கு பலம் சேர்க்கும் அத்தியாவசிய மான ஒரு அங்கம் என்பதையும் அறிஞர் அண்ணா அவர்கள் இரத்தினச் சுருக்கமாக ஆனால் தெளிவாகக் கூறியிருக்கிறார். இதைக் மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

மூன்றாவது—மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரங்கள் என்பது ஏதோ முதலமைச்சருக்கு—அல்லது அமைச்சர் களுக்கு அதிகமான அதிகார அந்தஸ்துகளைத் தருவதற்காக அல்ல.

மாநில சுயாட்சி பெறுவதற்கும் ஒரு இலட்சியம் உண்டு. அந்த இலட்சியம் என்ன என்பதையும் அண்ணா அவர்கள் நீண்ட நெடிய சொற்றொடர்களால் விளக்கியிருக்கிறார்.

1. செல்வம் ஓரிடத்தில் குவியாதவாறு செயல்பட வேண்டும்.

2. சமூகம் முழுமைக்கும் அந்தச் செல்வம் சென்று சேர்ந்திடும் வழிவகை கண்டாக வேண்டும்.

3. சமதர்ம இலட்சியம்—சமதர்ம நெறியில் சென்றிட வேண்டும்.

4. அதில் ஆயிரம் ஆயிரம் தடைகள்—எதிர்ப்புகள்——ஆபத்துகள் இருப்பினும் அந்தப் பாதையில் சென்று சமுதாயப்பணி ஆற்றிடவேண்டும்.

இத்தகைய குறிக்கோளுக்காகத் தான் நாம் மாநில சுயாட்சி கேட்கிறோம் என்பதை அண்ணா அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துரைத்திருக்கிறார்.

கடைசியாக—இலட்சியத்தை கூறி அதற்கான காரணத்தைச் சொன்ன அண்ணு அவர்கள் தலைவனுக்கே யுரிய கம்பீரத்தோடு—ஒரு ராஜதந்திரிக்கிருக்கும் அறிவாற்றலோடு நமக்கு ஆணையிடுகிருர்.

ஒவ்வொருவரும் தத்தமக்குக் கிடைத்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி மேற் கூறிய இலட்சியப் பயணத்தில் ஈடுபட வேண்டும். அதிலும் காலத்தை வீணுக்காமல் நாம் பயணம் மேற்கொள்ள வேண்டும் என்று தெளிவாகக் கூறுகிருர்.

ஆகவே—அறிஞர் அண்ணு அவர்களின் உயில்...நமக்கு நமது இலட்சியத்தைச் சொல்வதோடு அதற்குக் காரணத்தையும் காட்டுகிறது. காரியமாற்ற வேண்டிய வழி வகைகளையும் எடுத்துக் கூறுகிறது.

## 6. அண்ணாவின் வழிகாட்டுதலில்...

மாநிலங்களில் எவ்விதம் மத்திய அரசு தலையிடுகிறது—மாநில—மத்திய அரசுகளின் மோதல்கள் எப்படிப்பட்டவை என்பதையெல்லாம் அறிஞர் அண்ணா அவர்கள் அவ்வப் போது எடுத்துக் காட்டி வந்திருக்கிறார்கள்.

தமிழக சட்டமன்றத்தில் அறிஞர் அண்ணா அவர்கள்—முதலமைச்சர் என்ற முறையில் மேற்சொன்ன கருத்தை முதன் முறையாக எடுத்துக் கூறினார். 1967 ஜூன் 17—ம் தேதியன்று வரவு செலவுத் திட்டத்தை அளிக்கும் போது அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அதைப் போலவே—1967 ஜூன் 27ம் தேதியன்றும் அறிஞர் அண்ணா அவர்கள் மத்திய அரசு எவ்விதம் மாநிலங்களின் மீது ஆதிக்கம் நிலை நாட்டுகிறது என்பதைப் பற்றிக் கூறினார்கள்:

“நிதித் தொடர்பில் மூன்றுவகை—ஒன்று வசூலிக்கும் வரிகளை மத்திய அரசு ஒதுக்கீடுகள் மூலம் மாநிலங்களுக்கு அளித்தல்.

“இரண்டாவது—மானியம் வழங்குதல்!

“மூன்றாவது—திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு செய்தல்! 1950—முதல் 1967 வரையிலான புள்ளி விவரங்களைப் பார்த்தால் முதல் இரண்டு இனங்களிலுள்ள சிறப்புக்குறைந்து திட்ட

ஒதுக்கீட்டின் சிறப்பு அதிகரித்திருக்கும். மிகுந்த ஆதிக்கம் பெற்றிருக்கும்'' எனக் குறிப்பிட்ட அண்ணா அவர்கள் — அந்தத் திட்டக் குழுவைப் பயன்படுத்தி மாநிலங்களை மத்திய அரசு எப்படி ஆட்டிப்படைக்கிறது என்பதை அழகாக எடுத்துரைக்கிறார்.

''மானியங்கள் என்ற போர்வையில் மத்திய அரசு அதனிடம் சாட்டையை வைத்துள்ளது.

''ஏனெனில் மத்திய அரசு அதன் விருப்பத்திற்கேற்ப மானியங்களை வழங்குகிறது.''

''திட்டக்குழு உறுப்பினர்கள் எனப்படுவோரின் விருப்பு வெறுப்பிற்கேற்றபடி திட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

''நமது நாட்டின் முன்னேற்றத்திற்குத் தேவைப்படும் பெருமளவு தொகை, மற்றொரு குழுவின் விருப்பு வெறுப்பிற்கேற்ப விடப்படுகிறது. இவற்றை மறு ஒதுக்கீடு செய்யும் அவசரத் தேவை எழுந்துள்ளது என்று நான் கருதுகிறேன்.

''இந்தத் திட்டக்குழு எந்த ஓர் அதிகாரப்பூர்வமான அமைப்பின் நிர்வாகத்தின்கீழும் இல்லை.

''திட்டத் தொகையைப் பொறுத்தவரையில் நிதித் தொடர்புகள் மறு ஆய்வு செய்யப் படவேண்டும். மிக விரைவாகச் செய்ய வேண்டும்.

''நமக்குச் சேர வேண்டியது நம்மிடமிருந்து கொள்ளை போகக் கூடாது.''

இவ்வாறு அறிஞர் அண்ணா அவர்கள் திட்டக் குழு என்ற பெயரில் மாநிலங்களின் மீது மத்திய அரசு நடத்தும் மறைமுக ஆதிக்கத்தைக் கண்டித்தார்கள்.

இதே கருத்தை டாக்டர் சுப்பாராவ் தமது ''இந்திய இணைப்பாட்சி'' என்ற நூலில் வலியுறுத்துகிறார்.

"இந்தியாவில் அமைக்கப்பட்ட திட்டக்குழு அரசியல மைப்புச் சட்ட விதி முறைகளுக்கு முரணகச் செயல்பட்டது.

"ஒரே கட்சி, மாநிலங்களிலும் மத்தியிலும் அதிகாரத்தில் இருந்ததால் இது சாத்தியமாயிற்று.

"மத்திய அமைச்சர்கள் பலருடைய நெருங்கிய தொடர்பை பெற்றிருந்ததாலும் தேசத்தின் பொருளாதாரத்தைக் கட்டி யாளும் அதிகாரத்தைப் பெற்றிருந்ததாலும் இது மதிப்பில் உயர்ந்து நின்றது.

"ஆண்டு பலவாக, அமைச்சரவைக்கும் மேற்பட்ட ஒரு அமைப்பாக மாறி விட்டது.

"திட்டக் குழுவின் மூலமாக மாநிலப்பகுதிக்கான திட்டத் தையும் அதைச் செயற்படுத்தும் அதிகாரத்தையும் மத்திய அரசு தன்னிடமே வைத்துக் கொண்டது"

—இது போன்ற ஒரு கருத்தை கே. சந்தானம் அவர்களும் கூறுகிருர்:

"மறைந்த பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் திட்டக் குழுவின் எண்ணிக்கை, அதனுடைய உறுப்பினர்கள், அவர் களின் பணிகளை தன் விருப்பத்திற்கேற்ப மாற்றி அமைத்துக் கொள்ளும் வகையில் ஒரு சாதாரண அரசு ஆணையை வெளி யிட்டு திட்டக் குழுவை அமைத்துக் கொண்டார்.

"நிர்வாகச் சீர்திருத்தக்குழு சட்ட ரீதியான திட்டக்குழு பற்றி வலியுறுத்தியுள்ளது ......

"...மாநில அரசிற்கோ மத்திய அரசிற்கோ பாதகமில் லாமல் நாட்டுப் பொருளாதாரம் வளர்ச்சியடைய அத்தகைய சட்ட ரீதியான தேசிய திட்டக்குழு தேவை" என்கிருர் சந்தானம்.

திட்டக் குழு மட்டுமல்ல; பல்வேறு துறைகளிலும் மத்திய அரசின் தலையீடுகள் இருந்துவந்ததை அறிஞர் அண்ணா அவர்கள் தமக்கேயுரிய நளினத்தோடு கண்டித்து வந்தார்

இந்தக் கண்டனம் ஒரு நாள் முழு வலிமையோடு பயன் தரும் என்பதிலும் அண்ணா அவர்கள் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருந்தார்கள்.

அந்த நம்பிக்கை ஒளி—வெளிநாட்டுப் பயணம் மேற் கொண்ட அண்ணா அவர்களின் பேச்சில் தெளிவாகத் தெரிந்தது.

1968-ஆம் ஆண்டு மே-11 ம் தேதி ஹாங்காங்கிலுள்ள இந்தியர்களிடைய பேசுகையில் அண்ணா அவர்கள் கூறினர்:

"ஒரு கட்சி ஏகபோகம் நாட்டின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தி வருகிறது என்று இந்திய மக்கள் அஞ்சிக் கொண்டிருந்தார்கள்.

"கடந்த தேர்தல்களின் முடிவுகள் இந்தியாவில் உண்மை யான ஜனநாயகம் நிலவ முடியும் என்ற நம்பிக்கையை மக்களிடம் ஏற்படுத்தியிருக்கிறது.

"மத்திய அரசோடு வாதாடி கோரிக்கைகளைப் பெறுவதில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மற்றவர்களை விட வாய்ப்பு அதிகம் உண்டு.

"இயற்கை வளமும் அறிவு வளமும் உழைப்பதற்கான மக்கள் வளமும் இருக்கிறது, ஏராளமாக!"

—என்று அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இவ்விதம் நம்பிக்கை தெரிவித்து நமக்கு இலட்சியம் சொல்லி—காரணங்களும் எடுத்துக் காட்டுகளும் தந்த அறிஞர்

அண்ணா அவர்கள் அற வழியில் இலட்சியப் போரைத் துவக்கிட அவரது உடல் நிலை இடம் கொடுக்கவில்லை என்பது ஒரு காரணம்.

மற்றொரு காரணம்--நாம் இன்னும் அதிகமான அதிகாரங்கள் கேட்கிறபோது இருக்கிற அதிகாரங்களை வகையாகவும்—முழுமையாகவும் பயன்படுத்திக் காட்டவேண்டும் என்று அண்ணா அவர்கள் நினைத்தார்.

அண்ணா அவர்கள் ஆட்சிபீடத்தில் இரண்டு ஆண்டுகள் தான் இருந்தார். அதில் ஓராண்டு உடல் நலக் குறைவினால் அவதிப்பட்டார். மீதமிருந்த ஓராண்டில் அவர் ஏராளமான சாதனைகளைச் செய்தார். உடல் நலிவுற்றிருந்த போதும் அவர் சாதனைகளைச் செய்யத் துடித்தார்.

அதற்குக் காரணம்—அவர் கோரி வந்த மாநில சுயாட்சிக்கு வலிவேற்ற வேண்டும் என்ற ஆர்வம் தான்!

இருக்கிற அதிகாரங்களை வைத்து நாம் அதிகமாக சாதனைகளைச் செய்துகாட்டிய பின்னால், "இதோ—இவ்வளவு சாதனைகளைச் செய்தோம். மக்களின் நல்வாழ்வுக்கு இவ்வளவு திட்டங்களைப் போட்டோம். அதில் வெற்றியும் பெற்றோம். இன்னும் பல திட்டங்களைப் போட வேண்டும். மக்களின் நல்வாழ்வைப் பேண வேண்டும். அதற்கு தற்போது மாநிலத்திற்கு இருக்கின்ற அதிகாரங்கள் போதாது. இன்னும் அதிகமான அதிகாரங்கள் தேவை.

"எங்களுடைய சாதனைகளைப் பார்த்தீர்கள். இருக்கின்ற அதிகாரங்களை வைத்து இதனை அனைத்தையும் செய்தோம். ஆகவே நாங்கள் கோருகின்ற அதிக அதிகாரங்களுக்கு ஆதரவாக இருப்பீர்!"—என்று மக்களிடம் சென்று கேட்பதற்கான சூழ் நிலையை அறிஞர் அண்ணா அவர்கள் ஏற்படுத்தினார்கள்

அதனுல் தான் அவர் அடிக்கடி சொல்வார் "மக்கள் நம் மிடம் நிரம்ப எதிர் பார்க்கிருர்கள்—தம்பி—மக்கள் நம்மிடம் நிரம்ப எதிர் பார்க்கிருர்கள்"

அந்த உற்சாகமான வார்த்தைகளால் உந்தப்பட்டு— இருக்கிற அதிகாரங்களை வைத்துக் கொண்டு ஏராளமான சாதனைகளை அறிஞர் அண்ணுவும் அவருக்குப்பின் வந்த டாக்டர் கலைஞரும் செய்தார்கள்.

அப்படிச் செய்ததன் மூலம் நாம் கேட்கின்ற மாநில சுயாட்சிக்கு — மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரங்கள் வேண்டும் என்ற கோரிக்கைக்கு அடிப்படை நிலம் உருவாகியது.

# 7. செழுமையூட்டிய கலைஞர் !

ஒரு தலைவனின் புகழ் அவன் காலத்தோடு முடிந்து விடுமானால் அந்தத் தலைவனுக்கும் பெருமையில்லை; அவன் வழியில் வந்தவர்களுக்கும் பெருமையில்லை.

அதுபோல ஒரு தலைவனின் இலட்சியம் அவனது காலத்தோடு முடிந்துவிடுமானால் அந்தத் தலைவனுக்கும் பெருமையில்லை; அந்த இலட்சியத்திற்கும் பெருமையில்லை.

ஆனால் அண்ணாவின் புகழோ—
இலட்சியமோ அவரோடு முடிந்துவிடாது அவருக்குப் பின்னரும் விடி வெள்ளியாகக் காட்சி அளித்துக் கொண்டிருக்கிறது.

அதற்கு அந்த இலட்சியத்தின் உறுதி, அண்ணா உருவாக்கிய தலைவர்கள் வரிசை, தொண்டர்கள் அணி என்பவை காரணங்கள். இதில் முதன்மையானது—அறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிறகு வந்த தலைமைதான்!

அதிலும் குறிப்பாக நாலரைக் கோடி மக்களின் நாயகன் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலும் தலைமையுமே முக்கியமானது,

அண்ணாவின் வழியில் நின்று அவர் ஆற்றிய தொண்டுகளை எடுத்துரைக்க பல சரித்திர ஆசிரியர்கள் முயல வேண்டும்.

ஆனால் மாநில சுயாட்சி இலட்சியத்திற்காக அவர் ஆற்றிய பணி அதில் முதன்மையானதாகவே இருக்கும்.

அறிஞர் அண்ணா அவர்கள் மாநில சுயாட்சி எனும் நாற்றங்காலை உருவாக்கினார் என்றால் அதைச் செழுமையாகப் பயிராக்கிய பெருமை டாக்டர் கலைஞருக்கு உண்டு.

அறிஞர் அண்ணா அவர்கள் மறைந்த பின்னர் திருச்சியில் நடைபெற்ற மாவட்ட மாநாட்டில் டாக்டர் கலைஞர் முதன் முறையாக ஐம்பெரும் முழக்கங்கள் எனும் தலைப்பில் முதல் முழக்கமாக ...

மாநிலத்தில் சுயாட்சி
மத்தியில் கூட்டாட்சி

என்ற குரலை முழக்கினார்.

தமிழ் நாட்டின் புகழ் மிக்க முதலமைச்சராக நின்று, அவர் ஒலித்த இந்த உரிமை முழக்கத்தை இந்தியத் துணைக்கண்டமே கூர்ந்து கவனித்தது.

உரிமைக் குரலை அவர் அதற்கு முன்பு கூட ஒலித்தவர் தான். இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியார் சென்னை அரசினர் கோட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்து வைக்க வந்த போது அந்தப் பிரதமர் முன்னிலையிலேயே ......

"உறவுக்குக் கை கொடுப்போம் உரிமைக்குக் குரல் கொடுப்போம்!" என்றார்.

அந்த உரிமைக்குரல் சீரிய இலட்சிய வடிவத்தோடு திருச்சியில் "மாநிலத்தில் சுயாட்சி—மத்தியில் கூட்டாட்சி" என்று ஒலித்தது.

அந்தத் திருச்சி மாநாட்டைத் தொடர்ந்து பல்வேறு மாவட்ட மாநாடுகளிலும் அந்த இலட்சியக் குரல் ஒலிக்கத் தொடங்கியது.

தமிழகத்தில் இருப்போர் மட்டுமல்ல—அகில இந்தியாவி லும் இருப்பவர்களின் குரல் ஒலிக்க வேண்டும் என்பதற்காக சென்னையில் 'மாநில சுயாட்சி மாநாடு' ஒன்றினை நடத்தினர், கலைஞர்.

அப்போதைய மேற்கு வங்க முதல்வர் அஜய்முகர்ஜி, பஞ் சாப் முதலமைச்சர் குர்ணும்சிங் உட்பட பல மாநிலத்தலைவர் கள் பங்கேற்று மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரங்கள் தேவை என்பதை வலியுறுத்தினர்கள்.

மாநில சுயாட்சி என்றும், மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரங்கள் வேண்டும் என்றும் கேட்டால் மட்டும் போதாது எனக் கருதிய முதல்வர் அவர்கள் மாநிலங்களுக்கு இன்னின்ன அதிகாரங்கள் தேவை என்று அறிவிக்கின்ற வகையிலும்—மத்திய மாநில உறவுகள் குறித்து ஆய்வு நடத்துகிற வகை யிலும் ஒரு நிபுணர் குழுவை அரசு சார்பில் அமைக்க எண் ணம் கொண்டார்.

அந்த எண்ணம் செயல் வடிவமாகியது. அந்தச் சரித் திரப் பிரசித்தி பெற்ற செயல் வடிவம் தான்—ராஜ மன்னர் குழு அமைப்பு.

அந்தக் குழு எவ்வளவு பெரிய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை அந்தக் குழுவின் தலைவராயிருந்த ராஜமன்னர் அவர்களே குறிப்பிடுகிருர்.

"திரு. மு கருணநிதி அவர்கள் தமிழ் நாட்டு முதலமைச் சராகப் பொறுப்பேற்ற பின்னர், முதலமைச்சர் என்னும் முறை யில் 1969 மார்ச்சு 17-ஆம் நாள் முதன் முதலாக புதுடில்லிக் குச் சென்றிருந்தார்.

"அவ்வமயம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வெளிவரும் பத்திரிகைகளின் ஐம்பதுக்கு மேற்பட்ட செய்தி யாளர்கள் பற்பல பொருள்கள் குறித்துத் துருவித் துருவி வினக்களை எழுப்பினர்.

"அவ்வினுக்களுக்கு விடையளிக்கையில் மத்திய—மாநில உறவுகள் குறித்து ஆராய்ந்து மத்திய அரசிலிருந்து மாற்றப் படக் கூடிய அதிகாரங்களைப் பரிந்துரைப்பதற்காக வல்லுநர் குழு ஒன்றினை அமைப்பது குறித்து தமது அரசு ஆலோசித்து வருவதாகக் குறிப்பிட்டார்.

"சட்ட நுட்பமும் அரசியலமைப்புச் சட்ட நுணுக்கமும் அறிந்த வல்லுநர்களையும் திறமை மிக்க கல்வி நிபுணர்களையும் இந்தக் குழுவில் சேர்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

"அவ்வாறு மாற்றப்படுவதில் அதன் அதிகாரங்கள் சரண டையப்பட்டதாக மத்திய அரசு கருதாமல் அதன் சுமை குறைக்கப்படுவது குறித்து மகிழ்ச்சி அடைய வேண்டும் எனறு அவர் மேலும் கூறினர்.

"அடுத்து 1969 ஆகஸ்டு 19-ம் நாள் என்னைத் தலைவராக வும் டாக்டர் லட்சுமணசாமி முதலியார் அவர்களையும் திரு. பி. சந்திரா ரெட்டி அவர்களையும் உறுப்பினர்களாகவும் கொண்ட மூவர் குழு ஒன்று அமைக்கப்பட்டதாக சட்ட மன்றத்தில் அறிவித்தார்.

"மாநிலங்களுக்கு முழுமையான தன்னுட்சி உரிமை அளிக்கப்படும் வகையில் மாநிலங்களின் அதிகாரங்களை எந்த வகையில் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதை இந்தக் குழு ஆராயும் என்று அவர் கூறினர்.

"மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் அளிக்கப்படும் அரசியல் குறித்து திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமின்றி பிற மாற்றுக் கட்சிகளும் ஒப்புக் கொண்டுள்ளன என்றும் குறிப்பிட்டார்.

'உண்மையில் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த முதலமைச் சர்கள் சிலரும் கூட மாநிலங்களுக்கு அதிக அதிகார வேண்டு மென்று விரும்பினர்.

"மக்கள் பாராட்டிற்குரிய முதலமைச்சர் இந்தியாவிலேயே முதல் முறையாக இக் குழுவை அமைக்க எடுத்த இம் முடிவு

அவரது மதிநுட்பம் மிக்க அரசியல் மேதைத் திறனுக்கும் தேசிய சிக்கல்களை அணுகும் சீரிய தன்மைக்கும் எதிர்கால நிகழ்ச்சிகளை தெளிந்து உணர்ந்து நோக்கும் வல்லமைக்கும் சான்று பகர்வதாகும்.

"பிறரை ஈர்க்கும் சக்திவாய்ந்த இவர், பல்லாயிரக் கணக்கான மக்களின் இதயங்களில் இடம் பெற்றுள்ளார்.

"நமது பரந்த நாட்டில் உண்மையான—என்றும் நிலைத்திடும் இணைப்பாட்சி அமைப்பை உருவாக்கிட அந்த குறிப்பிடத்தக்க தொண்டு, அதன் வரலாற்றில் திருப்பு முனையாக அமைந்திடும் என்பதில் ஐயமில்லை"

இவ்வாறு முன்னாள் தலைமை நீதிபதி ராஜமன்னார் அவர்களின் புகழ் மொழிக்கு உரிய கலைஞர்—அண்ணாவின் கனவிற்கு ஒரு அற்புதமான வடிவம் தந்தார்.

அரசாங்கத் துறையில் ராஜமன்னார் குழுவை அமைத்து அதன் ஆய்வுரைகளைப் பெற்ற முதல்வர் அவர்கள் அதை மத்திய அரசிற்கும் அனுப்பிவைத்தார்.

இதன் மூலம் மாநில சுயாட்சிக்கு அரசாங்க ரீதியிலும் ஒரு அந்தஸ்து தந்து மத்திய அரசின் பரிசீலனைக்கும் உட்படுத்தினார்.

முதல்வர் என்ற அளவோடு நிற்காமல்—கழகத் தலைவர் என்ற முறையில் கலைஞர் அவர்கள் பொதுச் செயலாளர் டாக்டர் நாவலரின் இசைவோடும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் உயர் அதிகாரக் குழுவான பொதுக் குழுவின் ஒப்புதலோடு ராஜமன்னார் குழு அறிக்கையை ஆராய்ந்த் கழகத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு இரா. செழியன் எம்.பி. முரசொலி மாறன் எம்.பி., ஆகியோர் அடங்கிய குழுவினையும் நியமித்தார்.

இந்த அளவோடு நிற்காமல்—திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டதிட்டத்தில் மாநில சுயாட்சி தத்துவத்தை

—இலட்சியக் குறிக்கோளாக்கி இணைக்கவும்—பொதுக் குழுவின் அனுமதியைக் கோரினர்.

பொதுக்குழுவின் அனுமதியோடு மாநில சுயாட்சி இலட்சியம் திராவிட முன்னேற்றக் கழக சட்டதிட்டத்தில் இணைந்தது.

இவ்விதம் அறிஞர் அண்ணா அவர்கள் உயிலாக—இலட்சிய முழக்கமாக—சாசனமாகத் தந்த 'மாநில சுயாட்சி'யை செழுமைப்படுத்திய பெருமை டாக்டர் கலைஞர் அவர்களுக்கே உண்டு!

மாநில சுயாட்சியைக் 'கரு'வாக இருந்த நிலையிலிருந்து 'உரு'வாக மாற்றியவர் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள்.

மாநில சுயாட்சி நாற்றங்காலில் இருந்த பயிராக இருந்தது. அதை வயல்முழுவதும் நட்ட பெருமை கலைஞர் அவர்களையே சாரும்.

## 8. அதிகாரப்பட்டியல் மாற்றங்கள் !

மாநில சுயாட்சி இயக்க சரித்திரத்தில் மிகப் பெரிய மைல்கல் - ராஜமன்னார் குழுவின் 'மத்திய - மாநில உறவு - ஆய்வு அறிக்கையாகும் !"

பொதுவாக மாநில சுயாட்சி பற்றியும் மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரங்கள் பற்றியும் பல்வேறு காலங்களில் பல் வேறு அறிஞர்கள் கருத்துத் தெரிவித்திருக்கலாம்.

ஆனால், அதுபற்றிய தொடர்பான — ஆழமான ஆக்கப் பூர்வமான ஆராய்ச்சி அறிக்கையை ராஜமன்னார் குழுவே தந்தது எனலாம். மிகுந்த சிரமத்தோடு அந்தக்குழு தனது அறிக்கையைத் தயாரித்திருக்கிறது என்பதை அதன் மேற் கோள்களிலிருந்தும், வினாப்பட்டியல்களிலிருந்தும் கண்டு கொள்ளலாம்.

மேற்கோள்கள் - தொகுப்புரைகள் மட்டுமே ஒரு ஆய் வுரைக்கு அணி சேர்த்துவிடாது. அதற்கப்பால் அறிவு சார்ந்த வாதங்களும், முடிவுகளும், தீர்வுகளும், பரிந்துரை களுமே அணி சேர்ப்பவையாகும்.

அந்த வகையில் ராஜமன்னார் குழுவின் ஆய்வறிக்கை மிகச் சிறந்தது எனலாம். அவர்கள் தமது அறிக்கையைத் தொடங்கும் போது மிகவும் நிதானத்துடனும் - கனவான் தன்மை உள்ளதாகவும் தொடங்கியிருப்பதைக் காணலாம்.

இந்திய அரசியல் சட்டம் பற்றிய ஆராய்ச்சி தான் என்றாலும், அதை உருவாக்கியவர்களைப் பற்றிக் குறிப்பிடும் போது —

"அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கக் காரண மாயிருந்த திறம் மிக்க, அனுபவம் செறிந்த அரசியல் வல்லு நர்கள், அரசியல் வாதிகள் சட்டநிபுணர்கள் ஆகியோரைக் குறை காண்பது எங்கள் உள் நோக்கமன்று; இச்சிக்கலை நாங்கள் அணுகியுள்ள முறையும் அவ்வாறில்லை."

—என்று மிகுந்த பெருந்தன்மையோடும் பணிவோடும் குறிப்பிட்டிருக்கிறது. பெருந்தன்மையும் பணிவும் இருப்பினும் கூட உண்மைகளை அந்தக்குழு மறைக்கவில்லை. அரசியல் அமைப்புச் சட்டம் உருவான போதிருந்த சூழ்நிலையையும் அந்தக்குழு கோடிட்டுக் காட்டத் தவறவில்லை.

1. ஆங்கில ஏகாதிபத்தியத்திலிருந்து மீண்ட அமெரிக்கர் கள் சுதந்திரமாக அரசியல் சட்டத்தை உருவாக்கியதுபோல் இங்கே இவர்கள் சுதந்திரமாக அரசியல் சட்டத்தை உரு வாக்கவில்லை.

1935–ஆம் ஆண்டு இந்திய அரசுச்சட்டத்தைத் தங்கள் முன் வைத்துக் கொண்டு - சட்டமியற்றியதால் அந்தச் சுதந்திரம் கிடைக்கவில்லை.

2. நாட்டுப்பிரிவினைக்குப்பின் இருந்த பரபரப்பான சூழ் நிலையில் அரசியல் சட்டம் உருவாகியது. — இந்தக் கருத்து களைக் காட்டிய ராஜமன்னார் குழு இன்னொரு பெரிய சரித்திர உண்மையையும் எடுத்துச் சொல்கிறது.

இந்திய அரசியல் சட்டம் இயற்றப்பட்டபோது விசித்ர மான அரசியல் சூழ்நிலை இந்தியாவில் நிலவியது. நாடு சுதந்திரம் பெற்றதாக அறிவிக்கப்பட்டதே தவிர - இந்தி யாவில் இருந்த 600-க்கும் மேற்பட்ட சமஸ்தானங்கள் 'திரி சங்கு' நிலையில் தான் இருந்தன.

பிரிட்டிஷாரின் நேரடி ஆட்சியிலிருந்த 'ராஜதானி' களின் பிரதிநிதிகள்—ஒரு அரசியல் சட்டத்தை ஆக்கி 'சமஸ்தானங்களை' இணைக்க வேண்டிய விசித்ரமான ஒரு நிலையில் இருந்தார்கள். அப்போது என்ன நடந்தது என்பதை ராஜமன்னார் குழு சொல்கிறது:

"அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கும் சமயத்தில் ஒரு பகுதி, மாகாணங்கள் அடங்கியதாகும். மற்றொரு பகுதி இந்திய சமஸ்தானங்கள் அடங்கியதாகவும் இந்தியா இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டிருந்தது.

"சுமார் 600 சமஸ்தானங்கள் பிரிட்டிஷ் மன்னரின் பிரதிநிதிகள் மூலம் அவருடைய நேரடி ஆட்சியின் கீழ் இருந்தன. பிரிட்டிஷ் மன்னரின் மேலாட்சிக்கு உட்பட்டு சமஸ்தானங்கள் இந்திய அரசர்களின் ஆட்சியில் இருக்க அனுமதிக்கப்பட்டிருந்தன. மன்னருக்கும் இந்திய சமஸ்தானங்களுக்கும் இடையிலான இந்த உறவு சில வேளைகளில் மேலாதிபத்தியம் என்று வருணிக்கப்பட்டுள்ளன.

"1947-ஆம் ஆண்டு இந்தியச் சுதந்திரச் சட்டம் நிறைவேற்றப்பட்டபோது இந்திய சமஸ்தானங்கள் மீது பிரிட்டிஷ் மன்னருக்குள்ள ஆதிக்கம் அழிந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

"இந்த ஆதிக்கம் அழிந்த பின்னர் இந்திய சமஸ்தானங்கள் கொள்கை அளவில் சுதந்திரம் உள்ளவைகளாகவும் கோன்மை உள்ளனவாகவும் திகழ்ந்தன. நாட்டின் பிற பகுதிகளிலிருந்து தனித்து அவைகளின் தன்னுட்சித் தகுதியை நிலை நிறுத்திக் கொள்வது இயலாது என சமஸ்தானங்கள் உணர்ந்தன.

"எனவே பெரும்பான்மை சமஸ்தானங்கள் இந்திய ஒன்றியத்துடன் இணைந்தன. ஐதராபாத் ஜம்மு—காஷ்மீர் சமஸ்தானங்கள் விதி விலக்காயின. அடுத்து இந்த சமஸ்தானங்களும் இந்தியாவுடன் இணைந்தன...

"எனினும், சமஸ்தானங்கள் இணைந்த வேளையில் நாட்டுப் பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரங்கள், போக்குவரத்து ஆகிய மூன்று பொருள்கள் குறித்து அவைகளுக்குள்ள உரிமைகளை மட்டுமே இந்திய யூனியனிடம் ஒப்படைத்தன."

—இவ்விதம் வரலாற்று உண்மைகளை எடுத்துச் சொல்லி அரசியல் சட்டத்தின் பிறப்பு, வளர்ப்பு ஆகியவற்றை ஆராய்கிறது. அதோடு சில ஆய்வுகளையும், பரிந்துரைகளையும் வைக்கிறது.

சுருக்கமாக ராஜமன்னார் குழுவின் நீண்ட நெடிய அறிக்கையை மூன்று பாகங்களாகப் பிரிக்கலாம்.

1. அரசியல் சட்ட ஆய்வுரை
2. மாநில சுயாட்சி ஆதாரங்கள்
3. பரிந்துரைகள்.

ஆதாரங்களும், ஆய்வுரைகளும் நமக்கு மிகுந்த தெளிவை உண்டாக்குகின்றன. அதன் பரிந்துரைகள் தெளிவோடு மாநில சுயாட்சி கோருவோர் நின்று பேசுவதற்குரிய ஆதார அடிப்பீடத்தையும் தருகிறது.

இதைத்தான் சுப்ரத்தா சர்க்கார் என்பவர் சொல்கிறார்:

"எனது கருத்துப்படி, தமிழ் நாட்டிலுள்ள தி.மு. கழக அரசு அமைத்த ராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள், விவாதத்திற்கான அடிப்படையை அமைக்கிறது எனலாம்."

"The recommendations of the Rajamannar Committee set up by the D.M.K. Government of Tamil Nadu in my opinion may form the basis of discussion"

—(Subrada Sarkar)...

எனினும், ராஜமன்னார் குழுவின் அறிக்கை மீதான ஆய்வை நடத்த தி.மு. கழகத் தலைமை ஒரு குழுவை நியமித்

துள்ளதால், ராஜமன்னூர் குழுவின் பரிந்துரைகளின் சாதக பாதகங்களைப்பற்றி நாம் இங்கே பேச விரும்பவில்லை.

ஆயினும், அந்தக் குழு மிகவும் சர்ச்சைக்குள்ளான மாநில அதிகாரங்களின் பட்டியல், மத்திய அரசின் அதிகாரங்களின் பட்டியல், பொதுப்பட்டியல் ஆகியவற்றிலிருந்து எந்தெந்த அதிகாரங்களை மாற்றவேண்டும் எனப் பேசியது என்பதை நாம் அறிந்து கொள்வது அவசியம்.

மத்திய அரசு அதிகாரப் பட்டியலிலிருந்து பாதுகாப்புத் துறை என்பதைப் பிரிக்க முடியாது என்று நாம் கருதி வரு கிறோம். ஆனால் அதன் உள்ளேயும் நுழைந்து ராஜமன்னூர் குழு ஒரு அற்புதமான யோசனையைச் சொல்கிறது.

மத்திய அரசுப் பட்டியலில் "பாதுகாப்பின் பொருட்டு அல்லது போர் நடத்துவதற்காக அவசியமானவை எனச் சட்டத்தினால் நாடாளுமன்றத்தால் அறிவிக்கப்பட்ட தொழில்கள்"—என்ற ஒரு பகுதி உண்டு.

அதைப்பற்றி ராஜமன்னூர் குழு கூறும்போது "இதில் மொழி அமைப்பு (வாசகங்கள்) திட்டமின்றி உள்ளன. எனவே, பாதுகாப்புக்கு நேரடித் தொடர்பற்ற தொழில்கள் கூட இதில் அடங்கியுள்ளன என்று வாதிடுவதற்கு இடமேற் படுகிறது. "ஆகவே, படைக்கருவி தொழிலுக்கு மட்டுமே வரையறுக்கும் மிகவும் திட்டவட்டமான முறையில் இந்தப் பகுதி திருத்தி அமைக்கப்படவேண்டும்" என்று குறிப்பிடு கிறது.

இரண்டு:- யூனியன் சொத்துகள் மாநிலத்தில் இருக்கும்போது அவற்றின் மீது வரி விதிக்கப்படுவதைத் தடுக்கும் அதிகாரம் இப்போது மத்திய அரசிடம் இருக்கிறது. இது நீக்கப்பட வேண்டும் என்று ராஜமன்னூர்குழு சொல்கிறது.

மூன்று :- பரிசுச் சீட்டுகள் நடத்தும் மாநிலங்களுக்கு வெளிப்படையாக அவற்றை ஒழுங்குபடுத்தும் அதிகாரங்கள் அளிக்கப்பட வேண்டும்.

நான்கு :- எதிர் நோக்கு வாணிகங்களை (Futures markets) மாநிலங்களின் பட்டியலுக்கு மாற்றலாம்.

ஐந்து :- 'பொது நலனுக்காக மத்திய அரசின் கட்டுப்பாட்டிற்குள் இருப்பது உகந்தது என்று சட்டத்தின் மூலம் நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்ட தொழில்கள்' என்னும் பகுதியில் இதுவரை பல்வேறு தொழில்கள் மத்திய அரசுக்கு ஆட்பட்டுள்ளன.

காப்பி—ரப்பர்—எரி சாராயம்—பட்டு—தேயிலை—கயிறு போன்ற தொழில்கள் பலவும் இந்தப் பிரிவின் கீழ் பற்பல சட்டங்கள் மூலம் உட்படுத்தப்பட்டன. இந்தச் சட்டப்பகுதி மாநிலங்களின் முயற்சியை முனை முறித்து விடும் என்ற காரணத்தாலும், தேசீய முக்கியத்துவம் அல்லாத தொழில்களும் இதில் சேர்ந்துவிடும் என்பதாலும்—தேசீய முக்கியத்துவம் வாய்ந்த அல்லது அனைத்திந்தியத் தன்மையுடைய தொழிலுக்கு மட்டும் அல்லது நூறு கோடி ரூபாய்க்கு மேல் மூலதனம் கொண்ட தொழில்களுக்கு மட்டும் என்று இந்தப்பிரிவு வரையறுக்கப்படவேண்டும் என்று ராஜமன்னார்குழு பரிந்துரைத்துள்ளது.

ஆறு:- எண்ணெய் வயல்கள்—

ஏழு :- சுரங்கங்கள்

எட்டு சுரங்கங்களிலும், எண்ணெய் வயல்களிலும் உழைப்பு வேலையை ஒழுங்கு முறைப்படுத்தல் ஆகியவற்றை நாடாளுமன்றம் ஏற்காமல் மாநிலப்பட்டியலுக்கு விட்டு விடலாம் என்று ராஜமன்னர் குழு கூறுகிறது.

ஒன்பது :- பண்டைக் காலத்திய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னங்களும் ஆவணங்களும்,

தொல் பொருளிடங்களும், சிதைவுகளும்' எனும் அதிகாரம் மத்திய அரசிடம் உள்ளது. இதை மாநிலங்களுக்கு மாற்றலாம் என்பது ராஜமன்னார் குழுவின் யோசனை.

பத்து :- மாநிலங்களின் கணக்குத் தணிக்கை அதிகாரம் பற்றியது. மாநிலங்களின் கணக்குத் தணிக்கையினை மாநிலப் பட்டியலுக்கு மாற்றி விடலாம் என்பதும் அந்தக் குழுவின் யோசனைகள்.

பதினொன்று :- சாராயம் அடங்கிய மருந்து மற்றும் ஏனைய ஒப்பனை சரக்குகள் மீது ஆயத் தீர்வை விதிக்கும் பொறுப்பை மாநிலத்திற்கு விட்டு விடலாம் என்பது அந்தக் குழுவின் பரிந்துரை.

இனி பொதுப்பட்டியலில் அவர்கள் கூறியுள்ள பரிந்துரைகளைக் காண்போம்.

பன்னிரெண்டு :- திருமணங்கள் — குடும்பங்கள்—பாகப்பிரிவினை போன்றவை பற்றிய பிரிவு—இது வட்டாரத்திற்கு வட்டாரம் வேறுபடுகின்றது. எனவே நாடாளு மன்றத்தின் தலையீடு இன்றி மாநிலங்கள் மட்டுமே இதில் செயல்படலாம். ஆகவே இந்த அதிகாரம் மாநில அரசுக்கு மாற்றப்படலாம் என்று ராஜமன்னார் குழு கூறுகிறது.

பதிமூன்று:- 'வழக்கிற்குரிய தீங்குகள்' எனும் தலைப்பில் அதிகாரத்தை மாநிலத்திற்கு தரலாம் என்கிறது அந்தக் குழு.

பதிநான்கு :- 'விலங்குகளுக்குக் கொடுமை செய்வதைத் தடுத்தல்' எனும் பிரிவு வட்டாரப் பிரச்சினை. ஆகவே இதனையும் மாநிலங்களுக்குத் தந்து விடலாம் எனச் சொல்கிறது ராஜமன்னார் குழு.

பதினைந்து :- மருந்துச் சரக்குகள்—நஞ்சுகள்—அபினி போன்றவை. இவற்றையும் மாநிலப் பட்டியலில் சேர்க்கலாம் என்கிறது குழு.

பதினாறு : தொழிற்சங்கங்கள்

பதினேழு : சமூக காப்புறுதி வேலைவாய்ப்பு

பதினெட்டு : வேலைமுறைமைகள். தொழிலாளர் சேமநிதி, இழப்பீடு முதலியவை.

பத்தொன்பது : தொழிலாளருக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சியும் தொழில் நுட்பப்பயிற்சியும் ஆகிய இவை அனைத்தும் மாநிலப் பிரச்சினைகள்தான். இந்தப் பொருள் குறித்து நாடாளு மன்றத்திலேயே இயற்றப்பட்ட சட்டங்கள் கூட மாநிலத்தினால்தான் செயல்படுத்தப் படுகின்றன. ஆகவே இதை மாநிலப் பட்டியலுக்கு மாற்றி விடலாம் என்கிறது ராஜமன்னார்குழு.

இருபது : அறங்கள், அறநிலையங்கள், அறக்கட்டளைகள்—ஆகிய இவற்றையும் முழுமையாக மாநிலங்களுக்குத் தந்து விடலாம் என்பது ராஜமன்னார் குழுவின் யோசனையாகும்.

இருபத்தொன்று : மக்கள் பிறப்பு—இறப்பு-புள்ளி விவரங்கள் இவற்றையும் மாநிலங்களே கவனிக்கும்படி விட்டு விடலாம் என்பது அந்தக் குழுவின் யோசனையாகும்.

இருபத்திரண்டு : 'சிறு துறை முகங்கள்'—இந்த அதிகாரத்தை மாநிலங்களுக்குத் தந்து விடலாம் என்கிறது.

இருபத்திமூன்று : 'உள்நாட்டு நீர்வழிகளில் நாவாய்ப் போக்குவரத்து'—

இந்த உள்நாட்டு நீர்வழிகள், சாலைகளோடு உள்நாட்டுப் போக்குவரத்து அமைப்பாக உள்ளன. இதை மாநிலப்பட்டியலுக்கு மாற்றப்படலாம் எனப்பரிந்துரைக்கிறது ராஜமன்னார்குழு.

இருபத்திநான்கு: "பொதுநலனுக்காக மத்திய அரசு எடுத்துக் கொள்ளும் உற்பத்திபண்டங்கள் மற்றும் உணவு எண்ணெய் வித்துகள், பிண்ணாக்கு, கால்நடைத் தீவனங்கள், கச்சாப்பருத்தி, பருத்திவிதை, கச்சாசணல் — மற்றும் விலைக்கட்டுப்பாடு-ஆகியவற்றை தேசியநலனுக்கு கடுமையான தீங்கின்றி மாநிலப்பட்டியலுக்கு மாற்றலாம் என்கிறது ராஜமன்னார்குழு.

இருபத்திஐந்து: இயந்திரவிசையால் இயக்கப்படும் வண்டிகள் — அவற்றின் மீதான வரிவிதிப்பு கோட்பாடு. இவற்றை இப்போது செயல்படுத்துகிற மாநில அரசுக்கே தரலாம் என்கிறது அந்தக்குழு.

இருபத்தாறு: தொழிற்சாலைகள்

இருபத்தேழு: கொதிகலன்கள்

இருபத்தெட்டு: மின்சாரம்.

'இவை அனைத்தும் மாநிலங்களின் பொருளாதார வளர்ச்சிக்குரியவை. ஆகவே இவற்றை மாநிலப்பட்டியலில் சேர்த்துவிடலாம் என்று பரிந்துரை செய்கிறது ராஜமன்னார் குழு.

இருபத்தொன்பது: சொத்தின் உரிமை பெறலும் — சொத்தினைக் கைப்பற்றலும்-என்னும் பகுதியில் இப்போதுகூட மாநில அரசுதான் நிர்வகிக்கின்றது. ஆகவே இதையும் மாநில அரசுப்பட்டியலுக்கு ஒதுக்கலாம் என்கிறது ராஜமன்னார் குழு.

இவ்விதம் மத்திய அரசுப் பட்டியலிலிருந்தும் பொதுப்பட்டியலிலிருந்தும் தெளிவான 29 அதிகாரங்கள் மாநிலப்பட்டியலில் சேர்க்கப்படலாம் என்று கூறுகிறது. ராஜமன்னார்குழுவின் ஆய்வுரை, மாநில சுயாட்சி கோருவோருக்குக் கிடைத்த அற்புதப் படைக்கலன் எனலாம்.

இது தவிர—மீதமுள்ள அதிகாரங்கள்—நீதித்துறை-மொழி போன்றவற்றிலும் பல பரிந்துரைகளை ராஜமன்னார் குழு செய்துள்ளது.

இதை நன்கு ஆராய்ந்து தி.மு.கழகத்தின் குழுவும் நமக்குத் தெளிவுதர இருக்கிறது. என்றும், இந்த இடைக்காலத்தில் ராஜமன்னார் குழுவின் அறிக்கை சுப்ரத்தா சர்க்கார் கூறியுள்ளது போல் "விவாதத்திற்கு அடிப்படை அமைத்துத் தரும்" அற்புதமான அறிக்கை என்பதில் சந்தேகமில்லை.

மேலும் கே. சந்தானம் அவர்களும் இதுபற்றிக் கூறுவது பொருந்தும் :

"Taking these recommendations as a whole it must be evident that they do not make serious inroads into the power of the Centre and their effect will be only to make the state autonomy more in conformity with the spirit of the constitution without having any destructive effect.'"

"இராசமன்னார் பரிந்துரைகளை ஒருங்கே நோக்குகையில் அவைகள் மத்திய அரசின் அதிகாரத்தில் தீவிரக் குறுக்கீட்டுக்கு வழிசெய்யவில்லை. சீர் குலைக்கும் விளைவு ஏதுமின்றி மாநில சுயாட்சிக் கோட்பாட்டை அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படைகளுக்கு ஒத்துவர வகை செய்பவையாகவும் உள்ளன என்பது தெளிவாகும்!"

# 9. ராஜமன்னார் குழுவும் அதன் பின்விளைவுகளும்

தி.மு.கழக அரசு ராஜமன்னார் குழு அறிக்கையை வெளியிட்டதன் மூலம் இந்திய அரசியல் வானில் சந்தேகம், தெளிவின்மை ஆகிய மேகங்கள் கலைந்து போயின. அதுமட்டுமல்ல; மாநில சுயாட்சிபற்றிய சிந்தனைகள் பல்வேறு அரசியல் முகாம்களிலிருந்தும் வெளிவரத் தொடங்கின.

மாநில சுயாட்சிபற்றி பல்வேறு அறிஞர்கள் பல்வேறு பருவங்களில் எடுத்துச் சொன்ன கருத்துகளும் மிகுந்த ஒளி பெற்றுத் திகழத் தொடங்கின.

உதாரணமாக—அரசியல் சட்டப் பிரிவு 263-ன் கீழ் மாநிலங்களுக்கிடையே உள்ள பொதுப்பிரச்சினைகளைப் பற்றி ஆராய்ந்து பரிந்துரை வழங்க மாநிலங்களுக்கிடையே உறவை வளர்க்க உறவு மன்றங்கள் ஏற்படுத்த வகை செய்கிறது.

ஆனால்—இந்த அரசியல் சட்டப்பிரிவு—காலத்தாலும்—மத்திய அரசின் 'ஒன்றியத்'தன்மையாலும் செயல் படாமல் நிறுத்திவைக்கப்பட்டன. இதைச் செயல்படுத்த வேண்டும் என்று பல்வேறு அறிஞர்களும் வலியுறுத்தினர்.

நிர்வாகச் சீர்திருத்தக் குழுவும் அத்தகைய சீரிய மன்றங்களின் தேவையை வலியுறுத்தியுள்ளது.

இராசமன்னார் குழுவும் மாநிலங்களிடையே அத்தகைய உறவு மன்றங்கள் உடனடியாகத் தேவை எனச் சுட்டிக்காட்டியுள்ளது.

பாதுகாப்பு, வெளிநாட்டுறவு தவிர தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒவ்வொரு சட்ட வரைவைப்பற்றியும் அத்தகைய மன்றத்தின் பரிந்துரைகளைப் பெற்று, பாராளுமன்றத்தின் முன் வைக்கப்படல் வேண்டும்.

அத்தகைய மன்றத்தின் தலைவராக தலைமையமைச்சரும், மாநிலங்களின் முதல் அமைச்சர்களும் இருத்தல் வேண்டும். மைய அமைச்சர் எவரும் இருக்கக் கூடாது என்று பரிந்துரை செய்துள்ளது.

அதாவது—

1. தேசீய முக்கியத்துவம் வாய்ந்த அல்லது ஒன்று அல்லது பல மாநிலங்களின் நலனைப்பாதிக்கக்கூடியதாய் இருக்கிற மசோதா ஒவ்வொன்றும் நாடாளுமன்றத்தில் கொண்டுவருவதற்கு முன்பு மாநிலங்களின் உறவு மன்றத்திற்கு அனுப்பப்பட வேண்டும். இந்த மசோதா கொண்டு வரப்படும் சமயத்தில் இம்மன்றத்தின் கருத்துரைகள் நாடாளுமன்றத்திற்கு அளிக்கப்பட வேண்டும்.

2. தேசீய முக்கியத்துவம் வாய்ந்த அல்லது ஒன்று அல்லது பல மாநிலங்களைப் பாதிக்கக் கூடிய பிரச்சினையில் மாநிலங்களின் உறவுமன்றத்தைக் கலக்காமல் எந்த முடிவையும் மைய அரசு மேற்கொள்ளக் கூடாது.

3. பாதுகாப்பு—வெளி நாட்டுத் தொடர்பு போன்ற பொருள்களைப் பொறுத்தவரையில் விதி விலக்கு அளிக்கப்படலாம்.

4. மாநிலங்களின் உறவு மன்றத்தின் பரிந்துரைகள் மத்திய அரசையும் மாநிலங்களையும் பொதுவாகக் கட்டுப்படுத்தும். யாதேனும் ஒரு காரணத்திற்காக இத்தகைய பரிந்துரை எதையேனும் மத்திய அரசு தள்ளுபடி செய்தால், அதைத் தள்ளுபடி செய்ததற்கான காரணத்தை நாடாளுமன்றத்திலும் சட்டமன்றத்திலும் வைக்கவேண்டும்.

இத்தகைய யோசனைகள் பரிசீலித்து நடைமுறைப்படுத்த வேண்டியவை ஆகும். இன்றிருக்கும் தேங்கிய நிலையை மாற்றிட உதவும் யோசனைகளாக இதைக் கருத இடம் உண்டு.

கடன்கள்—நிதிகள் பற்றிய புதுச் சிந்தனைகளும் இன்றைய தினம் தோன்றியுள்ளன.

நிதியைப் பொறுத்தவரை மத்திய அரசு எவ்விதம் மூன்று வகை தொடர்பிலும் சாட்டையைத் தன்கைவசம் வைத்துள்ளது என்பதை அறிஞர் அண்ணு அவர்கள் விளக்கியுள்ளதை முன்பே நாம் கூறியுள்ளோம்.

அதற்கு அரண் செய்யும் வகையில் 1969-ஆம் ஆண்டு வெளியான "இந்தியாவில் மத்திய மாநில உறவுகள்" —என்ற நூலில் "மத்திய மாநில உறவுகளில் பொதுநிதி" என்ற தலைப்பின்கீழ் இந்திய அரசின் முன்னுள் தணிக்கை கணக்குத் தலைமையாளர் (Former Auditor and Comptroller Generel of India) திரு A. K. சந்தா கூறுகிருர்:

"அரசியல் சட்டம் உருவான காலத்திலிருந்து அரசியலை விட, நிதியைச் சார்ந்த பிரச்சினைகளில் மாநிலங்கள் பறிகொடுத்த உணர்வினையே பெற்றன. முன்னுள்—இந்நாள் மாநில முதல்வர்களெல்லாம் தாங்கள் நசுக்கப்படுவதை உணர நேரிட்டது. மத்திய அரசும் மாநிலங்களும் காங்கிரசின் கையில் இருந்தவரை, போதாத நிதி உதவி அளிப்பதுகுறித்து மாநிலங்கள் சிற்சில சமயங்களில் மனம் வெதும்பியது உண்டு. ஆனால், மத்திய அரசின் அதிகாரத்திற்கு எதிராக அறைகூவல்விடவில்லை; அல்லது அதனுடைய அதிகாரப்பிடியைத் தளர்த்திக் கொள்ளக் கோரவும் இல்லை"

"ஆனல், இந்த நிலை 1967-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் ஒரு கணப்பொழுதில் மாறியது. காங்கிரசினுடைய ஏகபோக அதிகாரத்தைத் தகர்த்தெறிந்த பொதுத் தேர்தல்கள், மாநிலங்கள், மத்திய அரசிற்குத் தாள் பணிந்து நிற்கிற நிலைமையையும் தகர்த்தது.

மத்திய - மாநில உறவுகள் இன்று அமைந்திருக்கும் பான்மையில் - மத்திய - மாநில அரசுகளினுடைய மூலவளங்களேயும் பங்குகளேயும் இணைத்து செயல்பட இயலாதொன்று, நிதித் துறையில் மத்திய - மாநிலங்களின் பங்கை சரியாக வரையறுத்துக் கொள்வது சாலச்சிறந்ததாகும்" — என்கிருர் திரு. சந்தா அவர்கள்.

"Ever since the Constitution was made, the states felt deprived more so financially than politically.

"All Chief Ministers past and present alike, have at any time or other felt the crunch.

"So long as the Congress was in control of the union and all the states, there were occasional whispers about the inadequacy of financial assistance given, but no challange to the Centre's authority or a demand for loosening its hold"

"But all this changed almost overnight in early 1967. The General Elcctions which demolished the monolith of Congress power also destroyed the subservience to the states of the Centre - Union - State relations have now reached a stage in which intermingling of resources and functions will no longer work smoothly. It is best to have a clear cut division"

திரு. சந்தாவின் கருத்தை இங்கே வலியுறுத்தும் போது சிலருக்கு ஒரு சந்தேகம் தோன்றலாம்.

காங்கிரஸ் அரசுகள் 1967-ல் வீழ்ந்த சூழ்நிலையை வைத்துத்தானே இந்தக் கருத்தை சந்தா போன்ற பல அறிஞர்களும் வலியுறுத்துகிருர்கள் ?

இப்போதுதான் பழைய நிலைக்கு இந்திரா காந்தியாரின் ஆளும் கரங்கிரஸ் வந்துவிட்டதே ? ஓரிரண்டு மாநிலங்கள்

தவிர மற்ற மாநிலங்கள் அனைத்தும் காங்கிரசின் ஏகபோகத்திற்குவந்து விட்டனவே? இனி - இந்த வாதங்களும், கருத்துகளும் எடுபடுமா?

—இப்படிச் சந்தேகம் தோன்றுவது இயல்பு.

ஆனல், அரசியல் சட்டமியற்றியவர்களும், அதற்குப்பின் ஆண்டவர்களும் நினைத்துப் பார்க்காத நிலை 1967-ல் ஏற்பட்டது.

அந்த அனுபவம் - 1967- ஆம் ஆண்டோடு நின்றுவிடுவதல்ல. 1971-க்குப் பின் நிரந்தரமாக மறைந்து விடுவதுமல்ல.

ஆகவே, ஏற்பட்ட அனுபவத்தை வைத்துக் கொண்டு - எதிர்காலத்தையும் எண்ணிப் பார்த்து தக்க முறையில் நிதியுறவுகளை வகைப்படுத்திக் கொள்வதுதான் விவேகிகளின் செயல் ஆகும்.

அதுமட்டுமல்ல - காங்கிரசல்லாத அரசுகள் கோரிய இந்தப்பிரச்சினையை - அதற்குப் பின் வந்த காங்கிரஸ் அரசுகள் கோராமல் இருந்தால் - மக்கள் அதை அனுமதிக்கவும் மாட்டார்கள்- தங்கள் மாநில அரசு - மத்திய அரசின் ஏகபோகத்திற்குப் பயந்து மாநிலத்தின் நலன்களை எடுத்துப் பேசாத அரசு என்றும் கருதி வெறுக்கத் தொடக்கி விடுவார்கள்.

இதன் தொடர்பாக அண்மைக்கால நிகழ்ச்சி ஒன்றைக் கோடிட்டுக் காட்டுவது சாலச் சிறந்தது. 1973 டிசம்பர் 8 ம் தேதி புதுடில்லிச் செய்தி கூறுவதென்ன?

தேசிய வளர்ச்சிக் குழுக்கூட்டத்தில் கலந்துகொண்ட, காங்கிரசல்லாத அரசின் முதல்வரான டாக்டர் கலைஞர்" "விவசாயம், கல்வி, சுகாதாரம் போன்ற மாநில அரசுத்துறைகளில் மத்திய அரசுக்கு நிதி ஒதுக்கீடுகள் உள்ளன. திட்ட நடைமுறை இருந்து வருகையில். மாநில அரசும் மத்திய திட்டக்குழுவும் ஒன்றுபட்டு இயங்கி வருகையில் மாநிலப்

பொறுப்புகளில் உள்ள துறைகளில் மத்திய அரசு திட்டங்களும் மத்திய அரசால் கொண்டுவரப்பட்ட திட்டங்களுடன் எதற்காக?' என்று கேட்டார். 'மாநில அரசுக்குட்பட்ட துறைகளில் மத்திய திட்டம் எதுவும் இருக்கக் கூடாது" என்று கூறினர்.

காங்கிரசல்லாத அரசின் கருத்து என்பதற்காக இந்திரா காங்கிரசைச் சேர்ந்த முதல்வர்கள் எதிர்க்கவில்லை. அதற்கு மாருக கர்நாடக முதல்வர் தேவராஜ் அவர்கள் இந்தக் கருத்தை ஆதரித்தார்.

"மத்திய அரசுத் துறையின் கீழ் ரு 1946 கோடி விவசாயத்திற்காகவும், கல்விக்காக 484 கோடி, சமூக நலனுக்காக ரூ. 200 கோடி என்று பெருந் தொகைகளை ஒதுக்கியிருப்பதில் நியாயமில்லை.

ஆனல் மாநில அரசுத்துறை சம்பந்தப் பட்டவரை விவசாயத்திற்கு ரூ. 2717 கோடி- கல்விக்கு ரு 1152 கோடி, சமூக நலனுக்கு ரூ- 200 கோடி மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது. இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும்" —என்ருர் அர்ஸ்.

இது மாநிலத்தின் நலன்பற்றிய நியாயமான கருத்தை ஆதரித்தே ஆக வேண்டும் என்ற சரித்திரக் கட்டாயத்தைக் காட்டும் நிகழ்ச்சி.

இத்தகைய சாதக - பாதங்களை எண்ணிப் பார்த்து - எந்த எதிர் காலத்திற்கும் - எந்தக் கட்சி அரசு வந்தாலும் போனலும் மாநில அரசு எனும் அடிப்படையில் நின்று பிரச்சினைகளை அணுகி நிதியுறவுகளை வகைப்படுத்திக் கொள்ளுவதே சாலச் சிறந்ததாகும்.

அடுத்துப் பொதுக் கடன்கள் பற்றியது. ஒவ்வொரு மாநிலமும் பொதுக்கடனை எழுப்புவதற்கு முன்னல், மத்திய அரசின் அனுமதியைப் பெற்ருக வேண்டும் என்ற நிலை இன்று.

28. 9. 1973 - அன்று அரசு — நிதி - பொருளாதாரம் பற்றிய அனைத்திந்திய மாநாட்டில் கலந்துகொண்ட தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளபடி மாநில அரசுகள், அவையவற்றின் வருவாய் சக்திக்கு ஏற்ப - அவை வகுக்கின்ற திறன்மிகு திட்டங்களுக்கு ஏற்ப வங்கிகளிடமிருந்து கடன்களைப் பெறும் சுதந்திரம் பெற்றவையாக இருக்கவேண்டும். இதுவே உண்மையான கூட்டாட்சிக் கோட்பாட்டிற்கு உகந்ததாகும்.

மாநில அரசுகள் மத்திய அரசுக்குத் தாங்கள் செலுத்த வேண்டிய கடன்களை ஒழுங்காகச் செலுத்தி வருகிறவரையில் அவை தாங்கள் எழுப்பப் போகின்ற கடன்களுக்கு மத்திய அரசின் முன் அனுமதியைப் பெறுவது அவசியமற்ற தாகும், தேவையானால் மேல்வரம்பு நிர்ணயிக்கலாம். இந்த வகையில் அரசியல் சட்டம் விரைவில் திருத்தப்பட வேண்டும்

இன்றுள்ள நிலையில் வங்கிகள் மத்திய அரசினால் இறுக்கமான கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டுள்ளன

வங்கிகள் செயல்படுவது பற்றிய கொள்கைகளை உருவாக்குவதில் மாநில அரசுகள் முற்றிலும் கலந்தாலோசிக்கப் படவேண்டும் என்று கலைஞர் அவர்கள் இன்றைய நிலையின் தேவையை விளக்கியுள்ளார்.

வங்கிகள் மட்டுமல்ல - மாநில அரசுகளின் ஆலோசனைகள் - முடிவுகள் புறக்கணிக்கப்படும். அல்லது இரண்டாந் தரமாக்கப்படும் பல பிரச்சினைகள் உள்ளன.

உதாரணமாக - ஒரு மாநிலத்தில் சட்டமன்ற மேலவை இருக்கலாமா - வேண்டாமா ? - எனத்தீர்மானிக்க வேண்டியது அந்த மாநிலம்தான்.

தமிழகத்தில் சட்ட மன்ற மேலவை இருக்கலாம் என அறிஞர் அண்ணா அவர்கள் கூறி அதற்கான ஒரு அழகான உவமையும் சொன்னார்.

சூடுள்ள காப்பி இருக்கும் 'கப்' சட்டசபை: அதை ஆற வைக்கும் 'சாசர்' - மேலவை எனக்கூறினர்.

தமிழகம் – மேலவையை விரும்பலாம். ஆனால் வேறுபல மாநிலங்கள் மேலவை தேவையில்லை எனக்கருதலாம். அப்படி அந்த மாநிலம் கருதுமானால், அதற்கான தீர்மானத்தை நிறைவேற்றி மேலவையைக் கலைத்துவிட முடியாது. அதற்கு பாராளுமன்றம் சட்டமியற்ற வேண்டும் என்ற சட்ட அமைப்பு இருக்கிறது. இது தேவைதானா? என்பது புதிய சிந்தனையின் கேள்வியாகும்.

அதைப் போலவே நாடாளுமன்றம் ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு அவைகளின் சட்டமன்றங்களின் தீர்மானத்தோடு கூடிய ஒப்புதலுடன் பொதுவான சட்டங்களை நிறைவேற்றலாம். ஆனால் அச்சட்டங்களிலிருந்து, அவசியம் ஏற்படுகையில் விடுவித்துக் கொள்ள மாநிலங்களுக்கு அதிகாரம் இல்லை. இது தேவைதானா ? என்பதும் ஒரு கேள்வியாகும்.

நீதித்துறையிலும் ஒரு புதிய சிந்தனை வந்துள்ளது.

உயர்நீதி மன்றம் (High Court) என்பது மாநில நீதி மன்றமாகும்.

உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஊதியம் மாநில அரசுகளின் செலவினமாக - பற்றாக இருக்கிறது.

ஆனால் உயர் நீதிமன்ற நீதிபதித் தேர்வுக்கு ஒப்புதல் அளித்து நியமனம் செய்வது மத்திய அரசு-குடியரசுத்தலைவர்.

நீதிபதியின் நியமனம்—மாநில அரசிற்கே இருக்கலாம். அந்த வகையில், நீதிபதிகளின் நியமனத்தில் ஏற்படும் தாமதம்—அதன் காரணமாக நீதிமன்றத்தில் வழக்குகள் தேங்கி மக்களுக்கு ஏற்படும் இடைஞ்சல்களைத் தவிர்க்கலாமே ?— என்பதும் புதிய சிந்தனைக் கேள்வியாகும்.

மா—5

இதுபோன்றே—சட்டம் ஒழுங்கு பிரச்சினையில் மத்திய அரசின் தலையீடு இருக்கிறது.

சட்டம் ஒழுங்கு என்பது மாநில அரசின் எல்லையில் இருக்கிறது.

மாநில அரசின் கீழ் காவல் துறை ஒன்றிருக்க மத்திய அரசின் கீழ் ரிசர்வ் போலீஸ் எதற்காக ?

இந்தக் கேள்வி காங்கிரசல்லாத மாநிலங்கள் மட்டும் கிளப்புகின்ற கேள்வி அல்ல! காங்கிரஸ் அமைச்சரவைகளே இதுபற்றி அதிருப்தி அடைந்தன.

இதுபற்றி 1967-ல் 'மத்திய—மாநில உறவுகளில் எதிர் காலத்தில் உருவாகக் கூடிய நிலைகள்'' என்ற தலைப்பில் இந்து நாளிதழில்...

''உள் நாட்டு அமைதியையும் சட்ட ஒழுங்கையும் பாது காத்தல் போன்ற மாநிலங்களுக்கே உரித்தான பொறுப்புக் களில் மத்திய அரசு தலையிட்டதினால் ஓரளவு மாநிலங்கள் அதிருப்தி அடைந்துள்ளன.''—என்று சி.வி.எச். ராவ் கூறியுள்ளார்.

சட்டங்களைப் பொறுத்தவரை—மாநிலங்கள் இயற்றும் சட்டங்கள் பலவற்றிற்கு ஜனாதிபதியின் ஒப்புதல் வேண்டி மாநிலங்கள் காத்துக் கிடக்கின்ற அவல நிலை இன்று.

தீவிரமாகச் செயல்பட்டுவரும் தமிழக அரசால் ஒப்புத லளிக்கப் படுகின்ற சட்டங்கள் ஜனாதிபதியின் ஒப்புதலுக்குக் காத்துக் கிடக்கின்றபோது சீரிய பணிகள் மாநிலத்தில் நடைபெறுவதில் தடைகள் ஏற்படுகின்றன.

காந்தியார் பிறந்த நாளன்று அமுலுக்கு கொண்டுவரப் படவிருந்த மைசூர் மாநிலம் ஒப்பளித்த நிலச்சீர்திருத்த சட்ட வரைவு ஜனாதிபதியின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு

கையெழுத்துப் பெறுவதில் மிகத் தாமதம் ஏற்பட்டது குறித்து அந்த மாநில முதல்வர் மிக வருத்தம் தெரிவித்தார்.

உழைப்பின் உயர்வை மதித்து உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்று சட்டம் இயற்றி, கையெழுத்துப் பெறுவதற்கு மத்திய அரசிடம் நிற்க வேண்டியுள்ளது.

கண்ணீர் வடித்துக் கொண்டு நிற்கும் விவசாயிகளுக்கு அவர்கள் பட்ட கடனை தவணை முறைகளில் கட்ட அனுமதிக்கும் விவசாயிகள் சட்டத்திற்கு ஜனாதிபதியின் ஒப்புதலுக்குக் காத்திருக்க வேண்டியுள்ளது.

நமது மாநிலததில் ஐந்து லட்சம் தறிகளும் 20 லட்சம் நெசவாளர்களும் இருக்கிறார்கள். நூலை உற்பத்தி செய்கிற அதிகாரம் நம்மிடம். அதனைப் பங்கிட்டுத் தருகிற அதிகாரம் டில்லியில்.

200 மில்களில் உற்பத்தியாவது *10* லட்சம் பேல் (கட்டுகள்). நமது தேவை 2 லட்சம் தான்.

எனினும் நமது நெசவாளர்களுக்கு போதிய நூல் கிடைக்கவில்லை. இதற்குக் காரணம் மாநிலத்திற்கு சரியான விநியோக அதிகாரம் இல்லாததே!

தேன் தமிழின் வித்தகன்—ராஜ ராஜ சோழனுக்கு அவன் கட்டிய தஞ்சைப் பெரிய கோவிலில் சிலை எழுப்ப விரும்பினோம். மத்திய அரசு அனுமதி தர மறுத்தது. கோவிலுக்கு வெளியே சிலையை வைத்துள்ளோம்.

திரைப்படத் தயாரிப்புகளை வெளியிட சரிபார்த்து ஒப்புதல் அளிக்கிற அதிகாரம் மத்தியில்! ஒரு மாநிலத்தின் தின் பண்பாட்டை—மக்கள் மனோ நிலையைப் புரிந்து கொள்ளும் திறன் மத்திய அரசைவிட மாநிலத்திற்குத் தான் இருக்க இயலும்.

இந்த அதிகாரம் மாநிலத்தில் இருப்பது மிகவும் பொருத்தமானது. ஆனால் இதுபற்றி ஆராயவே அவர்கள் தயாராக இல்லை. இவையெல்லாம் மாநிலங்கள் இன்றுள்ள தாழ்ந்த நிலையைக் காட்டுவதாகும்.

ஆயினும் ராஜமன்னர் குழுவின் அறிக்கைக்குப் பின்னர் ஏற்பட்ட பின் விளைவுகளும் கருத்துகளும் மாநில சுயாட்சிக்கு வலிவு சேர்க்கும் வகையில் அமைந்துள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது.

# 10. தேர்தல் அறிக்கையும் தமிழக எழுச்சியும் !

மாநில சுயாட்சிக் கொள்கை தமிழகத்து மக்கள் எழுச்சியோடு ஒப்புக் கொண்ட கொள்கையாகும். ஏதோ—திராவிட முன்னேற்றக் கழகம் தனி அறையில் கூடி நிறைவேற்றிய கற்பனுவாதம் மிகுந்த கோரிக்கை அல்ல—மாநில சுயாட்சி!

1971-ஆம் ஆண்டுத் தேர்தல் எல்லா வகையிலும் எழுச்சி மிகுந்ததாகவும், தமிழகம் எழுச்சிகொண்ட அந்தத் தேர்தலின்போது திராவிட முன்னேற்றக் கழகம் தனது தேர்தல் பிரகடனத்தில் கூறியது:

'இந்திய அரசியல் முறை கூட்டாட்சி முறை (Federalism) என்று வர்ணிக்கப்பட்டாலும் அந்தத் தராசு மத்திய அரசின் பக்கம் அதிகபட்சம் சார்ந்திருப்பதால் அதிகாரத் துறையிலும் நிதித் துறையிலும் மாநிலங்கள் செவ்வனே செயல்பட முடியாமல் தடைகள் இருப்பதால்—அதே நேரம் இந்தியா வலுப் பெற்றதாக இருக்க வேண்டும் என்ற இலட்சியத்திற்கும் ஊறுதேடாமல் எந்தெந்தத் துறைகளில் வலுவான இந்தியா இயங்குவதற்காக மத்திய அரசு செயல்பட வேண்டுமோ அந்த அதிகாரங்களை மட்டும் மத்திய அரசிடம் கொடுத்துவிட்டு, இதர அதிகாரங்களை மாநிலங்களுக்கு வழங்கப்படும் வகையில் அரசியல் சட்டத்தைத்திருத்தி மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கருதுகிறோம்.

"அரசியல் துறை அதிகாரங்களும் நிதித்துறை அதிகாரங்களும் மாநிலங்களுக்கு மேலும் தேவை என்று கேட்பது மாநிலங்களில் இருப்போர் அதிக அதிகாரங்களை நுகர வேண்டுமென்ற ஆசையால் அல்ல; மாநில அரசுகள் மக்களுக்கு நெருங்கிய நிலையில் இருப்பதால் அந்த அதிகாரங்களை மத்திய அரசிடமிருந்து மேற்கொண்ட பிறகே எதிர்பார்க்கும் விதத்தில் மக்களுக்குத் தொண்டாற்ற முடியும் என்பதால் தான் மாநில சுயாட்சி கோருகிறோம் என்பதையும் தெளிவாக்க விரும்புகிறோம்."

—இவ்வாறு 1971-ஆம் ஆண்டு தி.மு.கழகத் தேர்தல் அறிக்கை கூறுகிறது. அந்தத் தேர்தல் அறிக்கையை ஏற்றுத் தான் தமிழக மக்கள் 183 இடங்களைத் தந்தார்கள்.

இந்தத் தேர்தல் அறிக்கையிலுள்ள ஒவ்வொரு சொல்லும் மிகுந்த—ஆழமான பொருளைத் தருவதாகும்.

"கூட்டாட்சி என்ற கூறிக்கொண்டாலும் அந்தத் தராசு மத்திய அரசின்பக்கம் அதிகபட்சம் சாய்ந்திருக்கிறது"—என்ற நமது தேர்தல் அறிக்கை கூறுவது எவ்வளவு ஆதாரங்கள் நிரம்பியது என்டதை கடந்த அத்தியாயங்களில் கண்டோம்.

அதுமட்டுமல்ல; இந்திய அரசியல் சட்டத்தில் 97 அதிகாரங்கள் மத்திய அரசிற்கு; 66 அதிகாரங்கள் மாநில அரசிற்கு என்று பிரிக்கப்பட்டிருக்கிறது.

இதுதவிர 47 அதிகாரங்கள் பொதுப் பட்டியல் (Concurrent) என்ற பெயரால் இருக்கின்றன. (விவரம்—இணைப்பில் காண்க)

இந்தப் பொதுப்பட்டியல் அதிகாரங்கள் மாநிலங்கள்—மத்திய அரசு ஆகிய இரண்டிற்கும் பொதுவானவை. அதாவது சர்வ வல்லமை பெற்ற மத்திய அரசும் அதில்வருகிற போது நிச்சயம் பொதுப்பட்டியலில் உள்ள அதிகாரங்களின் மேலாதிக்கம் மத்திய அரசிடமே போய்ச்சேரும்.

அப்படி அதிகாரங்கள் மத்திய அரசிற்குப் போய்ச் சேர்ந்து விடும் என்று அஞ்சினர். முன்னுளிலிருந்த அரசியல் துறை அறிஞர்கள் இப்போது அதைக்கண்கூடாகக் காண்கிறோம்.

கூட்டாட்சி நடைபெறுகிற நாட்டில் பொதுப்பட்டியல் என்ற ஒன்று இருப்பதே முரண்பாடாகும்.

இந்திய அரசியல் சட்டத்தில் காணப்படும் 47 அதிகாரங்களைக் கொண்டு சட்டமியற்ற பாராளுமன்றம் முழு அதிகாரம் பெற்றிருக்கிறது.

மாநில சட்டமன்றத்தினுடைய அதிகாரம் அந்த வகையில் பாராளுமன்றத்திற்கு உட்பட்டதுதான். ஆகவே, அதிகாரங்கள் குவிந்து போவதற்குத்தான் பொதுப்பட்டியல் ஆக்கம் அளிக்கிறது. இது கூட்டாட்சித் தத்துவத்தின் முதுகெலும்பை முறிப்பதாகும். இது தொடர்பாக பங்களாதேஷ் பிரதமர் முஜிபுர் ரகுமான் கருத்து சிந்தனைக்குரியதாகும்.

"நிர்வாகப் பணியிலாகட்டும்; வளர்ச்சிப் பணிகளிலாகட்டும் ஒரு அரசைத் திறமை மிகுந்ததாக ஆக்குவது அதிகாரத்தை பரவல் ஆக்குவதால்தான் முடியும். அதிகாரத்தை ஒரே இடத்தில் குவித்துவைப்பதால் முடியாது.

''எந்த இலாகாக்களை மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து கூட்டாகவும், திறமையாகவும் அதிகப்பயனுள்ள வகையிலும் நிர்வகிக்க முடியுமோ, அந்த இலாக்காக்கள் மட்டுமே மத்திய அரசிடம் இருக்கவேண்டும் என்பதும் கூட்டாட்சித் தத்துவத்தின் முக்கியத்துவம் ஆகும்.

''ஜில்லாபோர்டு—நகராட்சி போன்ற உள்ளாட்சித் துறைகள் இந்தத்தத்துவத்தின் அடிப்படையில் இயங்குகின்றன.

''வேற்றுமையில் ஒற்றுமை; அதிகாரக்குவியலின்றி ஒற்றுமை; அதிக அதிகாரக் குவியலின்றி ஏற்படுகின்ற இணைப்பு தேவை!

"எந்த இலாக்காக்களில் எல்லா மாநிலங்களுக்கும் தனித் தனி என்று பிரிக்கமுடியாத நலன்கள் பின்னிக் கிடக்கின் றனவோ அந்தஇலாகாக்கள் மட்டுமே மத்தியஅரசிடம் இருக்க வேண்டும் என்பது கூட்டாட்சித் தத்துவத்தின் முதுகெலும் பாகும்!"

– இப்படிப்பட்ட கூட்டாட்சித் தத்துவத்தின் முதுகெலும்பு வலிவற்றதாகப் போய் விடக் கூடாது என்றுதான் தி.மு.கழகம் மாநில சுயாட்சியைக் கோருகிறது.

தேர்தல் பிரகடனத்தில் அடுத்ததும்—அடிக்கடி வலியுறுத் தப்படுவதுமான ஒரு விஷயம்- கூட்டாட்சிக் கோரிக்கை, இந் திய ஒற்றுமைக்கு ஊறு செய்யாத வகையில் இருக்கவேண்டும் என்பதாகும்.

நல்லதோர் கூட்டாட்சியைப் பற்றிப் பேசவரும் பேராசிரி யர் ஜேம்ஸ் கூறுகிறுர்:

"The problem of every Federation is to keep the centrifugal and centripetal forces in equi!ibrium, so that neither the planet states shall fly off into the space nor the sun of the Central Government drew them into its consuming fires"

"கூட்டாட்சியின் பிரச்சினேயானது மையத்திலிருந்து விலகிச் செல்லும்; மையத்தை நோக்கி நெருங்கிச் செல்லும் சக்திகளே சமநிலேயில் வைத்திருப்பதாகும்.

"அதாவது மாநிலங்களாகிய கோள்கள் மத்திய அரசு எனும் சூரியனிடத்திலிருந்து விலகிச் சென்று விண்வெளியில் பறந்து விடாமலும் இருக்கவேண்டும். அதேநேரத்தில் மத்திய அரசு எனும் சூரியனே நோக்கி அருகில் சென்று தீய்ந்து விடாமலும் இருக்கவேண்டும்."

—இவ்வாறு பேராசிரியர் ஜேம்ஸ் கூறும் 'உதாரணமான கூட்டாட்சி' தத்துவத்தைத்தான் திராவிடமுன்னேற்றக் கழகம் எடுத்துக்கூறி வாதங்களை வைக்கிறது.

வாதங்கள்—கருத்துகளை வைப்பதிலிருந்தே நமது தூய்மையை புரிந்து கொள்ளவேண்டும்.

இதுதொடர்பாக—தி.மு.கழகம் நியமித்த 'மாநிலசுயாட்சி' ஆய்வுக்குழுவின் உறுப்பினரும், சிறந்த தத்துவ விளக்குநருமான (ஐடியலாக்) முரசொலிமாறன் 1973 அக்டோபரில் தந்தை பெரியார் அறிஞர் அண்ணு பிறந்தநாள் விழாக்களில் கூறிய கருத்துரைகள் நினைவு கொள்ளத் தக்கதாகும் :

"பிரிவினை கேட்பதற்கு விளக்கங்களும் வியாக்கியானங்களும் தேவை கிடையாது

"இன்னின்ன காரணங்களுக்காக பிரிவினை கேட்கிறேம்; எவ்வளவு நியாயமான காரணங்கள் பார்த்தீர்களா?"—என்று அயூப்கானிடம் வாதங்களை அடுக்கிக்காட்டி அவனைத் திருப்தி செய்த பிறகா பங்களா தேஷ் மக்கள் பாக்கிஸ்தானிடமிருந்து பிரிந்தார்கள்?

"பிரிவினைக்கு வாதங்கள் தேவையில்லை; நெஞ்சு உறுதி தான் தேவை.

"எத்தனைபேர் சாகத்தயார் என்கிற கணக்குத்தான் தேவை!

"நாங்கள் மாநில சுயாட்சி கேட்பதால்தான் வாதங்களை அடுக்கிக்காட்டுகிறேம்.

"இப்போது மாநில சுயாட்சிக்கொள்கை அறிவார்ந்த மக்கள் அனைவராலும் ஒப்புக்கொள்ளும் நிலையை அடைந்து வருகிறது."

—இவ்விதம் முரசொலி மாறன்—கழகத்தின் தூய நோக்கத்தை வாதமுறையில் எடுத்துக் கூறியுள்ளார்.

கழகத் தேர்தல் அறிக்கையில் காணப்படும் முடிவான வேண்டுகோள் — உண்மையான கூட்டாட்சித்தத்துவத்திற் கேற்றபடி அரசியல் சட்டம் திருத்தப் படவேண்டும் என்பதாகும்.

அரசியல் சட்டம் திருத்தப்படுவதா? என்று யாரும் ஆட்சேபம் தெரிவிக்கமாட்டார்கள்.

ஏனெனில், இதுவரை 25 முறைக்கு மேல் அரசியல் சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது. மிக உயர்ந்த நோக்கத்திற்காக—மாநிலங்கள் முழு சுயாட்சி பெறவும்—மாநில மக்களுக்கான நற்பணிகள் மிகவும் தீவிரமடையும் இலட்சியத்திற்காகவும் அரசியல் சட்டம் திருத்தப்படுவது அனைவராலும் வரவேற்கக் கூடிய ஒன்றே ஆகும்.

# 11. சுயாட்சியும் அரசியல் கட்சிகளும்

சுயாட்சிக் கோரிக்கையை - இந்தியா கூட்டாட்சித் தன்மையோடு இயங்க வேண்டும் என்ற கோரிக்கையை இந்தியாவின் அரசியல் கட்சிகள் எவ்வாறு நோக்குகின்றன என்பதை இந்த அத்தியாயத்தில் காண்போம்.

முதலில், காங்கிரஸ் கட்சியை எடுத்துக் கொள்வோம். இதற்கென ஒரு தெளிவான கொள்கையை வகுத்தவர் காந்தியார் அவர்கள். (கோகலே 'மாநில சுயாட்சி' போன்ற திட்டத்தைக் கூறினர் என்பாரும் உண்டு.)

காந்தியார் தனது அரசியல், பொருளாதாரக் கொள்கையை மேல் நாட்டு அறிஞர்களான தோரோ, பாகுனின், கார்லைல், டால்ஸ்டாய் போன்றவர்களின் வழிகாட்டுதலில் வகுத்துக் கொண்டார்.

சமூகக் கொள்கையைப் பொறுத்தவரை இந்த நாட்டுக்கேற்ற அதேசமயம் கொஞ்சம் பழமைப் பிடிப்புள்ள கொள்கையை வகுத்துக் கொண்டார்.

நிர்வாகங்களே இல்லாத சமூகம் (Society without any administration) என்பதும், சமூகத்தில் கடைக் கோடியில் இருப்பவனுக்கும் கடைத்தேற்றம் (Unto the last) என்பதும் அவரது இலட்சியக் கனவாகும்.

அரசியலைப் பொறுத்தும், பொருளாதாரத்தைப் பொறுத்தும் அவர் அதிகாரப் பரவல்முறை தத்துவத்தை (Philosophy docentralization) த்தான் அவர் பலமாக ஆதரித்தார்.

அதிகாரங்கள் டில்லியிலும் குவிக்கப்படக்கூடாது; சென்னையிலும் குவிக்கப்படக்கூடாது; கிராமங்களுக்குச் செல்ல வேண்டும்; கிராம ராஜ்யங்கள் உருவாக வேண்டும் என்று அவர் சொன்னார்.

இவ்வளவு தெளிவாக அதிகாரப் பரவல்முறையை அவர் ஆதரித்தபோதிலும், அவரது கட்சியினர் அதைக் கடைப் பிடித்தார்களா என்றால் சரித்திரம் வேறுவிதமாகச் சொல் கிறது

தொடக்ககாலத்தில் காந்தியாரின் கொள்கைகளுக்குத் தலையாட்டிவந்த காங்கிரஸ், அவர் மறைந்ததும் தனது போக்கை மாற்றிக் கொண்டது. அதற்கு மூன்று காரணங்கள்.

1. காந்தியாரின் கொள்கையை உள்ளூர ஏற்றுக் கொள்ளாமலிருந்தது.

2. நாட்டுப் பிரிவினையின்போது ஏற்பட்ட சில கசப்பான அனுபவங்கள்.

3. இருபது ஆண்டு ஆட்சிக்காலத்தில் அதிகாரக் குவியலால் ஏற்பட்ட சில சுவையான அனுபவங்கள்.

இந்த மூன்று காரணங்களில் கடைசிக்காரணம்தான் காங்கிரஸ் கட்சியிலுள்ள அனைவரது நெஞ்சிலும் அதிகாரக் குவியல் முறையை ஆதரிக்கும் போக்கை உருவாக்கியது.

ஆயினும், 1967 க்குப்பின் அகில இந்திய ஆதிக்கம் காங்கிரசின் கையைவிட்டுப் போயிற்று. மாநிலங்களில் ஆதரவு இழந்து மத்தியிலும் ஊசலாடும் தன்மையில் காங்கிரஸ் பரிதாபக் கோலம் கொண்டு நின்றது. அகில இந்தியத் தலைவர்கள்-மாநிலத் தலைவர்களாக குறைந்து போனார்கள்.

ஒரு வேளை மத்திய அரசில் வேறு கட்சியும், மாநிலங்களில் காங்கிரஸ் கட்சிகளுமான ஒரு நிலை இருந்திருக்குமானால் நிச்சயம் காங்கிரஸ் கட்சி மிகப்பெரிய 'மாநில சுயாட்சி'ப் போர்ப்படையாக மாறி இருக்கும்.

இதன் உட்கருத்து, காங்கிரஸ் கட்சி, சுயாட்சி அல்லது கூட்டாட்சித் தத்துவத்தை தனது சுயலாபத்திற்காக பயன் படுத்தும் போக்குள்ளது என்பதுதான்.

உதாரணமாக-காங்கிரஸ் ஆட்சிகாலத்தில் தமிழ் நாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் உமாநாத் என்பவரை தமிழகப் போலீஸ் கைது செய்தது. அவரைக் கைது செய்யும் அதிகாரம் மாநிலத்திற்கு உண்டா?-என்ற கேள்வி எழுந்தது.

அதற்கு, இன்றையதினம் மாநில சுயாட்சி என்ருலே சீற்றம் கொண்டு பேசிடும் பக்தவத்சலம் அன்றைய முதல்வ ராக இருந்து தமிழக சட்ட மன்றத்தில் பதில் சொன்ஞர்;

"மாநிலத்திற்கு 'சாவர்னிட்டி' உண்டு"-என்று அழுத்தம் திருத்தமாக கூறிஞர்.

அதாவது-தங்களுடைய நிலை, கேள்விக்கு உட்படும் போது இதுபோன்ற வீரர்களாக அவர்கள் மாறுவதுண்டு.

மத்தியில் இந்திராகாந்தி கட்சி-மைசூரில் நிஜலிங்கப்பா காங்கிரஸ் கட்சி-என்றிருந்தபோது அந்த மாநிலக் கட்சி, மாநிலங்களுக்காகப் போராடும் கட்சியாகத் தன்னை வர்ணித்துக் கொண்டது.

தமிழகத்தில் காமராசர் மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரங்கள் தேவைதான்; அதற்காகப் போராடத்தான் வேண்டும் என்று தமிழக முதல்வர் டாக்டர் கலைஞரைச் சந்தித்து தனிமையில் கூறியதும், அது பத்திரிகைகளில் வெளியானதும், உடனே தானே முன்னின்று மறுக்காமல், தனது செயலாளரை விட்டு மறுத்ததும் நினைவு இருக்கலாம்.

ஆகவே, காங்கிரஸ் கட்சிக்கென்று தெளிவான கொள்கை இல்லை. இதைவிட புதிய காங்கிரஸ் கட்சியில் ஒரு அபாயகர மான சிந்தனை எழுந்துள்ளது.

இளந்துருக்கியரில் மூத்தவரான சசிபூஷன் என்பவர் இந்திராகாந்தி சர்வாதிகாரி ஆகவேண்டும்-என்று கூறிவருகிறார்-சர்வாதிகாரி என்றால் என்ன பொருள்? கூட்டாட்சியும் இல்லை; இணைப்பாட்சியும் இல்லை. தனிநபர் ஆட்சி!

இரண்டு காங்கிரசையும் சேர்த்துக் கூறுவதானால் அவர்களுக்கென்று அரசு இயல் கொள்கையில்-அதிகாரக் குவியல் முறைமீதுதான் உள்ளூரக் காதல்; ஆனால் சமயங்களுக்கேற்ப மாநில நன்மைக்காகப் போரிடுபவர்களாக மாயத்தோற்றம் தரும் 'பச்சோந்தித் தன்மை' உடையவர்களாவார்கள் என்றால் மிகையாகாது.

ஜனசங்கக் கட்சியை எடுத்துக் கொண்டால் அது மிகவும் தெளிவாக இருக்கிறது கூட்டாட்சி (பெடரல்) முறையே வேண்டாம். ஒருமையாட்சி (யூனிட்டரி) முறையே வேண்டும் எனக் கூறுகிறது.

அதனுடைய தத்துவங்கள் - ஆதிபத்திய கலாச்சாரம் (dominent culture) இந்தியமயமாக்குதல் (Indianization) போன்றவையாகும்.

இந்துப் பெரும்பான்மையரின் கலை, கலாச்சார வாழ்க்வையே தேசிய வாழ்வாக பிற சமுதாயத்தினரும் கருதிட வேண்டும் என்றும் ஜனசங்கம் கூறுகிறது

பலமான மத்திய அரசு —பலமான நாடு வேண்டும். அதற்கு ஒருமைத் தன்மை தேவை என்று வலியுறுத்துவது ஜனசங்கம். இதன் கோரிக்கை வெறித் தன்மையோடு இருப்பது என்பதும் கண்கூடு.

அடுத்து—சுதந்திராக் கட்சி—அதிகாரக் குவியல் முறையில் பற்று இல்லாது. மத்திய—மாநில உறவுகளிலுள்ள தொய்வுபற்றி கடுமையாக விமர்சனம் செய்த கட்சி இது. அதன் நிறுவனத் தலைவர் ராஜாஜி இன்னும் ஒருபடி மேலே போய் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரித்தே பேசினார்:

"எல்லா ராஜ்ய சர்க்கார்களும் உரிய அளவுக்கு உண்மை யாக சுவாதீனம் பெற்று அவற்றின் சமஷ்டியாக டெல்லி சர்க்கார் அமைய வேண்டும் என்று அகில இந்தியப் பிரச்சினையையே திராவிட முன்னேற்றக் கழகம் தனது அடிப் படையாக கொண்டது.

"ஒரே சர்க்கார் நாடு முழுவதும் ஆள்வதை யூனிட்டரி முறை என்றும் மத்திய சர்க்காரும் ராஜ்ய சர்க்கார்களும் அதிகாரிகளும் பகிர்ந்துகொண்டு ஆட்சி புரிவதை (பெடரல்) சமஷ்டி முறை என்றும் சொல்வார்கள். அரசியல் சாசனப்படி இந்தியா சமஷ்டி முறையைப் பின்பற்றுகிறது என்றாலும் மத்திய சர்க்கார் பெருத்த அதிகாரங்களைப் பெற்று ராஜ்ய சர்க் கார்களை நகரசபையின் ஸ்தானத்திற்குக் கொண்டு வந்துள்ளது.

"இந்தியா போன்ற பெரிய தேச நிர்வாகத்தில் பொறுப்பு களை மத்தியிலே மாத்திரம் குவிப்பது திறமையின்மையைத் தான் உண்டாக்கும்.

"அதோடு மத்திய சர்க்கார், ராஜ்ய சர்க்கார்களை அடக்கி யாளும் கொடுமையும் சேர்கிறது.

"இப்படிப்பட்ட ஆட்சிக்குத் தேசம் தெரிவிக்கும் எதிர்ப்பு உருவமே திராவிட முன்னேற்றக் கழகம். அது தேசப் பிரிவினைக் கோஷ்டி என்பது காங்கிரஸ்காரர்கள் கற்பனை செய்து காட்டிய பூச்சாண்டி ஆகும்."

—இப்படி ராஜாஜி அவர்கள் தொடக்க காலத்தில் பேசி னாலும், பின்னர் அவரது நிலையில் சிறிது மாறுதலும், தமிழ் நாட்டுச் சுதந்திரக் கட்சியினரில் சிலரது தயக்கமும் தென் பட்டது எனினும், சுதந்திரக் கட்சியின் தத்துவம் என்ற அளவில் கூட்டாட்சி-சுயாட்சி தத்துவத்தையே அது ஆதரித்து வருகிறது.

இந்த நேரத்தில் ஒரு கருத்தை நாம் கூறியாக வேண்டும். சுதந்திராக் கட்சி கோருகின்ற சுயாட்சியும், கழகம் கோரு-

கின்ற சுயாட்சியும் ஒன்ருக இருக்கலாம். ஆனல் எதற்காக இது? என்ற கேள்வி எழுகிறபோதுகழகமும் சுதந்திராக் கட்சியும் மாறுபடும்.

சுதந்திராக் கட்சி சோஷலிசத் திட்டங்களுக்கும் முற்போக்குத் திட்டங்களுக்கும் முரண்பாடானது. கழகமோ அதை நிறைவேற்றத்தான் சுயாட்சி கேட்கிறது.

இதை ஒரு உதாரணத்தில் கூற வேண்டுமானல்- சுதந்திராவும் கழகமும் பாடுகிற ராகம் ஒன்று; ஆனல் பாடல்தான் வேறு!

கம்யூனிஸ்டுகளைப் பொறுத்தவரை—அவர்கள் தத்துவத்தின்படியும், அவர்களது 'ஆதர்ஸ' நாடுகளின் அமைப்பின்படியும் கூட்டாட்சித் தத்துவத்தை ஆதரித்தாக வேண்டும்.

சோஷலிசம்-கம்யூனிசம் - அனர்க்கிசம் ஆகிய சமுதாய வளர்ச்சிப் படிக்கட்டுகளின் இறுதியில் அரசாங்கம் என்பதே கரைந்துபோய்விடும் (State will whither away) எனும் மிகத் தீவிரமான கொள்கை கொண்டவர்கள் அவர்கள்.

நடைமுறையிலும் கூட அவர்கள் மாநில மக்களின் உரிமைகளுக்காகப் போராடவேண்டியவர்கள். சுயாட்சி என்பதைவிடவும் அதிகமான—தீவிரமான ஒரு அமைப்பை ஆதரிப்பவர்கள்.

இந்த நேரத்தில் ஒரு கருத்தை வலியுறுத்தி ஆக வேண்டும். மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரங்கள் என்பது ஒரு கட்டம். மாநில சுயாட்சி என்பது இன்னொரு கட்டம். மாநில சுயாதிபத்தியம் என்பது மற்ருெரு கட்டம். இந்த மூன்றுமே மத்திய அரசின் வளையத்தில் இருக்கின்ற அமைப்பு முறைகள் தான்.

இந்த மூன்று கட்டத்தில்- அமைப்பு முறையில் நியாயமாக கம்யூனிஸ்டுகள் கோரவேண்டியது-மாநில சுயாதிபத்தியம்

தான். ஏனெனில்-இதைப் பகுத்துச் சொல்லி-பல ஆண்டு களுக்கு முன் அவர்கள் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்,

1946 ஆண்டு பி. சி. ஜோஷி எழுதிய 'For the Final Bid for Power' எனும் நூலின் இணைப்பில் வெளியான தேர்தல் பிரகடனத்தில்...

சுயாதிபத்திய அடிப்படையில் அல்லாமல் காங்கிரஸ் கட்சி சுயாட்சி அடிப்படையில் கூட்டாட்சியுள்ள இந்திய யூனியனுக்காக கோரிக்கை எழுப்பிப் பெற சுதந்திரம் படைத் திருக்கிறது.

"The Congress is free to plead for and to get a Federal Indian Union based on antonomous but sovereign Units.

Our party is free to plead for and get support for a Voluntary Union of sovereign national states"

"நமது கட்சி சுயாதிபத்தியமுள்ள தேசிய மாநிலங்களின் விருப்பப்பூர்வமான யூனியனுக்காக கோரிக்கை எழுப்பி ஆதரவு திரட்ட சுதந்திரம் பெற்றுள்ளது.

—இவ்விதம் சுயாட்சிக்கும் மேலாக சுயாதிபத்தியம் கோரிய கம்யூனிஸ்ட் கட்சி, பின்னர் நடந்த தேர்தல்களிலும் கூட்டாட்சியை வற்புறுத்திய கம்யூனிஸ்ட் கட்சி-இன்று தி.மு. கழகத்தின் மீதுள்ள காழ்ப்பு காரணமாக 'மாநில சுயாட்சி'யை தமிழகத்தில் எதிர்த்து வருவதை நாம் காணுகிறோம்.

ஆனால் அவர்களே-கேரளத்திலும் மேற்கு வங்கத்திலும் இருந்தபோது மாநில நன்மைக்காக போர்க்குரல் எழுப்பி னார்கள்.

ஆக-இவர்களுக்கு காங்கிரசிலிருந்து மாறுபட்ட குணம் இருக்கிறது. இவர்களுக்கு உள்ளூர் மாநில சுயாதிபத்தியம் மீது காதல்; ஆனால் அரசியல் காரணங்களுக்காக அதை மறுத்துக் கொண்டுவருகிறார்கள்.

முஸ்லிம் லீக்கைப் பொறுத்தவரை அவர்கள் மாநில சுயாட்சியைத் தெளிவாக ஆதரிக்கிருர்கள் சோசலிசக் கட்சியும் மாநில சுயாட்சியை ஆதரிக்கிறது. அவர்கள் ஒருபடி மேலே போய் மாநிலங்களிலிருந்து அதிகாரங்கள், கீழ் அமைப்புகளுக்குப் போய்ச்சேர வேண்டும் என்றும் கூறிவருகிருர்கள். தமிழகத்தின் பார்வேடு பிளாக் கட்சி இந்திய ஒருமைப்பாட்டை வலியுறுத்தி மாநிலங்களுக்கும் அதிகமான அதிகாரங்கள் தேவை என்று கூறிவருகிருர்கள்.

தமிழரசுக் கழகத்தை எடுத்துக் கொண்டால் இந்தியாவிலேயே மாநிலசுயாட்சிக்குரலின் முதல் குரல் என்று கூறுகிற அளவுக்கு அந்தக்கழகம் இந்த இலட்சியத்தில் மிகவும் திட்டவட்ட மாக இருக்கிறது.

திராவிடர் கழகத்தைப் பொறுத்தவரை சமூக சீர்திருத்தக் கண்ணோட்டத்தோடு பிரச்சினையை அதுநோக்குவதால்—பெரும்பான்மையான அரசியல் கட்சிகளின் பார்வையிலிருந்து அதன் பார்வை வேறு படுவதில் ஆச்சரியமில்லை.

இவ்விதம் அரசியல் கட்சிகளில் பல மாநில சுயாட்சி-மத்தியில் கூட்டாட்சி என்ற விஷயத்தில் பெரும்பாலும் முரண்பாடில்லமமல் ஆனால் சில மாறுபாடுகளுடன் இயங்குவது தெரியும்.

இந்த மாறுபாடுகளை ஒதுக்கிவைத்து விட்டு, உடன்பாட்டு மைதானத்தில(area of agreement) இந்தக்கட்சிகளை இணையச் செய்து மாநில சுயாட்சிக் குரலுக்கு வலிமையேற்றுவது நமது கடமையாகும.

# 12. உலகம் காட்டுகிற உன்னதப் பாடம்!

இந்திய அரசியல் சட்டம் உருவாக்கப்பட்ட நேரமும்—விதமும்—உருவாக்கியவர் யார் எனும் தன்மையையும் ஆராய்ந்து பார்த்தால் அந்தநேரத்தில்—இந்த விதமாக அப்படிப்பட்டவர்களால் ஒரு அரசியல் சட்டத்தை இயற்ற முடியும் என்பதை உணர முடியும்.

ஆனல், உலகத்தில் சீரோடு விளங்கும் நாடுகளில் கூட்டாட்சியும் சுயாட்சியும் மிகவும் செமுமையாக இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ளலாம்.

முதலில் அமெரிக்க அரசியலமைப்புபற்றி ஆராய்வோம். அங்கிருக்கிற மத்திய அரசையே பெடரல் கவர்மெண்ட் என்றே அழைக்கிருர்கள்.

அரசியல் சட்டத்தைப் பொறுத்தவரை—அது காலத்தால் வாழ்வது; வெறும் சட்டதிட்டங்களைச் சொல்வதல்ல எனும் பொருளில் பேராசிரியர் மன்ரோ சொல்வார் "அமெரிக்க அரசியல் சட்டம் உயிர்ப்பு சக்தியுடன் வாழும் அமைப்பு முறை; அது டார்வின் தத்துவம் போன்றது; நியூட்டனின் கதை அல்ல"

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அமைப்பு முறையே விரிவான கூட்டாட்சி ஆகும். பேராசியரிர்களின் கருத்துப்படி

அது ஒரு பலவீனம் எனக் கருதப்படும் அளவிற்கு ஏராள மான அதிகாரங்களை மாநிலங்கள் அங்கே பெற்றுள்ளன.

மத்திய அரசுக்கு இன்னின்ன அதிகாரங்கள் என்று குறிப் பிட்டு வழங்கிவிட்டு மீதியுள்ள (Residuary) அதிகாரங்கள் அனைத்தையும் மாநிலக்களுக்கே விட்டுக் கொடுக்கப்பட்டிருக் கின்றன.

இந்த வகையில் அமெரிக்காவுக்கு நிகரானது ஆட்ஸ்ரேலியா என்று சொல்லலாம். கனடா, இந்தியா போன்ற நாடுகளில் எஞ்சியுள்ள அதிகாரங்கள் மத்திய அரசிடமே தரப்பட் டுள்ளன.

அமெரிக்காவில், சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித் துறை ஆகியவற்றில் மிகத்தெளிவாக—முழுமையாக மாநிலங் களுக்கு இவையிவை; மத்திய அரசுக்கு இவையிவை என்று பிரிக்கப்பட்டு இருக்கிறது.

அதுபோலவே, குடியரசுத் தலைவரும், காங்கிரஸ் எனப் படும் சட்டமன்றமும் தனித்தனி ஆதிபத்தியம் பெற்றிருக் கின்றன. காங்கிரஸ் ஓட்டுப் போட்டு குடியரசுத்தலைவரைக் கவிழ்த்துவிட முடியாது. காங்கிரசை குடியரசுத்தலைவர் கட்டளையிட்டுக்கலைத்து விடவும் முடியாது.

இவ்விதம் அரசியல் சட்டம் அதிகாரங்களைப் பகிர்ந்து தந்து 'தடைகளும், சமநிலையிலும்' (Check aud balance) எனும் தத்துவத்தில் நிர்வாகத்தை இயக்க வழி செய்கிறது.

உதாரணமாக குடியரசுத்தலைவர் நியமனங்களைச் செய்ய லாம். ஆனால் அதற்கு செனட்சபை ஒப்புதல் அளித்த பிறகே அந்த நியமனம் செல்லும்.

குடியரசுத் தலைவர் போர்ப்பிரகடனம் செய்யலாம். ஆனால் அதற்கு சபை ஒப்புதலளிக்கவேண்டும். இது மத்திய நிர்வாகத் தைப் பொறுத்த விஷயம்.

மாநில—மத்திய விவகாரங்களை எடுத்துக்கொண்டால்... அமெரிக்க அரசியல் சட்டத்தைப் பொறுத்தவரை மக்களின் விருப்பமே முதன்மையானது.

அந்த மக்கள்தான் மாநிலங்களுக்கும் மத்திய அரசிற்கும் தனித்தனியே அதிகாரங்களைத் தந்திருக்கின்றனர். ஒன்றுக்கு இன்னொன்று எஜமானன் என்ற நிலையை அவர்கள் தரவில்லை.

இதில் இன்னொரு வேடிக்கை. மத்திய அரசுக்குத்தான் இன்னின்ன அதிகாரங்கள் என்று தெளிவாகவும் திட்டவட்டமாகவும் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் மாநிலங்களின் அதிகாரங்களைப் பொறுத்தவரை அவ்வளவு திட்டவட்டமும் இல்லை; தெளிவும் இல்லை. இது மாநிலங்களுக்குச் சாதகமான 'தெளிவின்மை!'

அதாவது மத்திய அரசுக்கு என்று எந்தெந்த அதிகாரங்கள் என ஒதுக்கப்பட்டிருக்கின்றனவோ, அவை தவிர மற்ற அதிகாரங்கள் அனைத்தும் மாநிலத்திற்கு எனும் நிலைமை இருக்கிறது.

மாநிலத்திற்குள்ளே நுழைந்து பார்ப்போம் மாநிலத்தின் கவர்னருக்கு ஒரு அமைச்சரவை உண்டு. ஆனால் அந்த அமைச்சரவையை அவர் நியமிக்கவோ, நீக்கவோ முடியாது!

செனட் சபையில் உறுப்பினர்கள் குற்றம் சாட்டி வேண்டுமானால் அந்த அமைச்சரவையை நீக்கலாம்.

அந்த அமைச்சரவையினர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவர்; அவர்கள் மற்ற சாதாரண குடிமக்களைப்போல் மாநில நீதிமன்றங்களில் நிறுத்தி விசாரிக்கப்படும் உரிமை படைத்தவர்கள்தான்.

பொதுவாக, அமெரிக்க அரசியல் சட்டம், மாநிலங்களுக்கு ஏகபோகமான அதிகாரங்களை அள்ளித் தந்த அமைப்பு உள்ளதுதான். அதனால் அந்த அரசு பிரிவினைக்கு ஆட்படவில்லை. இன்னும் சொல்லப்போனால் பல நாடுகள் அந்த அமெரிக்கக் குடியரசில் இணைந்துள்ளன.

ஸ்விட்சர்லாந்து அரசியலமைப்பைப் பார்த்தால், அது வேறு வகையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

ஸ்விட்சர்லாந்து அரசியல் சட்டம் தான் மிக நீளமான ஒன்று. ஆனால் அந்த நாட்டிற்கேயுரிய அரசியல்சட்ட சொற்றொடர்களும் மரபுகளும் காணப்படுகின்றன.

உதாரணமாக—மத்திய அரசுதான் வெளிநாட்டினரை ஸ்விஸ் குடிமக்களாக மாற்றும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறது.

ஆனால் மத்திய அரசாங்கம் அந்த அதிகாரத்தை உபயோகப்படுத்துவதே இல்லை.

எனவே, அந்த அதிகாரம் ஒவ்வொரு கான்டன் (Canton) எனப்படும் மாநிலத்திற்கு விடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கான்டனும் இதற்கேற்ப சட்டம் செய்து அன்னிய நாட்டினரை தமது மாநிலக்குடிமக்கள் ஆக்குகிறது. பின்னர், இயல்பாகவே அவர்கள் ஸ்விட்சர்லாந்தின் குடிமக்கள் ஆகிவிடுகின்றனர்.

ஸ்விட்சர்லாந்து அரசியல் சட்டம் மிக நீளமான அரசியல் சட்டம் என்பது மட்டுமல்ல; உறுதியானதும்—கண்டிப்பானதுமாகும்.

ஸ்விட்சர்லாந்து அரசியல் சட்டத்தில் அந்த நாடு—கூட்டாட்சிக்கு சிறிது மாறுபட்ட இணைப்புக் கூட்டாட்சி (Confederation) என்ற வார்த்தையால் அழைக்கப்படுகிறது, ஆனால் உண்மையில் அது கூட்டாட்சிதான். அமெரிக்காவைப் போன்ற அதிகாரங்களை பிரித்து வைத்துள்ள ஒரு கூட்டாட்சி தான்.

இன்னொரு வேடிக்கைச் செய்தி-ஸ்விட்சர்லாந்து 19 முழுக் கான்டன்கள் (முழுமாநிலங்கள்) எனறும் 6 அரைக்கான்டன்கள் (அரைமாநிலங்கள்) என்றும் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

**இந்த முழுக் கான்டனுக்குக் (Full Canton) அரைக் கான்டனுக்கும் (Half Canton) உள்ள வேற்றுமை என்ன?**

முழுக்கான்டன் இரண்டு பிரதிநிதிகளை மத்திய அமைப்பு அனுப்பும். அரைக்கான்டன் ஒரு பிரதிநிதியை அனுப்பும்.

அமெரிக்காவைப் போலவே ஸ்விட்சர்லாந்து கூட்டாட்சி அரசுக்கு குறிப்பிட்ட அதிகாரங்கள் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளன. ஆனால் பொதுப்பட்டியல் அதிகாரங்கள் என்ற ஒன்று ஸ்விட்சர்லாந்து அரசியலமைப்பில் இருக்கிறது.

இதன்படி ஸ்விட்சர்லாந்து கூட்டாட்சி அரசுக்கும் கான்டன்களுக்கும் பொதுவான அதிகாரங்கள் இருக்கின்றன.

ஆனால், எஞ்சிய அதிகாரங்கள் என்பது அமெரிக்காவைப் போலவே, கான்டன்களுக்குத்தான். கூட்டாட்சி அரசியல் சட்டம் நிர்ணயத்துள்ளபடி சுயாதிபத்தியம் படைத்த அதிகாரங்கள் ஸ்விட்சர்லாந்தின் கான்டன்களுக்கு உள்ளன.

கூட்டாட்சி அரசுக்குத் தரப்படாத அதிகாரங்கள் அனைத்தையும் காண்டன் பயன்படுத்தும் உரிமை பெற்றுள்ளன என்பதோடு கூட்டாட்சி அரசின் அதிகாரங்களைக்கூட (மேலே சொன்ன உதாரணத்தைப் போல) மரபு வழியில் கான்டன்கள் பயன்படுத்தி வருகின்றன.

அடுத்ததாக-சோவியத் நாட்டின் அரசியல் அமைப்பு முறை.

'எழுதப்பட்ட' அரசியல் சட்டங்களிலேயே மிகவும் விரிந்த அளவு சுயாட்சியும் சுயாதிபத்தியமும் உள்ளது சோவியத் அரசியலமைப்புச் சட்டம்தான்; குறிப்பாக அந்தச் சட்டம் மாநிலங்களை—குடியரசுகள் என்றுதான் குறிக்கிறது.

சோவியத் சோஷிலிசக் குடியரசுகளின் ஒன்றியம் (Union of Soviet Socialist Republic) என்று தான் அந்த நாடே அழைக்கப்படுகிறது.

இந்த ஒன்றியத்தில் பதினைந்து குடியரசுகள் உள்ளன. உக்ரெயன், பைலோ ரஷ்யா, உஸ் பெக்ஸ்தான், காஜக்ஸ் தான், ஜார்ஜியா, அஜர் பெய்ஜான், லிதுவேனியா, மோல் டால்வியா, லாட்வியா, இர்சிஸ்ஸியா, தாஜிக்ஸ்தான், ஆர் மேனியா, துர்க்மெனிஸ்தான், எஸ்போனியா என்பவைதான் அந்தப் பதினைந்து குடியரசுகள்.

இந்தப் பதினைந்து குடியரசுகளும் சுயாட்சிக்கும் மேற் பட்ட சுயாதிபத்தியத்தை அனுபவிக்கின்றன.

குடியுரிமையை எடுத்துக் கொண்டால்கூட சோவியத் பெரு நாட்டில் வாழும் ஒரு தனி மனிதன் சோவியத் நாட்டின் குடிமகன் ஆவான். அதே நேரத்தில் அவன் வாழும் குடியரசின் (மாநிலத்தின்) குடிமகனும் ஆவான்.

அதுமட்டுமல்ல; ஒவ்வொரு குடியரசுக்கு ஒவ்வொரு குடியுரிமைச் சட்டம் உண்டு; குடியுரிமை வழங்கும் அதிகார மும் உண்டு.

பொதுவான சோவியத் அரசியல் சட்டம் தவிர ஒவ்வொரு குடியரசுக்கென தனித்தனியே அரசியல் சட்டம் உண்டு.

உக்ரேனியன், பைலோரஷ்யன், உஸ்பெக், காகுலக்' ஜார்ஜியன், அர்பெய்ஜான், கிர்கிஸ்தாஜிக், அர்மேனியன், துர்க்மென் ஆகிய குடியரசுகள் 1937 ஜனவரி-மார்ச்சில் நடந்த சிறப்பு சோவியத் கூட்டத்தில் தங்களுக்கென தனி அரசியல் சட்டத்தை இயற்றிக் கொண்டன.

லிதுவேனியன், லாட்வியன், எஸ்போனியன் குடியரசுகள் 1940 ஜூலை மாதத்தில் தங்களுக்கென தனி அரசியல் சட்டத்தை உருவாக்கிக் கொண்டன.

மால்டோவியன் குடியரசு 1941 பிப்ரவரி மாதம் தனக் கென அரசியல் சட்டத்தை இயற்றிக் கொண்டது.

உக்ரேனியன் அரசியல் சட்டம் தனது குடியரசின் உரிமைகள் பற்றி பல பகுதிகளை கொண்டுள்ளது.

இதில் இன்னொரு அதிசயமான செய்தி—உக்ரேனியன் குடியரசின் அரசியல் சட்டத்திற்கு மற்ற எந்த அமைப்புகளின் ஒப்புதலும் தேவையில்லை எனக் குறிக்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல; தனது குடியரசின் பொருளாதாரத் திட்டத்தைத் தானே வகுத்துக் கொள்கிறது.

நிதிநிலை அறிக்கை, வரி போடுதல் ஆகியவற்றை யூனியனின் ஒப்புதலோடு கொண்டு வருகிறது எனினும்...

பாங்குகளை தொழில், விவசாய, வாணிக நிறுவனங்களைத் தன்னகத்தே வைத்துள்ளது.

நிலத்தை எப்படிப் பயன்படுத்துவது—அதன் கனிவளம், நீர், காடுகள், ரோடுகள், செய்தித் தொடர்பு, சுகாதாரம், உள் நாட்டுப் பாதுகாப்பு, கல்வி ஆகியவற்றையும் குடியரசே (மாநிலமே) கவனித்துக் கொள்கிறது.

இந்தக் குடியரசே (மாநிலமே) குற்றவியல் சட்டங்களை இயற்றுகிறது; திருமணம், குடும்பம், நீதித்துறைச் சட்டங்களையும் இயற்றுகிறது.

இதைவிடப் பெரியது-உக்ரேனியன் குடியரசு தனக்கென 'குடியரசு ராணுவம்' ஒன்றையும் வைத்துக் கொண்டிருக்கிறது.

உக்ரேனியன் குடியரசைப் போலவே மற்ற குடியரசுகளும் இது போன்ற உரிமைகளைப் பெரும்பாலும் பெற்றிருக்கின்றன.

சோவியத் கூட்டாட்சி என்பது சம அதிகாரமுள்ள மாநிலங்களின் ஒன்றியம்.

அளவு, மக்கள் தொகை, தொழில்கள், கலை கலாச்சாரத்தில் அவை மாறுபட்டிருந்தாலும் அரசு, அரசியல், பொருளாதார வாழ்வில் சம உரிமை பெற்றுள்ளது.

இதுமட்டுமல்ல; இந்தக் குடியரசுகள் வெளிநாட்டு அரசுகளுடன் தூதுவராகத் தொடர்பு வைத்துக் கொள்ளவும், வர்த்தக உடன்படிக்கை செய்துகொள்ளவும் உரிமை பெற்றுள்ளன.

எந்த நாட்டிலுமில்லாத முறையில், சோவியத் நாட்டிலுள்ள இரண்டு மாநிலங்கள் (உக்ரெய்னும பைலோரஷ்யாவும்) ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் பெற்றுள்ளன. வெளிநாட்டு விவகாரங்களில் கலந்துகொள்வதோடு, ஐ. நா. சபையின் பல நிறுவனங்களில் பங்கேற்கின்றன. ஐ. நா. உறுப்பினர் என்ற வகையில் உடன்படிக்கைகளிலும் கையெழுத்திடுகின்றன.

இதற்கெல்லாம் சிகரமாக விளங்குவது—இந்த மாநிலங்களுக்கு சோவியத் நாட்டிலிருந்து பிரிந்துபோகும் உரிமை இருக்கிறது என்பதுதான்! சோவியத் பெருநாட்டின் அரசியல் சட்டம் இதற்கு அனுமதி அளித்திருக்கிறது. குடியரசுகளின் (மாநிலங்களின்) அரசியல் சட்டங்களிலும் இது எழுதப்பட்டிருக்கிறது.

இவ்வளவு பெரிய உரிமைகள் பயன்படுத்தப்படுகின்றனவா என்பது வேறு பிரச்சினை, ஆனால் எவ்வளவு பெரிய நாட்டில், எவ்வளவு பெரிய உரிமைகள் தரப்பட்டுள்ளன என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

சீன நாட்டிலும் கூட, அது ஒருமைத் தன்மை படைத்ததாக இருந்தபோதிலும், உள் அமைப்புகளுக்கு அதிகமான அதிகாரங்கள் தரும் போக்கு அண்மைக் காலத்தில் பெருகி வருகிறது. கொள்கை அளவில் எல்லாவற்றையும் நிர்ணயித்து விட்டு, நிறைவேற்றும் முழு அதிகாரங்கள் அனைத்தும் உள் அமைப்புகளுக்கு விடப்பட்டுள்ளன.

மலேசிய அரசியல் சட்டம் முழுமையான கூட்டாட்சி அமைப்புள்ளது. அமெரிக்கா மற்றும் கூட்டாட்சி அமைப்புகளின் வழியில் அது அமைக்கப்பட்டிருக்கிறது.

யுகோஸ்லாவியாவில் சுயாட்சி பெற்ற மாநிலங்கள் எனக் கூறத்தக்க அளவுக்கு குடியரசுகள் எனும் பெயரில் இயங்கும் அமைப்புகளின் கூட்டாட்சியே இருக்கிறது.

இதுபோல் பல்வேறு நாடுகளில் கூட்டாட்சி முறை வளம் பெற்றிருப்பதை ஒரு பாடமாக நாம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

கூட்டாட்சி அம்சங்கள் விரிவடைந்ததால் அவை வள மிழக்கவில்லை; பலமிழக்கவில்லை என்பதையும் புரிந்து கொண்டு நமது அரசியல் கூட்டத்தில் அதற்கேற்ற மாற்றங் களைச் செய்ய வேண்டும்.

அரசியல் சட்டத்தில் மாற்றங்களா? என்று யாரும் அஞ்சத் தேவையில்லை. மறைந்த பண்டித நேரு அதுபற்றிக் கூறுகிருர்.

"நமது அரயசில் சட்டத்தை எவ்வளவு நிலையானதாக இருக்க வேண்டும் என நினைக்கிறேமோ அவ்வளவு உறுதியாக உருவாக்கிட நாம் விரும்புகிறேம். ஆனல் அரசியல் சட்டத்தில் நிலையானது என்பது எதுவுமில்லை.

"அந்தச் சட்டத்தில் ஏதாவது கொஞ்சம் இளகும் தன்மை இருந்தாக வேண்டும்.

"நீங்கள் ஏதாவதொன்றை கடுமையாகவும் நிலையான தாகவும் (அந்தச் சட்டத்தில்) செய்வீர்களானல்... நாட்டின் வளர்ச்சியைத் தடுக்காதீர்கள்; வாழ்கிற — உயிர்ப்புள்ள மக்களின் முன்னேற்றத்தைத் தடுக்கிறீர்கள் என்று பொருள்.

"While we want this Constitution to be as solid as permanent as we can make it there is no permanence in Constitution. There should be a certain flexibility. If you make any thing rigid and permanent, you stop the nation's growth, the growth of a living, vital organic people"

உலகம் தரும் பாடத்தையும், பண்டித நேரு தரும் எச்சரிக்கையையும் கவனத்தில் கொண்டு நமது அரசியல் சட்டத்தைத் திருத்திட முயல்வது சாலச் சிறந்த ஒன்றாகும்!

அவ்விதம் திருத்தி மாநில சுயாட்சி காண்பதுதான் இந்தியாவின் நலனுக்கு ஏற்றது; வளர்ச்சிக்கு ஏற்றது; வாழ்வுக்கு ஏற்றது; புகழுக்கு ஏற்றது என்பது உறுதி.

# இணைப்பு-1

**இந்திய அரசியல் சட்டத்தில் மத்திய அரசுக்குள்ள அதிகாரங்களின் பட்டியலும் (Union list) மாநிலங் களுக்குள்ள அதிகாரங்களின் பட்டியலும் இங்கே விரிவாகத்தரப்பட்டுள்ளன.**

## மத்தியஅரசு அதிகாரப் பட்டியல்
## (UNION LIST)

**1. இந்தியாவினதும், அதன் ஒவ்வொரு பகுதியினது மான பாதுகாப்பு: இதில், பாதுகாப்பிற்கான முன்னேற்பாடும், போர்க்காலங்களில் அதை நடத்திச் செல்லுதல், போர் இறுதிக்குப் பின்பு திறம்படப் படைக்கலைப்புச் செய்தல் ஆகிய வற்றிற்கு உகந்த செயல்களும் ஆகியவை உள்ளடங்கும்.**

**2. கடற்படை, தரைப்படை, வான்படை, ஒன்றியத்தின் ஏனைய ஆயுதப்படைகள்.**

**3. பாளையத்து வரையிடங்களை வரையிறுத்தல்: அவ் வரையிடங்களில் உள்ளமை தன்னுட்சியம், அவ்வரையிடங் களுள் பாளையத்து ஆள்வைகளின் அமைப்பாக்கமும், அதிகா ரங்களும் அவ்வரையிடங்களில் (வாடகைக் கட்டுப்பாடு உள்ளடங்கலான) வீட்டு இடவசதிகளின் ஒழுங்காறு.**

**4. கடற்படை, தரைப்படை, வான்படைப் பணிமங்கள். கள்.**

5. ஆயுதங்கள், சுடுகலன்கள், வெடிவாரங்கள், வெடி பொருள்கள்.

6. அணுசக்தி, அதன் விளைவாக்கத்திற்குத் தேவையான கனிய வளமங்கள்.

7. பாதுகாப்புக் குறிப்பாட்டிற்கு அல்லது போர் நடத்திச் செல்வதற்கு அவசியமானவை என்று நாடாளுமன்றம் சட்டத்தின் வாயிலாக அறைவிக்கும் தொழில்கள்.

8. செய்தி ஆய்வு புலனாய்வுகளின் மைய அரங்கு.

9. பாதுகாப்பு, அயலகச் செய்வுகள், அல்லது இந்தியாவின் காப்புறுதியோடு இணைவுடைய காரணங்களுக்காகத் தடுப்புக் காவல்: அத்தகைய காவலுக்கு உட்படுத்தப்பட்டவர்கள்.

10. அயலகச் செய்வுகள்: அயல்நாடு ஒன்றனுடன் ஒன்றியத்துக்கு உறவு ஏற்படுத்தும் அனைத்துப் பொருளங்கள்.

11. அயலக உறவியல், குடிநலத் தூதியல், வாணிகம் இவற்றின் தெரிவாண்மை.

12. ஐக்கிய நாடுகள் அமைவனம்.

13. இணை-நாடு மாநாடுகள், கழகங்கள், ஏனைய குழுமங்கள் இவற்றில் பங்குகொள்ளுதல், அவற்றில் எடுக்கப்பட்ட முடிவுகளைச் செயலேற்றுதல்.

14. அயல்நாடுகளுடன் உடன்படிக்கை, உடன்பாடுகள் செய்தல், அயல் நாடுகளுடன் செய்துகொண்ட உடன்படிக்கைகள், உடன்பாடுகள் மரபுநெறிகள் இவற்றைச்செயலேற்றுதல்.

15. போர், அமைதி ஆகியவை.

16. அயலிட ஆள்வரை.

17. குடியுரிமை, குடியாக்கம், அயலர்.

18. அயலக ஒப்படை.

19. இந்தியாவிற்குள் வருமதி, இந்தியாவிலிருந்து குடியகற்சி, வெளியேற்றல், வழியாவணங்கள், வழிச்சாத்துகள்.

20. இந்தியாவுக்கு வெளியேயுள்ள தலங்களுக்கு யாத்திரைகள்.

21. கடலகத்தில் அல்லது வானிடத்தில் இழைக்கப்படும் கொள்ளைகளும் குற்றங்களும், நிலத்தில், கடலகத்தில், வானிடத்தில் இழைக்கப்படும் பன்னாடுகள் சட்டத்துக்கு எதிரான குற்றச் செயல்கள்.

22. இருப்புப்பாதை போக்குகள்.

23. நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டத்தின் வாயிலாக அல்லது வழியாக நாட்டின் நெடுஞ்சாலைகள் என்று அறைவிக்கப்பட்ட நெடுஞ்சாலைகள்.

24. பொறிவிரைக் கலங்களைப் பொறுத்து நாடாளுமன்றத்தினால் சட்டத்தின் வாயிலாக நாட்டின் நீர்வழிகள் என அறைவிக்கப்பட்ட உள்நில நீர்வழிகளில் கலத்துறையமும் நாவாயச் செலுத்தமும்: அத்தகைய நீர்வழிகளுக்கான பாதை விதிகள்,

25. ஏற்றவற்ற நீரில் கலத்துறையமும் நாவாய்ச் செலுத்தமும் உள்ளடங்கிய கடலகத் கலத்துறையம், நாவாய்ச் செலுத்தம்: வாணிகக் கப்பலணிக்குரிய கல்விக்கும் பயிற்சிக்குமான வகையம் செய்தலும் அரசகங்களாலும் பிற முகமைகளாலும் வகையம் செய்யப்பட்ட அத்தகைய கல்விப் பயிற்சி பற்றிய ஒழுங்காற்றமும்.

26. விளங்கொளிக் கலங்கள் உள்ளடங்கலாகக் கலங்கரை விளக்கங்கள், பிறங்கொளிகள் மற்றும் கப்பல்கள், வானூர்திகள் செலுத்தத்தின் காப்பமைவிற்கான பிற வகையங்கள்.

27. நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டத்தின் அல்லது நிலவுறு சட்டத்தின் வாயிலாகவோ வழியாகவோ பெருந்துறைமுகங்கள் என அறிவிக்கப்பட்ட துறைமுகங்கள் அவற்றின் வரையிறுத்தம், துறைமுக ஆள்வைகளின் அமைப்பாக்கம், அதிகாரங்கள் உள்ளடங்கலாக.

28. துறைமுகத் தொற்றெருதுக்கம் - அதனுடன் இணைவுடைய மருத்துவமனைகள், கப்பற்பணியாளர் மருத்துவ மனைவிகள், கடல்துறை மருத்துவமனைகள் உள்ளடங்கலாக.

29. வான்வழிப் போக்குகள்: வானூர்தி, வான்வழிச் செலுத்தம்: விமான நிலையங்களுக்கு வகை செய்தல்; வான் வழிப் போக்குவரத்து, விமான நிலையங்கள் இவற்றை அமைத்தல், ஒழுங்காற்றல்: வான்செலவியற்கல்வி, பயிற்சி இவற்றுக்கு வகை செய்தல்; அரசகங்கள், பிற முகமைகள் வகை செய்கிற அக்கல்வியையும் பயிற்சியையும் ஒழுங்காற்றுதல்.

30. இருப்புப்பாதை, கடல் அல்லது வான்வழியாகவோ பொறிவிசைக் கலங்களில் நாட்டின் நீர்வழிகள் வழியாகவோ பயணிகளையும் சரக்குகளையும் ஏற்றிச் செல்லுதல்.

31. அஞ்சல் தந்தித்துறை. தொலைபேசிகள், கம்பியில்லாத் தந்தி, ஒலிபரப்பு இவை போன்ற தொடர்வை முறைகள்.

32. ஒன்றியத்தின் சொத்து, அதிலிருந்து கிடைக்கும் வரிமானம், ஆனால் ஓர் அரசகத்தில் உள்ள அச்சொத்தைப் பற்றி நாடாளுமன்றம் சட்டத்தின் வாயிலாக பிறவாறாக வகையம் செய்கிற மட்டில் அல்லாமல், அந்த அரசகத்தின் சட்டத்திற்கு உட்பட்டதாக

34. இந்திய அரசரக மன்னர்களின் சொத்துக்கான அளியர் காப்பாயம்.

35. ஒன்றியத்தின் பொதுமப் படுகடன்.

36. செலாவணி, நாணயமுறை மற்றும் சட்டச் செலாவணம்: அயலக நாணயமாற்று.

37. அயலகப் பெறுகடன்கள்.

38. இந்தியாவின் மூலக வங்கி.

39. அஞ்சலகச் சேமிப்பு வங்கி.

40. இந்திய ஆட்சியத்தினுல் அல்லது அரசக ஆட்சியத்தினுல் அமைக்கப்பட்ட சீட்டுப் பரிசுகள்.

41. அயல்நாடுகளுடன் வாணிகம், வர்த்தகம், சுங்க எல்லைப் புறங்களைக் கடந்து இறக்குமதி ஏற்றுமதி, சுங்க எல்லைப் புறங்களின் வரைவுரை.

42. இணை - அரசக வாணிகம், வர்த்தகம்.

43. வங்கித் தொழில், காப்பீடு, நிதிக் கூட்டுருமங்கள் உள்ளடங்கிய, ஆனுல் கூட்டுறவுச் சங்கங்கள் நீங்கலாக உள்ள வாணிகக் கூட்டுருமங்களின் கூட்டுருவாக்கம், ஒழுங்காற்றம், இறுவை.

44. வாணிகம் செய்யினும் செய்யாதிருப்பினும், ஓர் அரசகத்தை மட்டுமே பொறுத்தவையாயிராத குறிநோக்கங்கள் கொண்டுள்ள ஆனுல் பல்கலைக்கழகங்கள் நீங்கலாக உள்ள, கூட்டுருமங்களின் கூட்டுருவாக்கம், ஒழுங்காற்றம், இறுவை.

45. வங்கித் தொழில்.

46. மாற்றுமுறிகள், காசோலைகள், கடனுறுதிமுறிகள் இன்னும் இவையொத்த பிற முறையாவணங்கள்.

47. காப்பீடு.

48. பங்கு மாற்றுக்கள், எதிர்கோள் வாணிகங்கள்.

49. புனைபொருளுரிமைகள், புதுப்புனைவுகள், வரைவணங்கள்; பதிப்புரிமை, வாணிகக்குறிகள், சரக்குக் குறிகள்.

50. உடை அளவு இவற்றில் தரநிலைகள் நிறுவுதல்.

51. இந்தியாவை விட்டு வெளியே ஏற்றுமதியாகும் அல்லது ஓர் அரசகத்திலிருந்து மற்றொன்றிற்கு கொண்டு செல்லப்படும் சரக்குகளின் நயத் தரத்திற்கான தரநிலைகள் நிறுவுதல்.

52. ஒன்றியத்தின் கட்டாள்கையிலிருப்பது பொதும நலன் பொருட்டுச் சூழ்தகவானதென நாடாளுமன்றத்தால் சட்டத்தின் வாயிலாக அறிவிக்கப்பட்டுள்ள தொழில்கள்.

53. எண்ணெய் வயல்கள், கனிம எண்ணெய் வள ஆதாரங்கள் இவற்றின் ஒழுங்காற்றம், வளர்மானம், பெட்ரோலியம் மற்றும் பெட்ரோலியப் பொருள்கள்; அபாயகரமாய்த் தீப்பற்றக்கூடியவை என நாடாளுமன்றத்தால் அறிவிக்கப்பட்ட பிற நீர்மங்கள், பொருண்மங்கள்.

54. சுரங்கங்களின் ஒழுங்காற்றம், கனிமங்களின் வளர்மானம் - இவை ஒன்றியத்தின் கட்டாள்கையில் இருப்பது. பொதும நலனுக்குச் சூழ்தகவானதென நாடாளுமன்றத்தினால் சட்டத்தின் வாயிலாக அறைவிக்கப்படும் அளவில்.

55. சுரங்கங்களிலும் எண்ணெய் வயல்களிலும் தொழிலமைவு, காப்பமைவு இவற்றின் ஒழுங்காற்றம்.

56. இணை-அரசக ஆறுகள், ஆற்றுப்பள்ளத்தாக்குகள் இவற்றின் ஒழுங்காற்றம், வளர்மானம்-இவை ஒன்றியத்தின் கட்டாள்கையில் இருப்பது பொதும நலனுக்குச் சூழ்தகவானதென நாடாளுமன்றத்தினால் சட்டத்தின் வாயிலாக அறைவிக்கப்படும் அளவில்.

57. வரையாட்சிக் கடல்களுக்கு அப்பால் மீன் பிடித்தல், மீனளங்கள்.

58. ஒன்றியத்து முகமைகளின் உப்புச் செய்வாக்கம், வழங்கீடு, பகிர்மானம்; பிறமுகமைகளின் உப்புச் செய்வாக்கம் வழங்கீடு, பகிர்மானம் இவற்றின் ஒழுங்காற்றம், கட்டாள்கை.

59. அபினியின் சாகுபடி, செய்வாக்கம், ஏற்றுமதிக்கான விற்பனை.

60. திரைப்படங்களைக் காட்டுவதற்கு இசைவாணை அளித்தல்.

61. ஒன்றியத்தின் வேலையாளர் சம்பந்தமான தொழில் துறைப்பூசல்கள்.

62. இந்திய அரசமைப்பின் துவக்கநிலையில், நாட்டின் நூலகம், இந்திய அருங்காட்சியகம், பேரரசுப் போர்த்திற அருங்காட்சியகம், விக்டோரியா நினைவுச் சின்னம், இந்தியப் போர் நினைவுச் சின்னம் என விளங்கி வந்துள்ள நிறுவனங்கள், இன்னும் இவை போன்று இந்திய ஆட்சியத்தால் முழுவதாகவோ பகுதியாகவோ நிதியளிக்கப் பெறுவனவும் நாடாளுமன்றத்தினால் சட்டத்தின் வாயிலாக நாட்டின் முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம் என்று அறைவிக்கப்பட்டவையுமான ஏதேனும் பிற நிறுவனம்.

63. இந்த அரசமைப்பின் துவக்கநிலையில், வாரணாசி இந்துப் பல்கலைக்கழகம், அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகம் டெல்லிப் பல்கலைக்கழகம் என்று விளங்கி வந்துள்ள நிறுவனங்கள், இன்னும இவைபோன்று நாடாளுமன்றத்தினால் சட்டத்தின் வாயிலாக நாட்டின் முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம் என்று அறைவிக்கப்பட்ட ஏதேனும் பிற நிறுவனம்.

64. முழுவதாகவோ பகுதியாகவோ இந்திய ஆட்சியத்தால் நிதியளிக்கப் பெறுவனவும், நாடாளுமன்றத்தால் நாட்டின் முக்கியத்துவம் வாய்ந்தவை என்று அறைவிக்கப்பட்டனவுமான விஞ்ஞான அல்லது தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்கள்.

65. கீழ்வருவனவற்றிற்கான ஒன்றியத்து முகமைகள், நிறுவனங்கள்:-

(க) காவல்துறை அலுவலர்களுக்கான பயிற்சி உள்ளடங்கலாக தேர்தொழில் வாழ்க்கைத் தொழில் அல்லது தொழில் நுட்பப் பயிற்சி; அல்லது

(ங) தனிமுறை ஆய்வுகளின் அல்லது ஆராய்ச்சிகளின் வளர்ப்பாடு; அல்லது

(ச) குற்றப் புலனாய்விற்கு அல்லது துப்பறிவதற்கு விஞ்ஞான அல்லது தொழில்நுட்ப உதவி.

66. உயர்கல்வி அல்லது ஆராய்ச்சிக்கான நிறுவனங்களிலும் விஞ்ஞான, தொழில்நுட்ப நிறுவனங்களிலும் தரநிலையினை ஒத்திணைவு செய்தல், அறுதியிடல்.

67. நாட்டின் முக்கியத்துவம் வாய்ந்தவை என நாடாளுமன்றம் இயற்றிய சட்டத்தின் வாயிலாக அல்லது வழியாக அறைவிக்கப்பட்ட தொன்மையானவையும் வரலாற்றுச் சிறப்புடையவையுமான நினைவுச் சின்னங்கள், பதிவணங்கள், தொல்பொருள், நிலையிடங்கள், சிதைவுகள்.

68. இந்தியாவின் நில அளவாய்வு; நிலக்கூற்றியல், தாவரவியல், விலங்கியல், மானிடவியல் அளவாய்வுகள்; வானிலை ஆய்வு அமைவனங்கள்.

69. மக்கள் கணிக்கை.

70. ஒன்றியத்துப் பொதும ஊழியங்கள்; அனைத்திந்திய ஊழியங்கள்; ஒன்றியத்துப் பொதும ஊழிய ஆணையம்.

71. ஒன்றியத்து ஓய்வூதியங்கள், அதாவது, இந்திய ஆட்சியம் கொடுக்கத்தக்க அல்லது இந்தியாவில் திரள்நிதியத்திலிருந்து கொடுக்கத்தக்க ஓய்வூதியங்கள்.

72. நாடாளுமன்றத்துக்கும், அரசகங்களின் சட்டமன்றங்களுக்கும் குடியரசுத்தலைவர், குடியரசுத் துணைத் தலைவர் பதவிகளுக்கும் ஆன தேர்தல்கள்; தேர்தல் ஆணையம்.

73. நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசகங்கள் மேலவையத்தின் தலைவர் துணைத்தலைவர், மக்கள் பேரவைத்தலைவர் துணைத்தலைவர் ஆகியோரின் சம்பளங்கள், படிகள்.

74 நாடாளுமன்ற அவையங்கள் ஒவ்வொன்றினுடைய வும் அவ்வவையங்கள் ஒவ்வொன்றின் உறுப்பினர்களுடைய வும் குழுக்களுடையவும் அதிகாரங்கள், சிறப்புரிமைகள், தனி விலக்குரிமைகள்; நாடாளுமன்றக் குழுக்களின் முன்னிலையில் அல்லது நாடாளுமன்றத்தால் அமர்த்தப்பட்ட ஆணையங்களின் முன்னிலையில் சான்றுரைப்பதற்காகவோ ஆவணங்களை முன் னிடுவதற்காகவோ நபர்களின் வருதரவைச் செல்லுறுத்தல்.

75. குடியரசுத்தலைவர், ஆளுநர்கள் ஆகியோரின் உழைப்பூதியங்கள், படிகள் சிறப்புரிமைகள், அகல்விடுப்பு பொறுத்த உரிமைகள்; ஒன்றியத்து அமைச்சர்களின் சம்பளங் கள், படிகள்; இந்தியாவின் கட்டாண்மையராம் தணிக்கை நாயகத்தின் சம்பளங்கள், படிகள்; அகல்விடுப்பு பொறுத்த உரிமைகள், இன்னும் பிற ஊழிய வரைக்கட்டுகள்.

76. ஒன்றியம், அரசகங்கள் இவற்றினுடைய கணக்கு களின் தணிக்கை.

77. உச்சநீதி மன்றத்தின் அமைப்பாக்கம், அமைவனம், ஆள்வரை, அதிகாரங்கள் (அம்மன்ற அவமதிப்பு உள்ளடங்க லாக), ஆங்குப் பெறப்படும் கட்டணங்கள்; உச்சநீதிமன்றத் தில் பயிலாறு புரிய உரிமைத் தகுதியுடைய நபர்கள்.

78. உயர்நீதிமன்றங்களின் அலுவலர்கள், ஊழியர்கள் இவர்களுக்குற்ற வகையங்கள் தவிர்த்து, உயர்நீதிமன்றத்தின் அமைப்பாக்கம், அமைவனம் (பருவவிடுமுறைகள் உள்ளடங் கலாக): உயர்நீதிமன்றங்களில் பயிலாறு புரிய உரிமைத் தகுதி யுடைய நபர்கள்.

79. ஓர் உயர்நீதி மன்றத்தின் ஆளவரையை ஒன்றியத் தின் நிலவரை ஒன்றனுக்குள் வரச் செய்தல் ஒன்றனி லிருந்து நீக்குதல்.

80. அரசகம் ஒன்றன் காவல்துறைப்படை உறுப்பினர் களின் அதிகாரங்களையும், ஆள்வரையையும், அந்த அரசகத்

துக்கு வெளியேயுள்ள ஏதேனும் வரையிடத்துக்கு உட்படச் செய்தல்; ஆனால், ஓர் அரசகத்தின் காவல்துறையினர் அந்த அரசகத்திற்கு வெளியேயுள்ள எந்த வரையிடத்திலும் அந்த வரையிடம் அமைந்துள்ள அரசக ஆட்சியத்தின் இசைவின்றி அதிகாரங்களையும் ஆள்வரையையும் பயில்திறப்படுத்த இயலுமாறு அதனைச் செய்தல் கூடாது; ஓர் அரசகத்தைச் சேர்ந்த காவல்துறைப்படை உறுப்பினர்களின் அதிகாரங்களையும், ஆளவரையையும், அந்த அரசகத்துக்கு வெளியேயுள்ள இருப்புப்பாதை வரையிடங்களுக்கு உட்படச் செய்தல்.

81. இணை-அரசகக் குடிபெயர்ச்சி : இணை—அரசக தொற்றொதுக்கம்.

82. வேளாண்மை வருமானம் அல்லாத வருமானத்தின் மீது வரிகள்:

83. சுங்கத் தீர்வைகள்—ஏற்றுமதித் தீர்வைகள் உள்ளடங்கலாக.

84. புகையிலை மீதான ஆய்த்தீர்வைகள், இன்னும்,

(க) மனிதர் துய்மானத்திற்கான மதுபானங்கள்.

(ங) அபினி, கஞ்சா, மற்றும் பிற மயக்க போதை தரும் மருந்துகள், மயக்கப் போதைப் பொருள்கள்,

இவை நீங்கலாக, ஆனால் வெறியம் அல்லது இந்தப் பதிவத்தின் உள்பத்தி (ங)-இல் கண்டுள்ள பொருள் ஏதேனும் அடங்கிய மருந்துவகை ஒப்பனைவகைத் தயாரிப்புகள் உள்ளடங்கலாக, இந்தியாவில் செய்வாக்கிய அல்லது விளைவாக்கிய மற்றச் சரக்குகள் மீதான ஆயத் தீர்வைகள்.

85. கூட்டுருமவரி.

86. தனிநபர்கள் மற்றும் நிறுமங்களுடைய வேளாண்மை நிலம் நீங்கலான, சொத்திருப்புகளின் மூலதன மதிப்பின்மீது வரிகள்: நிறுமங்களின் மூலதனத்தின்மீது வரிகள்.

87. வேளாண்மை நிலமில்லாத பிற சொத்துக்கள் பொறுத்த இறங்கு சொத்துத் தீர்வை.

88. வேளாண்மை நிலமல்லாத மற்றைய சொத்திற்கு இறங்குரிமை பொறுத்த தீர்வைகள்.

89. இருப்புப்பாதை, கடல் அல்லது வான்வழி ஏற்றிச் செல்லப்படும் சரக்குகளுக்கு அல்லது பயணிகளுக்கான சேர் முனை வரிகள். இருப்புப்பாதைப் பயணக்கட்டணங்கள் மீதும் சரக்குக் கட்டணங்கள் மீதும் வரிகள்.

90. பங்கு மாற்று நடைபேறுகள், எதிர்கோள் வாணிக நடைபேறுகள் இவற்றின்மீது முத்திரைத் தீர்வைகள் அல்லாத பிறவரிகள்.

91. மாற்றுமுறிகள், காசோலைகள், கடனுறுதி முறிகள், கப்பற்சரக்குப் பட்டியல்கள், வாணிக உறுதிக்கடிதங்கள், காப்பீட்டு ஒப்பந்தங்கள், பங்குரிமைகளில் மாற்றல், கடனீட்டுப் பத்திரங்கள், பகராண்மை முறிகள், பற்றுச் சீட்டுகள் இவை பொறுத்த முத்திரைத் தீர்வை விகிதங்கள்.

92. செய்தித்தாள்கள் விற்பனை அல்லது கொள்வினை மீதும், அவற்றில் வெளியிடப்படும் விளம்பரங்கள் மீதும் வரிகள்.

93. செய்தித்தாள்கள் அல்லாத பிற சரக்குகளின் விற்பனை அல்லது கொள்வினை மீது வரிகள்—அந்த விற்பனை அல்லது கொள்வினை இணை-அரசக வாணிகம் அல்லது வர்த்தகத்தினிடை செய்யப்படுமிடத்து.

94. இந்த நிரைப்பட்டிப் பொருளங்களில் எதனையும் பொறுத்த சட்டங்களுக்கு எதிரான குற்றச்செயல்கள்.

95. இந்த நிரைப்பட்டிப் பொருளங்களில் ஏதேனும் ஒன்றன் குறிப்பாட்டுக்கான விசாரணைகள், அளாவாய்வுகள். புள்ளிவிவரங்கள்.

96. இந்த நிரைப்பட்டிப் பொருளங்களில் எதனையும் பொறுத்து உச்சநீதிமன்றம் நீங்கலான எல்லா நீதிமன்றங்கள் அனைத்தின் ஆள்வரை அதிகாரங்கள்; கடலாண்மைப்பிரிவினை ஆள்வரை.

97. இந்த நிரைப்பட்டிப் பொருணங்களில் எதனையும் பொறுத்த, ஆனல், நீதிமன்றத்தில் பெறப்படுபவை நீங்கலான, கட்டணங்கள்.

98. நிரைப்பட்டி II அல்லது III இல் எண்ணிடப்படாத ஏனைப் பொருளும்—அந்த நிரைப்பட்டிகள் இரண்டில் எதிலும் சொல்லப்படாத எந்த வரியும் உள்ளடங்கலாக.

# மாநில அரசின் அதிகாரங்கள்
## (State List)

1. பொதும ஒழுங்கமைதி (ஆனால் குடிவாய் அதிகாரத்தினுக்கு உதவிபுரியும் ஒன்றியத்து கடற்படைகள், இராணுவப் படைகள் அல்லது வான்படைகள் அல்லது பிற ஆயுதப் படைகள் இவற்றைப் பயன்படுத்துதல் இதில் உள்ளடங்காது)

2. காவல்துறை — இருப்புப்பாதைக் காவல்துறையும் கிராமக் காவல்துறையும் உள்ளடங்கலாக.

3. நீதி ஆள்வணம்: உச்சநீதிமன்றம் உயர்நீதிமன்றம் தவிர்த்த நீதிமன்றங்கள் அனைத்தின் அமைப்பாக்கம், அமைவனம்; உயர்நீதிமன்றத்தின் அலுவலர்கள், ஊழியர்கள்; நிலக்குத்தகை நீதிமன்றம், நிலவரிமான நீதிமன்றங்களில் நெறிமுறை; உச்சநீதிமன்றம் தவிர்த்த நீதிமன்றங்கள் அனைத்திலும் பெறப்படும் கட்டணங்கள்.

4. சிறைச்சாலைகள், சீர்திருத்தக்கூடங்கள், பார்ஸ்டல் பள்ளிகள் இவையொத்த பிற நிறுவனங்கள், அங்கே காவலில் வைக்கப்பட்டிருப்பவர்கள்; சிறைச்சாலைகளையும் மற்ற நிறுவனங்களையும் பயன்படுத்துவது பற்றிப் பிற அரசகங்களுடன் ஏற்பாடுகள்.

5. உள்ளமை ஆட்சியம், அதாவது, நகராட்சிக் கூட்டுருமங்களின் அமைப்பாக்கம் அதிகாரங்கள்; மேம்பாட்டுப் பொறுப்பணங்கள், மாவட்ட வாரியங்கள், சுரங்கத் தொழில்

குடியிருப்பு ஆள்வைகள், மேலும், உள்ளமை தன்னாட்சியம் அல்லது கிராம ஆள்வனம் இவற்றின் குறிப்பாட்டிற்கான பிற உள்ளமை ஆள்வைகள்.

6. பொது நலம் மற்றும் தூய்மை நலம்; மருத்துவ மனைகள், மருந்தகங்கள்.

7. இந்தியாவிற்கு வெளியேயுள்ள நலங்கள் அல்லாத இடங்களுக்குச் செல்லும் யாத்திரைகள்.

8. போதை தரும் மதுபானங்கள் அதாவது, போதை தரும் வடிமங்களின் விளைவாக்கம், செய்வாக்கம், உடைமை, அனுப்புகை, கொள்விணை, விற்பனை.

9. ஊனமுற்றோருக்கும், வேலை ஏலாதவர்க்கும் தீருதவி.

10. புதைத்தலும் இடுகாடுகளும், சுட்டெரித்தலும் சுடு காடுகளும்.

11. நிரைப்பட்டி 1-இன் பதிவங்கள் 63,64,65,66- இவற்றிலும் நிரைப்பட்டி 111-இன் பதிவம் 25-லும் உள்ள வகையங்களுக்கு உட்பட்டுக் கல்வி - பல்கலைக் கழகங்கள் உள்ளடங்கலாக.

12. அரசகத்தின் கட்டாள்கையிலுள்ள அல்லது அதன் நிதியளிக்கப் பெறுகிற நூலகங்கள், அரும் பொருளகங்கள், இன்னும் இவை போன்ற பிற நிறுவனங்கள்: நாட்டின் முக்கியத்துவம் வாய்ந்தவை என நாடாளுமன்றம் இயற்றிய சட்டத்தின் வாயிலாக அல்லது வழியாக அறைவிக்கப்பட்டவை. அல்லாத பிற தொன்மையும் வரலாற்றுச் சிறப்பும் உடைய நினைவுச்சின்னங்கள் பதிவணங்கள்.

13. தொடர்வைகள், அதாவது, சாலைகள், பாலங்கள், படகுப் பயணப்பாதைகள், நிரைப்பட்டி 1-இல் குறித்துரைக்கப்படாத பிற தொடர்வைக் கருவியங்கள்; நகராட்சி டிராம் வண்டிப்பாதை, கம்பிவடப்போக்குகள், உள்நில நீர்வழிகள் குறித்து நிரைப்பட்டி 1, நிரைப்பட்டி 111-இவற்றின் வகையங்

களுக்கு உட்பட்டு உள்நில நீர்வழிகள் அவற்றில் நடைபெறும் போக்குவரவுகள்; பொறிவிசை வண்டிகள் அல்லாத பிற வண்டிகள்.

14. வேளாண்மை - வேளாண்மைக் கல்வி, ஆராய்ச்சி, நோய்ப்பூச்சிகளினின்று காப்பளிப்பு, தாவர நோய்த்தடுப்பு இவை உள்ளடங்கலாக.

15. கால் நடைகளின் நிலைபேணல், காப்பளிப்பு, மேம்பாடு; விலங்கின நோய்கள் தடுப்பு; விலங்கின மருத்துவப் பயிற்சி, விலங்கின மருத்துவப் பயிலாறு.

16. அடைப்புத் தொழுவங்கள், கால்நடை அத்துமீறல் தடையூறு.

17. நீர்–அதாவது, நிரைப்பட்டி I-இன் பதிவம் 56-இன் வகையங்களுக்கு உட்பட்டு நீர் வழங்கீடு, பாசனம், கால்வாய்கள், வடிகால்கள்,அணைகரைகள், நீர்த்தேக்கம், நீர்விசை.

18. நிலம்-அதாவது, நிலத்தில் அல்லது அதன் மீதுள்ள உரிமைகள்,நிலக்கிழாருக்கும் குடியானவருக்கும் உள்ள உறவு, குத்தகை தண்டல் உள்ளடங்கலாக நிலப்பிடிமான முறைகள்; வேளாண்மை நில மாற்றடைவு, வேற்றடைவு; நில மேம்பாடு, வேளாண்மைப் பெறுகடன்கள்; குடியேற்றம்.

19. காடுகள்.

20. வனவிலங்குகள், பறவைகள் இவற்றின் காப்பளிப்பு.

21. மீனளங்கள்.

22. நிரைப்பட்டி I-இன் பதிவம் 34-இன் வகையங்களுக்கு உட்பட்டு, அளியர் காப்பாயங்கள்; வில்லங்கத்திற்கு உட்பட்ட, பற்றுகைக்கு உட்பட்ட சொத்துகள்.

23. ஒன்றியத்தின் கட்டாள்கையின்கீழ் ஒழுங்காற்றம், வளர்மானம் இவை பொறுத்த நிரைப்பட்டி I-இன் வகையங்களுக்கு உட்பட்டு, சுரங்கங்களின் ஒழுங்காற்றம், கனிம வளர்மானம்.

24. நிரைப்பட்டி I (இன் பதிவங்கள் 7, 52 இவற்றின்) வகையங்களுக்கு உட்பட்டு, தொழில்கள்.

25. வளியம், வளியச் செய்மங்கள்.

26. நிரைப்பட்டி III-இன் பதிவம் 33-இன் வகையங்களுக்கு உட்பட்டு, அரசகத்தினுள்ளாக வாணிகம், வர்த்தகம்.

27. நிரைப்பட்டி III-இன் பதிவம் 33-இன் வகையங்களுக்கு உட்பட்டு, சரக்குகளின் விளைவாக்கம், வழங்கீடு, பகிர்மானம்.

28. சந்தைகள், விழச்சந்தைகள்.

29. எடைகள், அளவைகள் - தரநிலைகள் நிறுவுதல் தவிர்த்து.

30. வட்டித்தொழில், வட்டித்தொழிலர்கள் வேளாண்மைக் கடன்சுமைக்கான தீருதவி.

31. சத்திரங்கள், சத்திரங்கள் நடத்துவோர்.

32. நிரைப்பட்டி I-இல் குறித்துரைத்தவையல்லாத பிற கூட்டுருமங்கள், மற்றும் பல்கலைக்கழகங்கள் இவற்றின் கூட்டுருவாக்கம், ஒழுங்காற்றம், இறுவை; கூட்டுருவாக்கப் பெருதவையான வாணிக, இலக்கிய, விஞ்ஞான, சமய இன்னும் பிற சங்கங்கள், கழகங்கள்; கூட்டுறவுச் சங்கங்கள்.

33. நாடக அரங்கங்கள் நாடக நிகழ்ச்சிகள்; நிரைப்பட்டி 1-இன் பதிவம் 60-இன் வகையங்களுக்கு உட்பட்டு, திரையரங்குகள் விளையாட்டுகள், பொழுது போக்குகள், கேளிக்கைகள்.

34. பந்தய ஆட்டம்; சூதாட்டம்.

35. அரசகத்திடம் உற்றடைந்துள்ள, அல்லது அதன் உடைமையிலிருக்கும் செய்மங்கள், நிலங்கள் கட்டடங்கள்.

37. நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டத்தின் வகையங்களுக்கு உட்பட்டு, அரசகத்தின் சட்டமன்றத்திற்கு தேர்தல்கள்.

38. அரசகச் சட்டமன்றத்தின் உறுப்பினர்கள், சட்டப் பேரவையத்தின் தலைவர், துணைத் தலைவர் சட்டமேலவை ஒன்று இருந்தால் அதன் தலைவர் துணைத்தலைவர் இவர்களின் சம்பளங்கள், படிகள்.

39. சட்டப்பேரவையும், அதன் உறுப்பினர்கள், அதன் குழுக்கள், மற்றும் சட்டமேலவையும் ஒன்று இருந்தால் அந்த மேலவையும், அதன் உறுப்பினர்கள், அதன் குழுக்கள் இவர்களின் அதிகாரங்கள் சிறப்புரிமைகள், தனி விலக்குரிமைகள் அரசகச் சட்டமன்றத்தின் குழுக்களின் முன்னிலையில் சான்றுரைப்பதற்காகவோ, ஆவனங்களை முன்னிடுவதற்காகவோ நபர்களின் வருதரவைச் செல்லுறுத்தல்.

40. அரசகத்து அமைச்சர்களின் சம்பளங்கள், படிகள்.

41. அரசகத்தின் பொதும ஊழியங்கள், அரசகப் பொதும ஊழிய ஆணையம்.

42. அரசக ஒய்வூதியங்கள்-அதாவது, அரசகம் கொடுக்கக்கூடிய அல்லது அரசகத்தின் திரள்நிதியத்திலிருந்து கொடுக்கக்கூடிய ஒய்வூதியங்கள்.

43. அரசகத்தின் பொதுமப் படுகடன்:

44. புதையற் பொருள்.

45. நிலவரிமானம்—வரிமானம் கணித்திடுதலும், வசூலித்தலும் உள்ளடங்கலாக. நிலப்பதிவணங்களைப் பேணிக்காத்தல், வரிமானப் பொருட்பாடுகளுக்கான அளவாய்வு: உரிமைகளின் பதிவனங்கள், வரிமானங்களை வேற்றடைவு செய்தல்.

46. வேளாண்மை வருமானத்தின்மீது வரிகள்.

47. வேளாண்மை நிலத்திற்கு இறங்குரிமை பொறுத்துத் தீர்வைகள்.

48. வேளாண்மை நிலம் பொறுத்த இறங்கு சொத்துத் தீர்வை.

49. நிலங்கள், கட்டடங்கள் இவற்றின்மீது வரிகள்.

50. கனிமவளர்மானம் தொடர்பாக நாடாளுமன்றம் சட்டத்தின் வாயிலாக விதிக்கும் வரம்பீடுகள் எவற்றுக்கும் உட்பட்டு கனிம உரிமைகளின்மீது வரிகள்.

51. அரசகத்தினுள் செய்வாக்கப்படும் அல்லது விளைவாக்கப்படும் பின்வரும் சரக்குகளின்மீது ஆயத்தீர்வைகள் மற்றும் இந்தியாவில் வேறெங்கேனும் செய்வாக்கப்படும் அல்லது விளைவாக்கப்படும் அவை போன்ற சரக்குகளின்மீது அதே விகிதங்களின்படி அல்லது குறைந்த விகிதங்களின்படி எதிரிணைத் தீர்வைகள்:—

(க) மனிதர் துய்மானத்திற்கான வெறிய வடிமங்கள்.

(ங) அபினி, கஞ்சா, பிற மயக்கப் போதை தரும் மருந்துகள், மயக்கப் போதைப் பொருள்கள்.

ஆனால் வெளியம் அல்லது இந்தப் பதிவத்தில் உள்பத்தி (ங)-இல் கண்டுள்ள பொருள் ஏதேனும் அடங்கிய மருந்து வகை ஒப்பனை வகைத் தயாரிப்புகள் நீங்கலாக.

52. துய்மானத்திற்கோ, பயல்பாட்டிற்கோ விற்பனைக்கோ சரக்குகள் உள்ளமை வரையிடத்துக்குள் வந்து புகுநிலையில் வரிகள்.

53. மின்சாரத்தின் துய்மானம் அல்லது விற்பனையின் மீது வரிகள்.

54. (நிரைப்பட்டி 1-ன் பதிவம் 92-இன் வகையங்களுக்கு உட்பட்டு, செய்தித்தாள்கள் அல்லாதனவான, பிற சரக்குகளின் விற்பனை அல்லது கொள்விணைமீது வரிகள்)

55. செய்தித்தாள்களில் வெளியிடப்படும் விளம்பரங்கள் அல்லாத பிற விளம்பரங்கள்மீது வரிகள்.

56. சாலை அல்லது உள்நிலை நீர்வழிகள் வழியாகக் கொண்டு செல்லப்படும் சரக்குகள், பயணிகள்மீது வரிகள்.

57. நிரைப்பட்டி 111-இன் பதிவம் 35-இன் வகையங்களுக்கு உட்பட்டு, பொறிவிசையினால் இயக்கப்படுபவையானாலும் அல்லாதவையானாலும் சாலைவழி செல்லப் பயன்படுத்துவதற்கு உகந்த டிராம் வண்டிகள் உள்ளடங்கலான வண்டிகள்மீது வரிகள்.

58. விலங்குகள், படகுகள் இவற்றின்மீது வரிகள்,

59. சுங்கங்கள்.

60. தேர்தொழில்கள், வாணிகத்தொழில்கள், ஏற்புத்தொழில்கள், வேலையமைவுகள்மீது வரிகள்.

61. தலைவரிகள்.

62. கேளிக்கைகள், களிப்பூட்டங்கள், பந்தய ஆட்டம் சூதாட்டம் உள்ளடங்கலாக, சொகுசுகள்மீது வரிகள்.

63. முத்திரைத் தீர்வை வீதங்கள் பற்றி நிரைப்பட்டி 1-இன் வகையங்களில் குறித்துரைத்துள்ளவை தவிர்த்த பிற ஆவணங்கள் பொறுத்து முத்திரைத் தீர்வை வீதங்கள்.

64. இந்த நிரைப்பட்டியில் உள்ள பொருளங்களில் ஏதொன்றையும் பொறுத்துள்ள சட்டங்களுக்கு எதிரான குற்றச் செயல்கள்.

65. இந்த நிரைப்பட்டியில் உள்ள பொருளங்களில் எது பொறுத்தும் உச்சநீதிமன்றம் தவிர்த்த அனைத்து நீதிமன்றங்களின் ஆள்வரை, அதிகாரங்கள்.

66. இந்த நிரைப்பட்டியில் உள்ள பொருளங்களில் எது பொறுத்தமுள்ள; ஆனால் நீதிமன்றம் எதிலும் பெறப்படும் கட்டணங்கள் நீங்கலான. கட்டணங்கள்.

# இரண்டு அரசுகளுக்குமான பொதுப்பட்டியல்
## (Concurrent List)

1. குற்றவியல் சட்டம்-இந்த அரசமைப்பின் துவக்க நிலையில் இந்தியத் தண்டனைச் சட்டாரத்தில் உள்ளடங்கியிருந்த எல்லாப் பொருளங்களும் உள்ளடங்கலாக, ஆனால் நிரைப்பட்டி I அல்லது நிரைப்பட்டி II - இல் குறித்துரைத்துள்ள பொருளங்களில் எதையும் பொறுத்த சட்டங்களுக்கு எதிரான குற்றச் செயல்கள், மற்றும் குடிவாய் அதிகாரத்துக்கு உதவுவதாக ஒன்றியத்தின் கடற்படைகளை, இராணுவப் படைகளை அல்லது வான் படைகளை அல்லது ஏதேனும் பிற ஆயுதப் படைகளைப் பயன்படுத்தல் நீங்கலாக.

2. குற்றவியல் நெறிமுறை — இந்த அரசமைப்பின் துவக்க நிலையில் குற்றவியல் நெறிமுறைச் சட்டாரத்தில் உள்ளடங்கியிருந்த எல்லாப் பொருளங்களும் உள்ளடங்கலாக.

3. ஓர் அரசகத்தின் காப்புறுதி, பொதும ஒழுங்கமைதி பேணிக் காத்தல் அல்லது குமுவனத்திற்கு இன்றியமையாத வழங்கீடுகளையும் ஊழியங்களையும் பேணிக்காத்தல் இவற்றுடன் இணைவுடைய காரணங்களுக்காகத் தடுப்புக் காவல்; அத்தகைய காவலுக்கு உட்படுத்தப்பட்டவர்கள்.

4. கைதிகள், குற்றம் காட்டுறுத்தப்பட்டவர்கள், இந்த நிரைப்பட்டியின் பதிவம் 3-ல் குறித்துரைத்துள்ள காரணங்

களுக்காகத் தடுப்புக் காவலுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் ஆகியோரை ஓர் அரசகத்திலிருந்து மற்றோர் அரசகத்திற்கு இடமாற்றம் செய்தல்.

5. திருமணம், மணமுறிவு, குழந்தைகள், இளவல்கள், தகவேற்பு, விருப்புறுதிப் பத்திரங்கள், விருப்புறுதி அற்றநிலை இறங்குரிமை, கட்டுக் குடும்பம், பாகப் பிரிவினை, இந்த அரசமைப்பின் துவக்கநிலையை ஒட்டி முன்பு நீதிமன்ற நடவடிக்கைகளில் கட்சிக்காரர்கள் இனமுறைச் சட்டத்துக்கு உட்பட்டிருந்த அனைத்துப் பொருளங்கள்.

6. வேளாண்மை நிலம் அல்லாத பிற சொத்தின் மாற்றடைவு, ஒப்பாவணங்கள், ஆவணங்கள் இவற்றின் பதிவு.

7. ஒப்பந்தங்கள்—கூட்டாண்மை, முகமை. பொருள்களை ஏற்றிச் செல்வதற்கான ஒப்பந்தங்கள், பிற தனி வகையான ஒப்பந்தங்கள் உள்ளடங்கலாக; ஆனால், வேளாண்மை நிலம் தொடர்பான ஒப்பந்தங்கள் நீங்கலாக.

8. வழங்குத் தொடர்தகு தீங்குகள்.

9. பொருள் அறவுநிலை, நொடிப்பு நிலை.

10. பொறுப்பணம், பொதுப்பணர்கள்.

11. ஆள்வணர் நாயகங்கள், ஆள்வகப் பொறுப்பணர்கள்.

12. சான்று மற்றும் ஆணையுறுதிகள், சட்டங்கள், பொதுமச் செயல்கள். பொதுமப் பதிவணங்கள், நீதிமன்ற நடவடிக்கைகள் இவற்றின் தகவேற்பு.

13. உரிமை இயல் நெறிமுறைகள்-இந்த அரசமைப்பின் துவக்க நிலையில் உரிமை இயல் நெறிமுறைச் சட்டாரத்தில் உள்ளடங்கியிருந்த எல்லாப் பொருளங்களும் உள்ளடங்கலாக, காலவரம்பீடு, இசைவுத் தீர்ப்புமுறை.

14. நீதிமன்ற அவமதிப்பு—ஆனல், உச்சநீதிமன்ற அவமதிப்பு நீங்கலாக.

15. சோம்பித்திரிவு, நாடோடியான மற்றும் புலம் பெயர்வான பழங்குடிகள்.

16. பித்துநிலை, சித்த நலக்கேடு—பித்தர்களையும் சித்த நலக் கேடுற்றவர்களையும் ஏற்றுத் தங்கவைப்பதற்கோ, அவர்களுக்குப் பண்டுவம் செய்வதற்கோ ஆன இடங்கள் உள்ளடங்கலாக.

17. விலங்குகள் கொடுமைப்பாடு தடையூறு செய்தல்.

18. உணவுப் பொருள்களிலும், பிற சரக்குகளிலும் கலப்படம்.

19. அபினி பொறுத்து நிரைப்பட்டி 1-இன் பதிவம் 59-இன் வகையங்களுக்கு உட்பட்டு, மருந்துச் சரக்குகள். நச்சுப் பொருள்கள்.

20. பொருளியல். சமுதாயத் திட்ட அமைப்பு.

21. வாணிக, தொழில்துறை ஒரு தனியுரிமைகள், கூட்டுவணங்கள் பொதுப்பணங்கள்.

22. தொழிற்சங்கங்கள். தொழில்துறைப் பூசல்கள், தொழிலாளர் பூசல்கள்.

23. சமுதாயக் காப்புறுதி, சமுதாயக் காப்பீடு, வேலை யமைவு வேலையில்லாமை.

24. தொழிலாளர்நலம்—வேலை நிலவரங்கள், காப்புநல நிதிகள், வேலை முதல்வர்களின் உடம்பாடு, உழைப்பாளி களுக்குச் சரியீடு. ஏலாநிலையர் முதியோர் ஓய்வூதியங்கள், தாய்மைக்கால நலனடைவு இவை உள்ளடங்கலாக.

25. தொழிலாளருக்கு வேலைமுறைப் பயிற்சி தொழில் நுட்பப் பயிற்சி.

26 சட்ட, மருத்துவ இன்னும் பிற தேர்தொழில்கள்.

27. இந்தியா, பாகிஸ்தான் ஆகிய டொமீனியன்களை நிலை நிறுவுதல் காரணமாய்த் தங்களுடைய மூலக் குடியிருப்பு இடத்திலிருந்து வெளியேற்றப்பட்டவர்களுக்குத் சீருதவி மறுவாழ்விப்பு.

28. அறநலங்கள், அறநல நிறுவனங்கள், அறநல சமய நிலைக்கட்டளைகள், சமய நிறுவனங்கள்.

29. மனிதரையோ, விலங்குகளையோ, தாவரங்களையோ பற்றுறுத்துவதாகும் தொற்றுநோய்களும், ஒட்டுநோய்களும் நோய்ப்பூச்சிகளும் ஓர் அரசகத்திலிருந்து மற்ருென்றிற்குப் பரவாமல் தடையூறு செய்தல்.

30. வாழ்க்கைப் புள்ளிவிவரங்கள் - பிறப்பு இறப்புப் பதிவணம் உள்ளடங்கலாக.

31. நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டம், நிலவுறு சட்டத்தின் வாயிலாகவோ வழியாகவோ பெருந் துறை முகங்கள் என்று அறைவிக்கப்பட்டவை அல்லாத பிற துறைமுகங்கள்.

32. பொறிவிசைக் கலங்கள் பற்றியதாக உள்நில நீர்வழிகளில் கலத்துறையம், நாவாய்ச் செலுத்தம், அத்தகைய நீர்வழிகளுக்கான பாதை விதிகள், நாட்டின் நீர்வழிகள் பொறுத்த நிரைப்பட்டி 1-ன் வகையங்களுக்கு உட்பட்டு உள்நில நீர்வழிகளில் பயணிகளையும் சரக்குகளையும் ஏற்றிச் செல்லுதல்.

33. கீழ்க்கண்டவற்றின் வாணிகம் வர்த்தகம் விளைவாக்கம், வழங்கீடு, பகிர்மானம் :—

(க) ஒன்றியத்தின் கட்டாள்கையிலிருப்பது பொதும நலன் பொருட்டுச் சூழ்தகவானதென நாடாளு மன்றத்தினல் சட்டத்தின் வாயிலாக அறைவிக்கப்

பட்டுள்ள தொழிலின் விளைவாக்கப் பொருள்கள், அதே வகையான இறக்குமதி சரக்குகள்.

(ங) உணவுப் பொருள்-உண்தகு எண்ணெய் வித்துகளும், எண்ணெய்களும் உள்ளடங்கலாக.

(ச) கால்நடைத் தீவனம்-பிண்ணாக்குகளும், பிற செறிமங்களும் உள்ளடங்கலாக.

(ஞ) கொட்டை நீக்கப்பட்ட, அல்லது நீக்கப்படாத கச்சாப் பருத்தி, பருத்தி விதை.

(ட) கச்சாச் சணல்.

34. விலைக்கட்டுப்பாடு.

35. பொறிவிசை வண்டிகள் - அத்தகைய வண்டிகள் மீது வரிகள் இருப்பதற்கான கோள்வுகள் உள்ளடங்கலாக.

36. தொழிற்சாலைகள்.

37. கொதிகலங்கள்.

38. மின்சாரம்.

39. செய்தித்தாள்கள், புத்தகங்கள், அச்சுக்கூடங்கள்.

40. நாட்டின் முக்கியத்துவம் வாய்ந்தவை என நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட 3 (சட்டத்தின் வாயிலாக அல்லது வழியாக அறைவிக்கப்பட்டவை) தவிர்த்த பிற தொல்பொருள் நிலையிடங்கள், சிதைவுகள்.

41. நாடகன்றோர் சொத்து என்று சட்டத்தின் வாயிலாக அறைவிக்கப்பட்ட (வேளாண்மை நிலம் உள்ளடங்கலான) சொத்தின் கையடைவு, மேலாள்கை, அயலடைவு.

42. சொத்தின் கொண்டடைவு, சொத்திற்காக வேண்டாணை இடுதல்,

43. வரிகள் பிற பொதுமக் கோரிக்கைகள் இவை பொறுத்த கோருரிமைத் தொகைகளை அரசகம் வசூலித்தல்

அரசகத்திற்கு வெளியிடத்தில் எழும் நில வரிமான நிலுவைகளும், அத்தகைய நிலுவைகளாக வசூலிக்கத் தக்க தொகைகளும் உள்ளடங்கலாக.

44. நீதித்துறை முத்திரைத் தாள்கள் வாயிலாகத் தண்டுதல் செய்யப்படும் தீர்வைகள் அல்லது கட்டணங்கள் அல்லாத பிற முத்திரைத் தீர்வைகள், ஆனால், அம்முத்திரைத் தீர்வை விகிதங்கள் உள்ளடங்கா.

45. நிரைப்பட்டி 11 அல்லது நிரைப்பட்டி 111-இல் குறித்துரைத்துள்ள பொருளங்களில் ஒன்றன் பொருட்பாடுகளுக்கான விசாரணைகள், புள்ளிவிவரங்கள்.

46. இந்த நிரைப்பட்டியிலுள்ள பொருளங்களில் எதையும் பொறுத்த உச்சநீதிமன்றம் தவிர்த்த பிற அனைத்து நீதிமன்றங்களின் ஆள்வரை அதிகாரங்கள்.

47. இந்த நிரைப்பட்டியில் உள்ள பொருளங்களில் எதையும் பொறுத்த கட்டணங்கள், ஆனால் நீதிமன்றத்தில் பெறப்படும் கட்டணங்கள் நீங்கலாக.

★

OLYMPIC® MS-1, Ph: 20652